Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 +24 | விலை 40 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :259 ஆடி 31ஆம் நாள் சனிக்கிழமை 15 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## முகாமைத்துவ பீட புதிய பீடாதிபதியாக பேராசிரியர் நிமலதாசன்



யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வணிக, முகாமைத்துவ பீடத்தின் 13 ▶

# முன்னணிக்குள் முரண்பாடு மணிவண்ணன் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15

நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸாகப் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவி நிலைகளிலிருந்து, விஸ்வலிங்கம் மணிவண்ணன் அதிரடியாகத் தூக்கி எறியப்பட்டுள்ளார். 14 ▶



## தடைகளைத் தகர்த்து எரிந்தன செஞ்சுடர்கள்

### 5 இடங்களில் நேற்று செஞ்சோலை நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஓக. 15
சிறிலங்கா வான் படையின் விமானக் குண்டு வீச்சில் துடிதுடித்து உயிரிழந்த மாணவிகள் உள்ளிட்டோரின் நினைவேந்தல் நிகழ்வுக்கு, பொலிஸார் தடை விதித்திருந்த நிலையில், அவற்றைத் தகர்த்தெறிந்து பெரும் உணர்ச்சிப் பிரவாகத்துடன் 5 12 ▶

வடக்கில் வர்த்தக நிலையங்களை

## இரவு 10 மணிவரை இனிமேல் திறக்கலாம்

*போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு*

யாழ்ப்பாணம், ஓக. 15
வடக்கு மாகாணத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக இரவு பத்து மணிவரையில் திறக்க முடியும். அதற்குரிய வகையில் உரிய போக்குவரத்து 11 ▶

## முகாமிருந்த பகுதியிலிருந்து மனித எச்சங்கள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ்ப்பாணம், பண்ணை, மீனாட்சி புரத்தில் உள்ள தனியார் காணியிலிருந்து மனித எலும்பு எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.
கட்டுமானப் 11 ▶



"பெல்லில்லை பிரேக் இல்லை. அடிபட்டா பல்லில்லை"...!

## பிரிந்து வாக்குக் கேட்ட எங்களுக்கு தண்டனை

### மக்கள் வழங்கியுள்ளார்கள் என்கிறார் செல்வம்

புதுக்குடியிருப்பு, ஓக. 15
தேர்தலில் நாங்கள் பிரிந்துநின்று மக்களிடம் வாக்குக் கேட்டோம். மக்கள் சரியான தண்டனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏனைய 14 ▶

## தமிழர்களின் சுதந்திரத்தை பறிக்கின்றது கோத்தா அரசு

### சந்திரிகா, மங்கள சாடல்

கொழும்பு, ஓக. 15
கடந்த ஆட்சியில் இருந்த அனைத்துச் சுதந்திரங்களையும் கோத்தா அரசு தட்டிப்பறிக்கின்றது. அதுவும் முதலில் தமிழ் மக்களைக் குறிவைத்து தமது பழிவாங்கல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இதை 14 ▶

## முதுபெரும் பாடகரான எஸ்.பி.பி கவலைக்கிடம்

சென்னை, ஓக. 15
தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத சக்தியாகத் திகழ்ந்தவரான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், 14 ▶



## இளைஞர்கள் மீது படையினர் தாக்கு!

மன்னார், ஓக. 15
மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராமத்தில் உயிரிழந்தவரின் சடலம் தகனக் கிரியைகளுக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது, பள்ளமடு சந்தியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்கு 11 ▶

## 11/2 லட்சம் பேருக்கு வேலை செப். 2ஆம் திகதி ஆரம்பம்

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு*

கொழும்பு, ஓக. 15
தேர்தலால் இடைநிறுத்தப்பட்டிருந்த ஒன்றரை லட்சம் பேருக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டம் உடனடியாக செயற்படுத்தப்படவுள்ளது. 50 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் தொழிலற்ற 14 ▶

## பூர்வீக நிலத்தை மீட்க முல்லையில் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 15
முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில், கனிய வளத் திணைக்களம், கடற்படையினர் மற்றும், தென்னிலங்கையிலிருந்து தொழிலுக்காக வந்த சிங்கள மக்கள் எனப் பல தரப்பினராலும், அபகரிக் 14 ▶



## பொலிஸ் அதிகாரத்தை வடக்குக்கு வழங்கோம்

### மாகாண சபை இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, ஓக. 15
வடக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க எந்த வகையிலும் இடமளிக்கப் போவதில்லை என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க 14 ▶

## தேசியப் பட்டியல் சர்ச்சை இன்று ஆராயப்படாது?

யாழ்ப்பாணம், ஓக. 15
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியற் செயற் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், தேசியப் பட்டியல் சர்ச்சை தொடர்பில் ஆராயப்படாது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 14 ▶

## கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எனது தன்னிச்சையான முடிவல்ல

*சலாப்புகிறார் துரைராசசிங்கம்*

(விரிவு - பக். 09)

உள்ளே

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சஜித்தை பலவீனமானவராக காட்டுவதற்கு அரசு முயற்சி!!

## தேசிய பட்டியல் தொடர்பில் மனோ கணேசன்



**கொழும்பு, ஓகஸ்ட் 15**
**இந்த நாட்டில் இன்று ஒப்பீட்டளவில் அனைத்து இனங்களையும் அணைத்துச் செல்லும் ஒரே சிங்களத் தலைவராக இருக்கும் சஜித் பிரமதாசவை, சிங்கள மக்கள் மத்தியில், இன்னொரு ரணில் விக்கிரமசிங்கவாக, பலவீனமானவராகக் காட்ட முயலும் அரசின் சதி முயற்சிகளுக்கு எம்மால் ஒருபோதும் துணைபோக முடியாது - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன்.**

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தேசிய பட்டியலில் ஒரு ஆசனத்தை பெறுவது மட்டும்தான் எங்கள் இறுதி இலக்கு அல்ல. அதை பெறாதது எங்கள் பலவீனமும் அல்ல. அது எங்கள் இயலாமையும் அல்ல. இது தொடர்பாக நாம் எடுத்த முடிவு வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவாகும்.

இந்த நாட்டில் இன்று ஒப்பீட்டளவில், அனைத்து இனங்களையும் அணைத்து செல்லும் ஒரே சிங்கள தலைவராக இருக்கும் சஜித் பிரமதாசவை, சிங்கள மக்கள் மத்தியில், இன்னொரு ரணில் விக்கிரமசிங்கவாக, பலவீனமானவராகக் காட்ட முயலும் அரசின் சதி முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் துணைபோக முடியாது. சிறுபான்மை தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்கள், சஜித் பிரேமதாசவை சுவரில் சாய்த்து, பயமுறுத்தி காரியம் செய்து கொள்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தை இந்த நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த அரச ஊடகங்கள் மற்றும் அரசு சார்பு தனியார் ஊடகங்கள் பெரும் முயற்சி எடுத்தன. இப்படி சொல்லியே ரணில்விக்கிரமசிங்கவை இந்த அரசாங்க கட்சி அணி, அரசு சார்பு பௌத்த பிக்குகள் அணி என்பவை அழித்தன. ஆகவே சஜித் பிரேமதாசவையும், இன்னொரு ரணில் விக்கிரமசிங்கவாகவும், பலவீனமான தலைவராகவும் சித்தரித்து, ஆரம்பத்திலேயே அழித்துவிட இந்த அரசாங்கம் மிகப்பெரும் முயற்சி எடுத்தது. இவற்றை நாம் உணர்ந்தோம்.

இந்த தொலைநோக்கு பார்வையினாலேயே, தமிழ் முற்போக்கு கூட்டணி, தேசிய பட்டியல் தொடர்பில் நிதானமாக நெகிழ்வு தன்மையுடன் முடிவெடுத்தது. நாங்களே உருவாக்கிய ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணியை நாமே சிதைக்கக் கூடாது என நாம் முடிவு செய்தோம். இந்நாட்டில் இன்று ஒப்பீட்டளவில், அனைத்து இனங்களையும் அணைத்து செல்லும் ஒரேயொரு சிங்கள தலைவராக இருக்கும் சஜித் பிரமதாசவையும், ரணில் விக்கிரமசிங்கவை போன்று சிங்கள மக்கள் மத்தியில் பலவீனமானவராகக் காட்டும் அரசின் சதி முயற்சிகளுக்கு எம்மால் துணைபோக முடியாது - என்றார். (ம)

# தலைமையைத் தக்கவைக்க ரணில் விக்கிரமசிங்க வியூகம்



கொழும்பு, ஓக. 15
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியில் உடனடி மாற்றம் ஏற்படாது எனவும், விரிவான கலந்துரையாடல்களின் பின்னரே புதிய தலைவர் நியமிக்கப்படுவார் எனவும் அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இதன்படி இவ்வருடம் டிசெம்பர் வரை தலைமைப்பதவியில் ரணில் விக்கிரமசிங்க நீடிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2021ஆம் ஆண்டிலேயே கட்சி சம்மேளனம் கூட்டப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன்போது கட்சியின் அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக பொதுத்தேர்தலில் கட்சிக்கு படுதோல்வி ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இதனையடுத்து கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. அவ்வேளையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இளம் தலைவரொருவர் அவசியம் என்பதே மக்களின் நிலைப்பாடு என்ற கருத்து சிரேஷ்ட உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி தலைமைப்பதவியை எதிர்ப்பார்க்கும் அனைவருக்கும் அது தொடர்பில் கோரிக்கையை முன்வைப்பதற்கும், அவர்கள் தொடர்பில் மக்களின் அபிப்ராயங்களை அறிந்து, அவர்களில் சிலரை தெரிவுசெய்து, முதற்கட்டமாக கட்சியில் பொறுப்புகள் ஒப்படைக்கப்படும். அதனை எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுக்கின்றனர் என்பது உட்பட மேலும் சில காரணிகளைக்கருத்திற்கொண்டு தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் தலைவர் பதவிக்கு தெரிவுசெய்யப்படுவார் என செயற்குழு கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (ம-44)

# சடலத்தை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், ஓக.15
நெடுந்தீவு ஆறாம் வட்டாரத்தில் உள்ள சீக்கிரியாம் பள்ளம் என்னும் இடத்தில் உள்ள பாழடைந்த வீட்டில் மீட்கப்பட்ட ஆணொருவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் உரியவர்கள் சடலத்தை பொறுப்பேற்கும்படி மருத்துவமனையின் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெயர் விவரங்கள் அறியப்படாத அந்தச் சடலத்தை எதிர்வரும் 15 நாள்களுக்குள் உரியவர்கள் பொறுப்பேற்க முன்வர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# 17ஆம் திகதி முதல் பல்கலைகள் திறப்பு

கொழும்பு, ஓக. 15
நாட்டில் உள்ள சகல பல்கலைக் கழகங்களையும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் மீளத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக பல்கலைக் கழகங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், பரீட்சைகளின் நிமித்தம் பல்கலைக் கழகங்களை கட்டம் கட்டமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இனங்காணப்படாத பெண்ணின் சடலம்

மன்னார், ஓக. 15
மன்னாரில் பலத்த காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட சடலம் யாரென நேற்று நள்ளிரவு வரையில் அடையாளம் காணப்படவில்லை.

மன்னார் உப்பளத்திற்கு சொந்தமான உப்பு உற்பத்திப் பாத்தியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டது. பெண் தரையில் இழுத்துச் செல்லப்பட்ட தடயங்கள் மீட்கப்பட்டதுடன் சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு மிக அருகில் ஆணின் காலணிகளும் மீட்கப்பட்டன. இது திட்டமிடப்பட்ட கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் உயிரிழந்தவர் யார் என்று நேற்று நள்ளிரவு வரையில் அடையாளம் காணப்படவில்லை. (ம-56)

# மேலும் நால்வருக்கு கொரோனாத் தொற்று

யாழ்பாணம், ஓக.15
முழங்காவில் தனிமைப்படுத்தல் மையம், கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் மையம் ஆகியவற்றைச் சேர்ந்த நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் 120 பேருக்கான பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 98 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர்களில் மூவருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த மேலும் ஒருவருக்கும் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-19)

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சகலரும் நிச்சயம் தண்டிக்கப்படுவர்!

## நீதி அமைச்சர் அலி சப்ரி உறுதி

கொழும்பு, ஓக. 15
நாட்டில் நீதித்துறை அமைச்சராக நான் பதவியேற்றிருப்பது குறித்தவொரு சமூகத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அல்ல என்று தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புபட்டுள்ள இறுதிக்குற்றவாளிவரை அனைவருக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நீதித்துறை அமைச்சராக நான் பதவியேற்றிருப்பது குறித்தவொரு சமூகத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்து வதற்கு அல்ல. நாட்டுக்காகவே நாம் நியமிக்கப்பட்டிருக்கின்றோம். நாட்டுக்கு எதிராகவோ அல்லது நாட்டில் நிலவுகின்ற அமைதிக்கு எதிராகவோ எந்தத் தவறும் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் மற்றும் பௌத்த மக்கள் ஒன்றிணைய முன்வரும்போது சிலர் அந்த ஒற்றுமையைச் சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். சமூக வலைத்தளங்களில் அநாவசியமான கருத்துக்கள்முன்வைக்கப்படுகின்றன.

முஸ்லிம் சமூகத்திற்குள் அடிப்படை உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுடன் தொடர்புபட்டிருந்தால் அதன் இறுதி குற்றவாளிவரை சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார். (ம)

# அரசியல் தீர்வைப் பெற பொதுத் திட்டம் தேவை

## தமிழ் அரசியல் கட்சிகளுக்கு சிறிதுங்க ஜயசூரிய அறிவுரை




கொழும்பு, ஓக. 15

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்காகவேனும், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பொதுவானதொரு வேலைத் திட்டத்தை ஒருமித்த நிலைப்பாட்டுடன் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாது கருத்துமோதலில் ஈடுபட்டால் அது கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துவிடும். இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றும் இல்லை. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே ராஜபக்ச அரசு உள்ளது. அது மட்டுமல்ல சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை முன்னிலைப்படுத்தி, சிறுபான்மை மக்களைப் புறக்கணிக்கும் வகையில் அரசின் பயணம் அமையும் அபாயம் இருக்கின்றது.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வலியுறுத்திப் பொதுவானதொரு வேலைத் திட்டத்தைத் தமிழ் அரசியல் கட்சிகள் முன்னெடுக்க வேண்டும். கூட்டணியாக இணைந்து பயணிக்குமாறு நான் கூறவில்லை. ஆனால் தீர்வுத் திட்ட விடயத்தில் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்துக் குழப்பாமல், ஒருமித்த நிலைப்பாட்டுடன் பொதுவானதொரு திட்டத்தை முன்னெடுக்கலாம் என்ற ஆலோசனையை முன்வைக்கின்றேன்.

ஒவ்வொரு கட்சிகளும் வெவ்வேறான நிலைப்பாட்டில் கருத்துக்களை முன்வைத்தால் தீர்வை நோக்கிய பயணம் திசை மாறும். காலத்தை இழுத்தடிப்பதற்கு ராஜபக்ச தரப்புக்குக் களம் அமைத்துக் கொடுப்பதாகவும் அமைந்துவிடும். தீர்வைப் பெறுவதற்காகவேனும் பொதுவானதொரு வேலைத் திட்டத்துக்கு வருமாறு தீர்வுத் திட்டத்துக்காகப் பல ஆண்டுகள் குரல் கொடுப்பவன் என்ற ரீதியில் அழைப்பு விடுகின்றேன். அதேவேளை, பெரும்பான்மைப்பலம் இருந்தாலும் இந்த அரசை நாம் இருக்கும்வரையில்துள்ளவிடமாட்டோம். என்றார். (எ-44)

# தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படல்வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஓக.15

**நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பகையை வளர்த்துக்கொள்ளாமல் பண்பினால் ஒன்றுபட்டு எந்த மக்கள் வாக்களித்தார்களோ அந்த மக்களுக்கு ஒற்றுமையாகச் சேவை செய்வதற்கு முன்வரவேண்டும் என்று அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவரும் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக மக்களுக்கு உதவுகின்ற நற்பணிக்காக ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்று மிகவும் அன்பாக பொதுமக்கள் சார்பில் வேண்டுகின்றேன். குறிப்பாக பழைய பகைமைகளை வளர்த்துக்கொள்வதால் பயனில்லை. இன்று மக்கள் நன்மை கருதி எதிர்கால நல்விருத்தி கருதி ஒன்றுபட்டு செயற்படவேண்டிய தேவை எமக்கு உணர்த்தப்பட்டுள்ளது. எனவே பகையை வளர்த்துக்கொள்ளாமல் பண்பினால் ஒன்றுபட்டு எந்த மக்கள் வாக்களித்தார்களோ அந்த மக்களுக்கு சேவை செய்வதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

நான் பெரியவன் நீ பெரியவன் என்று பேதமை கொள்ளாமல் மக்களின் நன்மை கருதி ஒன்றுபட்டு நல்ல கருத்துக்களை பகிர்ந்து அரசுடன் சிறந்த பேச்சுக்களை ஜதார்த்தத்துக்குப் பொருத்தமான செயல்களைச் செய்வது அனைவரின் கடமையாகும் என்றுள்ளது. (ம)

# 85 அரச நிறுவனங்களை இயக்கும் தெம்புள்ளதா?

## மஹிந்தவிடம் கேட்கிறார் மயந்த

70 வயதைக் கடந்துள்ள மஹிந்த ராஜபக்சவின் கீழ் 85 அரச நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. முதியவர் ஒருவரால் எவ்வாறு அவற்றை வினைத்திறன்மிக்கதாக இயக்க முடியும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதியால் அமைச்சுப் பதவி வகிக்க முடியாது. அப்படியிருந்தும் அரசமைப்பை மீறும் வகையில் பாதுகாப்பு அமைச்சை அவர் தன்வசம் வைத்துள்ளார். மஹிந்த ராஜபக்சவுக்கு 74 வயதாகின்றது. அவரின்கீழ் 85க்கும் மேற்பட்ட அரச நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கலாசாரம் உட்பட சில அமைச்சுக்களும் அவரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவரால் எவ்வாறு சுறுசுறுப்பாக இயங்க முடியும்? என்ற வினா எழுகின்றது - என்றார். (எ-44)

# எம்மை எவராலும் அடக்க முடியாது

## சிவாஜி. ஆவேசம்

யாழ்ப்பாணம், ஓக. 15

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகப் போராடும் எம்மீது அடக்குமுறைகளை வழங்கினால் அவர்கள் வழங்கும் அடக்குமுறைகளுக்கு அதே பாணியில் பதில் சொல்லத் தயங்க மாட்டோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆவேசமாகத் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, செஞ்சோலை நினைவேந்தல் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கே இவ்வாறு அவர் பதிலளித்தார்.

சிவாஜி மேலும் தெரிவித்ததாவது:

61 உயிர்களை காவு கொண்ட செஞ்சோலை படுகொலை தினமானது இன்று (நேற்று) கிளிநொச்சியில் செஞ்சோலை முகவாயிலில் அனுஷ்டிக்கப்பட இருந்த நிலையில் பாதுகாப்புத் தரப்பினர்கள் அதனை தடுக்கும் முகமாக அச்சுறுத்தல் விடும் பாணியில் நடந்து கொண்டார்கள். நானும் எனது குழுவினரும் குறித்த அஞ்சலி செலுத்துவதற்காக சென்றிருந்த சமயம் பொலிஸார் எம்மை குறித்த இடத்தில் நிகழ்வு நடத்த முடியாது எனவும் இது தமக்கு மேலிடத்து உத்தரவு எனவும் கூறி எமது நிகழ்வைத் தடுப்பதற்குப் பல்வேறு அச்சுறுத்தல்களை விடுத்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் விமான குண்டுவீச்சு தாக்குதலில் உயிரிழந்த எமது உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தவே நாம் இங்கு வந்தோம். எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதை எந்த மேலிடத்தாலும் தடுக்க முடியாது. எத்தகைய சவால் வந்தாலும் எமது காரியத்தை முடிப்போம் எனக்கூறி நமது அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்தோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சியில் உள்ள நிலையில், தமிழ் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளநிலையில், கட்சி பேதங்களுக்கு அப்பால் தமிழ் மக்களுடைய பொதுவான பிரச்சனைகளுக்காக ஒருமித்து குரல் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது - என்றார். (ம-159)

# சுமந்திரனின் 16 எஸ்.ரி.எவ் வீரர்களுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

## தமிழ் அரசு கட்சி உறுப்பினரும், முன்னாள் போராளியும் நடவடிக்கை

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கான பாதுகாப்பு கடமையில் ஈடுபடுகின்ற 16 விசேட அதிரப்படையினருக்கும் எதிராக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன், தற்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினராக அங்கம் வகிக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி தனுபன் ஆகியோரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

தேர்தல் வாக்கெண்ணும் தினத்தில் யாழ் மத்திய கல்லூரியில் தேர்தல் வாக்கு எண்ணும் நிலையத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் வாக்கெண்ணுதலை பார்வையிடுகின்ற முகவர்களாக நியமிக்கப்பட்டு அதன் நிமித்தம் பணியில் இருந்ததாகவும், மிகவும் குறைந்தளவிலான வாக்குகளை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பான விவரங்களை அறிவிக்காமல் வேண்டுமென்று நீண்ட நேரத்திற்கு இழுத்தடிப்பு செய்தமைக்காக தாங்கள் அமைதியான முறையில் அங்கு ஒன்றுகூடி எதிர்ப்பினை தெரியப்படுத்தியிருந்ததாகவும், அங்கு திடீரென்று வந்த சுமந்திரனும் அவரது பாதுகாவர்களும் தங்களையும், கட்சித்தலைவர் மாவை சேனாதிராசாவின் மகனையும் இன்னும் பலரையும் தாக்கியதாகவும் அந்தப் பகுதி யாழ் மாவட்ட செயலாளரின் கட்டுப்பாட்டில் காணப்பட்டிருந்ததாகவும் ஆனால் அவரது முடிவினை பெற்றுக்கொள்ளாது சுமந்திரனின் பாதுகாவலர்கள் இந்த ஜனநாயக விரோத செயலை தன்னிச்சையாக மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டு மேற்படி முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

வவுனியாவில் வனவளத் திணைக்களத்தால்

# ஆக்கிரமிக்கப்பட்ட வயல் நிலங்கள் உடனடியாகவே விடுவிக்கப்படும்

## பசில் பணித்துள்ளார் என்கிறார் திலீபன் எம்.பி.

வவுனியா,ஓக.15

வனவளத் திணைக்களத்தால் வவுனியாவில் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லையிடப்பட்ட வயல் காணிகளை உடனடியாக விடுவித்து அடுத்த காலபோகச் செய்கையை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கு. திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி பசில் ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நானும் பங்குபற்றியிருந்தேன். இதன்போது வன்னிப் பிரதேசத்தில் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தேன். இதன் பிரகாரம் பல வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டு அவற்றில் விவசாயம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவது தொடர்பிலும், அதனை உடனடியாக விடுவித்து விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு ஆவன செய்யுமாறும் தெரியப்படுத்தியிருந்தேன். இதற்கு உடனடி அனுமதி வழங்கப்பட்டதுடன், உடன் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வயல் காணிகளில் போடப்பட்டுள்ள எல்லைக்கற்களை அகற்றி எதிர்வரும் காலபோகச் செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவதற்கு ஆவன செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதேவேளை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் எதிர்கொள்ளும் காணிகளுக்கான அனுமதிப்பத்திர பிரச்சினை விடயமும் சுட்டிக்காட்டப்பட்டதன் அடிப்படையில் உடனடியாக அதற்கும் தீர்வு காணுமாறு தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் காலத்தில் குறித்த மாவட்டங்களில் காணி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் சீர் செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ப-110)

## மட்டக்களப்பு மாநகரில் 'தமிழுக்கு முதலிடம்'

### நிறைவேறியது பிரேரணை

மட்டக்களப்பு, ஓக. 15

மட்டக்களப்பு மாநகர சபையின் 36ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

அமர்வின்போது கடந்த அமர்வின் அறிக்கை வாசிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. இதன் போது, தமிழுக்கு முதலிடம் என்னும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலான பிரேரணையொன்று மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினர் வே.தவராஜாவினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதேபோன்று, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தை ஊடறுத்துச்செல்லும் வீதியை மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடுவதற்கான பிரேரணையொன்று உறுப்பினர் சிவம் பாக்கியநாதனால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. முதல்வரின் முன்மொழிவுகள் வாசிக்கப்பட்டு அவற்றுக்கு உறுப்பினர்களின் அனுமதி பெறப்பட்ட நிலையில் மட்டக்களப்பு ரயில் நிலைய வீதிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீதிக்கு மாநகரசபையினால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள 16 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு தொடர்பாக உறுப்பினர்களினால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. (ப)

## முஸ்லிம்களுக்கு அநீதி இழைத்தால் மு.கவின் குரல்கள் ஓங்கி ஒலிக்கும்


### ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி. காட்டம்


மட்டக்களப்பு, ஓக. 15

நாங்கள் சாவுக்கு எப்போதும் அஞ்சியவர்கள் அல்லர். இறைவனுக்குப் பயந்து தான் எங்களுடைய ஆட்சி இருக்குமே தவிர எந்தவொரு ஆட்சியாளர்களுக்கும் பயந்து அல்ல. முஸ்லிம்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படும் போது எங்களுடைய வாய்கள் மூடி இருக்கமாட்டா. எங்களுடைய அத்தனை குரல்களும் ஓங்கி ஒலிக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த நாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடியோடு அழித்தொழிக்கப்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சி அடியோடு இல்லாமல் செய்யப்பட்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கையில் வைத்துக் கொண்டுள்ளது. எதிர்க்கட்சி மிகவும் பலவீனமாக உள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் பலவீனமடைந்த நிலையில், எதிர்க்கட்சியின் குரல் இல்லாமல் இந்த அரசாங்கத்தின் குரல் ஓங்கி ஒலிக்கும். இவற்றை முறியடித்து சாணக்கியமாகக் காய் நகர்த்தி இந்த அரசாங்கத்துடன் இணக்கப்பாடான அரசியலை எவ்வாறு செய்ய முடியும் என்பதில் மிகவும் தெளிவாக இருக்கின்றோம். முஸ்லிம் சமூகத்தினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கும் நாங்கள் சாணக்கியமான காய் நகர்த்தல்களை நிச்சயமாகச் செய்வோம். முஸ்லிம்களுடைய உரிமைகளுக்கு எதிராக, முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்ற எந்தவொரு பிரேரணைக்கும் நாங்கள் ஒருபோதும் கைகளை உயர்த்தப்போவதில்லை. ஆதரவு வழங்கப்போவதுமில்லை. அதற்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற முதலாவது குரலாக எனது குரல் இருக்கும் -என்றார். (ப)





## 1000 ரூபா பேச்சு எதிர்காலத்தில் சற்று வித்தியாசமாக இருக்கும்

### இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நுவரெலியா, ஓக. 15

ஆயிரம் ரூபாய் தொடர்பான பேச்சு சற்று வித்தியாசமாக எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். இந்திய வீடமைப்பை வைத்துக் கொண்டு நாம் அரசியல் செய்யப்போவதில்லை. வீடமைப்புத் தொடர்பில் முன்னெடுக்கும் பணிகளை நீங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியவில் அமைந்துள்ள தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சில் இராஜாங்க அமைச்சர் பதவியைப் பெற்றபின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதைய புதிய அரசாங்கத்தில் வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்புகளைக் கண்காணிப்பதற்காக அமைச்சரவை அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சு நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நேரடிப் பார்வையில் காணப்படுகின்றது. ஆகையால் யார் குற்றம் சொன்னாலும் அச்சப்படத் தேவையில்லை. எனது அமைச்சின் கடமைகளை எவ்வாறு முன்னெடுக்கின்றேன் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் அதன் அணுகுமுறைகளை வெவ்வேறாக முன்னெடுத்துச் செல்கின்றது. அந்தவகையில் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபாய் சம்பள விடயம் தொழிற்சங்க ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதேநேரத்தில் இது தொடர்பாக நாட்டின் பிரதமருடைய கவனத்துக்கும் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளது - என்றார். (ப)

## புலம்பெயர் உறவுகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.15

நாட்டில் நிலையான அரசாங்கம் உருவாகியுள்ள நிலையில் புலம்பெயர் மக்கள் தங்களுடைய தாயகப் பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றும் அதற்கான உத்தரவாதத்தை தான் வழங்குவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஆர்வம் செலுத்திய போதிலும் சரியான வரவேற்புக் கிடைத்திருக்கவில்லை. இடைத்தரகர்கள் சிலர் தங்களுடைய குறுகிய நலன்களுக்காக புலம்பெயர் முதலீட்டாளர்களைத் தவறாகப் பயன்படுத்த முயற்சித்திருந்தனர். ஆனால் தற்போது நிலையான அரசாங்கம் உருவாகியுள்ள நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தவறான செயற்பாடுகள் எவற்றையும் அனுமதிப்பதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றனர். அதற்கான உத்தரவாதத்தை என்னால் வழங்க முடியும். வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புலம்பெயர் முதலீடுகள் அதிகரிக்கும் பட்சத்தில், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அபிவிருத்தி மற்றும் அன்றாடப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்துக்கொள்ள முடியும் - என்றார். (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிங்களம் - இராணுவம் - பௌத்தம்

ஒரு தென்னந்தோப்பில் ஊடு பயிர்களாகமிளகாய், கடுகு போன்றவற்றைப் பயிரிட்டால் அது மிள காய்த் தோட்டம் என்றோ, அல்லது கடுகுத் தோட்டம் என்றோ அழைக்கப்படாது. அது தென்னந்தோப்பு என்றே அழைக்கப்படும். அதேபோன்றுதான் இந்த நாட்டில் சிறுபான்மையினராக தமிழர்களும், முஸ் லிம்களும் இருந்தாலும் இது சிங்கள நாடுதான் என்று தெரிவித்திருந்தார் பொதுபலசேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர். கடந்த நல் லாட்சிக் காலத்தில் அவர் இந்தக் கருத்தை முன்வைத் திருந்த போதிலும் அதை மெய்ப்பித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது கோத்தாபய தலைமையிலான தற்போதைய அரசு. இந்தப் புதிய அரசும், அதன் அமைச்சரவை, அமைச்சரவையின் பதவியேற்பு, அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயலர்களின் நியமனங்கள் என அனைத்தும் அதையே கட்டியம் சொல்கின்றன.

சிங்களம், இராணுவம், பௌத்தம் இந்த மூன்றும்தான் ராஜபக்சக்களின் மூச்சு. 2015ஆம் ஆண்டு வீட்டுக்கு அனுப்பப்பட்ட அவர்கள்மிகப்பெரும் மீள்வருகையை நிகழ்த்தியமை மேற்சொன்ன மூன்றையும் மூச்சாகக் கொண்டதால்தான். தனிச் சிங்கள வாக்குகளை மையப்படுத்தித்தான் கோத்தாபய ஜனாதிபதியானார். அதன் பின்னர் தனிச் சிங்கள வாக்குகளை மையப்ப டுத்தித்தான் தற்போது ராஜபக்சக்களின் பெரமுன கட்சி கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான் மையையும் அடைந்துள்ளது. ஆட்சியமைப்பதில் மட்டுமல்ல, அதைத் தக்கவைப்பதிலும், தொடர்வதி லும் சிங்களம் – இராணுவம் – பௌத்தம் இந்த மூன் றும்தான் ராஜபக்சக்களின் முதல்நிலைத் தெரிவு என் பது வெள்ளிடைமலை.

இதற்கு ஆகப் பிந்திய உதாரணமாக அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயலர்களின் நியமனத்தைக் குறிப்பிடலாம். 28 அமைச்சுக்களுக்குமான செயலர் கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் சவால் நியமிக்கப்பட்டனர். அவர்களில் குறைந்த பட்சம் ஒருவரேனும் தமிழரில்லை. அமைச்சரவை யில் தமிழ் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா, முஸ் லிம் அமைச்சராக அலி சப்ரி ஆகியோர் அங்கம் வகிக் கின்றபோதிலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட செய லர்கள்கூட சிங்களவர்கள்தான். அது மட்டுமல்லாமல் நான்கு அமைச்சுக்களின் செயலர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சுகளைப் பொறுத்தவரையில் அதிகாரம் கொண்டவர்களாக அமைச்சர்கள் இருந்தபோதிலும் தீர்மானம் ஒன்றுக்கு செயல்வடிவம் கொடுக்கக்கூடிய சக்தி மிக்கவர்களாக இருப்பவர்கள் அமைச்சுக்களின் செயலர்களே. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறு திப்போரை முன்னெடுத்தவர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலரும் தற்போதைய ஜனாதிபதியு மான கோத்தாபயதான். இதை ஓர் அமைச்சின் செயலர் அந்த அமைச்சுக்கு எந்தளவுக்கு இன்றியமையாதவர் என்பதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும். தமிழ் நிர்வாக அதிகாரிகள் பலரும் நிர்வாக ஆளுமை மிக் கவர்களாக, இராஜதந்திரரீதியாகச்சிந்திக்கக்கூடியவர்க ளாக – ஆழ்ந்த புலமையுள்ளவர்களாக இருக்கின்றார் கள். எனினும் எந்தவொரு அமைச்சின் செயலராகவும் தமிழர் ஒருவர் நியமிக்கப்படாமை கோத்தாபய தலை மையிலான அரசின் சிங்களமனோநிலையின் இன் னொரு வடிவமாகவே கருதவேண்டியுள்ளது.

ராஜபக்சக்கள் இலங்கை வாழ் சிறுபான்மை மக்க ளுக்கு அழுத்தம்திருத்தமாக மீண்டும் மீண்டும் வலி தான செய்தியொன்றைச் சொல்லிவருகின்றனர். ‘இலங்கை ஒரு தனிச்சிங்கள நாடு. சிங்களம் இராணு வம் பௌத்தம் ஆகிய மூன்றுமே இலங்கையின் மகுடங்கள்’ என்பதே அந்தச் செய்தி. இதற்கெதிராக சிறுபான்மையினர் ஆகிய நாம் எவ்வாறு துலங்கலாற் றப் போகின்றோம் என்பதே தற்போது எம்முன்னுள்ள மில்லியன் டொலர் கேள்வி.

# நடுநிலையாக செயற்பட விரும்புகிறது இலங்கை

## வெளிவிவகாரச் செயலாளர் தெரிவிப்பு

**கொழும்பு,ஓக.15**

**பிராந்திய விவகாரங்களில், இலங்கை நடுநிலையாகச் செயற்படவே விரும்புகிறது என்று புதிய வெளிவிவகார செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

டைம்ஸ் ஒஃவ் இந்தியாவுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

“இலங்கை, இந்தியாவின் மூலோபாய பாது காப்பு தொடர்பான கரிசனைக்குரிய நாடாக இருக்க முடியாது.

ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் தேசிய பாது காப்பே முதலாவதாக உள்ளது. பிராந்தியப் பாதுகாப்பு இல்லாமல் தேசியப் பாதுகாப்பு காணப்படாது.

ஆனால் பொருளாதார விவகாரத்தில் இலங் கைக்குப் புதிய முதலீடுகளைக் கொண்டு வரும் எவரையும் வரவேற்பதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கின்றார்.

கடன்களுக்கு இடமில்லை. இலங்கை நடு நிலைமையோடு இருக்க விரும்புகின்றது என் றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை துறைமுகங்கள் விமான நிலை யங்கள் போன்ற தேசிய மூலோபாய சொத்துக் களின் முழுமையான கட்டுப்பாட்டை எந்த வெளிநாட்டுக்கும் வழங்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்” என்றார். (க)

## மருதமடு ஆலய பெருவிழா இன்று

மன்னார்,ஓக.15

மன்னார் மறைமாவட்டத்தின் யாத்திரை ஸ்தலமான மருதமடு ஆலயப் பெருவிழா இன்று சனிக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது.

மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் திருவிழா இடம் பெறும். கண்டி ஆயர் மேதகு வியானி பெர்னாண்டோ ஆண் டகை,மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க, அநுராதபுரம் ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பர்.

திருவிழா திருப்பலி காலை 6.15 மணிக்கு இடம்பெறும். இலங்கையின் பல பாகங்களிருந்தும் பக்தர்கள் திருவிழா வில் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுவதால், தனி நபர் இடைவெளி நடைமுறையை சுகாதார அதிகாரிகள் கண்காணிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-60)

## 30,184 பேரின் தனிமைப்படுத்தல் நிறைவு

கொழும்பு,ஓக.15

முப்படையினால் நிர்வகிக்கப்ப டும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்ப டுத்தலை நிறைவு செய்த 30 ஆயிரத்து 184 பேர் அங்கி ருந்து வெளியேறியுள்ளனர்.

இதுவரை 43 தனிமைப்படுத் தல் மத்திய நிலையங்களில் 4 ஆயிரத்து 461 பேர் தனிமைப் படுத்தலுக்குட்படுத்தப்பட்டனர். அத்துடன் ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 681 பி.சி.ஆர். பரி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் சுகா தார அமைச்சு தெரிவித்துள் ளது. (க)

## 9ஆவது நாடாளுமன்ற முதல் அமர்வு 20ஆம் திகதி

கொழும்பு,ஓக. 15

நாட்டின் 9ஆவது நாடாளு மன்றத்தின் முதல் அமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிமை காலை 9.30 மணிக்குக் கூடவுள் ளது. இதற்கான வர்த்த மானி அறிவித்தல் ஜனாதி பதி கோத்தாபய ராஜபக் ஷவால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி கோத்தாபயராஜபக்ஷவால் பல வர்த்தமானி அறி வித்தல்களும் வெளியிடப் பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷவை பிர தமராக நியமிப்பது மற்றும் காமினி செனரத்னவை பிரதமரின் செயலாளராக நியமிப்பது தொடர்பாக இரண்டு வர்த்தமானி அறி விப்புகள் வெளியிடப் பட்டுள்ளன.

புதிய அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவையின் புதிய செயலாளர்களின் நியம னம் தொடர்பான வர்த்த மானி அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன. (எ)

## 12 பேர் குணமடைவு

கொழும்பு,ஓக. 15

கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 12 பேர் பூரணமா கக் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

அதற்கமைவாக இதுவரை 2 ஆயிரத்து 658 பேர் குணம டைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேவேளை, 213 பேர் மருத் துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. (க)

# மூன்று அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்

புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள மேலும் 3 அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன

நீதி அமைச்சின் செயலாளராக எம்.எம்.பி. கே.மாயாதுன்னே, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளராக யு.டி சி.ஜயலால், புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளராக பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோர் நிய மிக்கப்பட்டுள்ளனர். (க)

# எதிரிகளை பழிவாங்க தயாராகின்றது அரசு!

## முன்னாள் அமைச்சர் ஹரின் எச்சரிக்கை அமைச்சரவையையும் நையாண்டி செய்கிறார்

**கொழும்பு, ஓக. 15**

**அரசு தமது அரசியல் எதிரிகளைப் பலிகொடுக்கும் நோக்கத்துடன் உள்ளது என்பது அரசின் செயற்பாடுகள் புலப்படுத்துகின்றன என்று முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு தனது அமைச்சரவையின் சுருக்கத்தின் மூலம் தனது நோக்கங்களை தெளிவுபடுத்தியுள்ளது. அதாவது, புதிய நாடாளுமன்றக் கூட்டத்துக்கு முன்னரே அரசு 19 ஆவது திருத்தத்தை மீறியதாகத் தெரிகிறது.

இந்தச் சட்டம் தொடர்பாக அரசு என்ன செய்ய விரும்புகிறது என்பதற்கான அறிகுறியை இது தருகிறது.

மேலும் அலி சப்ரியை நீதி அமைச்சராக நியமித்தமை அரசு நீதித்துறையை எவ்வாறு கையாளப்போகிறது என்பதற்கான மற்றுமோர் அறிகுறியாகும்.

புதிய அமைச்சரவையில் உள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் உள்ளன.

அதாவது, அரசியல் எதிரிகளைப் பலிகொடுக்கும் நோக்கத்தை அரசு கொண்டிருக்கக்கூடும், இதனால்தான் சப்ரிக்கு நீதித்துறை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாமல் ராஜபக்ஷவை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சராக நியமித்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். இளமையாகவும் ஆற்றலுடனும் இருப்பதால் அவருக்கு வழங்கப்பட்ட இலாகா குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ஒவ்வொரு மாகாணத்துக்கும் நாங்கள் ஒரு விளையாட்டு வளாகத்தை உருவாக்கத் தொடங்கிய திட்டத்தை அவர் செயற்படுத்துவார் என்று நம்புகிறோம்.

**உலகத்திலேயே இல்லாத அமைச்சரவை இங்கு**

அமைச்சரவை ஒன்றை அமைப்பதற்காகவே மக்கள் வாக்களித்தனர். ஆனால் தற்போது அமைச்சரவைக்கு பித்தளை, மண், மிளகாய், அரிசி, தேங்காய்,எண்ணெய் ஆகியனவற்றுடன் தொடர்புடையவர்களே வருகை தந்துள்ளனர்.

இந்த மாதிரியான அமைச்சரவை இந்த உலகத்திலேயே இல்லை. இலங்கையில்தான் முதல் முறையாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் முக்கிய பொறுப்புகள் அனைத்தும் அவர்களது உறவுகளுக்கே வழங்கப்பட்டுள்ளன.

அதாவது, நிதி மஹிந்த ராஜபக் ஷவால் கட்டுப்படுத்தப்படுகிறது, பாதுகாப்பு கோத்தாபய ராஜபக் ஷவால் கட்டுப்படுத்தப்படுகிறது, இளைஞர்கள் மற்றும் விளை யாட்டுக்கள் நாமல் ராஜபக்ஷவால் கட்டுப்படுத்தப்படுகின்றது, பணம் பஸில் ராஜபக் ஷவால் செலவிடப்படுகிறது. தண்ணீர் மற்றும் விவசாயத்துக்கு சமல் ராஜபக்ஷவுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

பணத்துக்காக எதிர்பார்த்து காத்திருக்கும் ஒருவருக்கு துறைமுக அமைச்சகம் வழங்கப்பட்டுள்ளது. இது நகைச்சுவையான விடயம் என்பதை அனுதாபத்துடன் நினைவூட்டுகிறேன்.

அத்துடன் மக்கள் வழங்கிய ஆணை காரணமாக நாங்கள் அமைதியாக இருக்கிறோம். இன்னும் ஒரு மாதத்தில் நல்ல விளையாட்டுகளைப் பற்றி பேசுவோம். என்றார். (த)

## சிறுவர் நாடக விழாவுக்கு விண்ணப்பம் கோரல்

கலாசார அலுவல்கள், திணைக்களத்தினால் அரச சிறுவர் நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த பிரிவுகளாக போட்டிகள் இடம்பெறவுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் அரச மற்றும் அரச சார்பற்ற பாடசாலைகள் பங்கு கொள்ள முடியும், திறந்த போட்டிப் பிரிவில் கலை நிறுவனங்கள், கலைக் கல்லூரிகள், சிறுவர் இளைஞர் மன்றங்கள், அமைப்புக்கள் சிறுவர் நாடகக் குழுக்கள், மற்றும் தனிநபர்கள் பங்குகொள்ள முடியும். ஆர்வமுள்ள கலைஞர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 2020.9.10ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கத்தை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ப)



*தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை:*

## நினைவாலயம் துப்புரவாக்கப்படுமா?

யாழ்ப்பாணம், ஓக. 15


1974 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட 9 பேரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவாலயம் புற்கள் வளர்ந்து அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றது.

தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் வந்து தமது நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்கின்றன.

நினைவாலய பகுதி யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியில் உள்ள யாழ்ப்பாண மாநகர சபை கூட இதில் கவனம் செலுத்தவில்லை. இந்த விடயத்தை சபை கவனத்தில் எடுக்கவேண்டும். (கு-111)

# செல்வச்சந்நிதி திருவிழாவில் கடைப்பிடிக்க வேண்டியவை

## அறிவுறுத்துகிறார் பிரதேச செயலர்



யாழ்ப்பாணம், ஓக. 15


நாட்டில் கொரோனாத் தொற்று அபாயம் நிலவும் சூழலில் பிரசித்திபெற்ற வடமராட்சி செல்வச்சந்நிதி பெருந்திருவிழாவில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி சந்நிதி முருகன் கொடியேற்றத்துடன் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில், பிரதேச செயலர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1. ஸ்ரீ செல்வச்சந்நிதி உற்சவ காலத்தில் சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் 150 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
2. அடியவர்கள் ஆலயத்துக்கு வருகை தரும்போது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதி செய்யும் ஆவணம் இவற்றில் ஏதாவது ஒன்றை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கண்டிப்பாக உடன் எடுத்து வரவேண்டும். அவற்றில் ஏதாவது ஒன்று வீதித் தடையில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்பட்டே உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.
3. வீதித் தடைகளூடாக ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக் கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.
4. ஆலயத்துக்குள் உள்நுழைவதற்கு முன்னர் கைகளைச் சுத்தம் செய்ய வேண்டும்.
5. ஆலயத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தனியாள் இடைவெளியை பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளுதல் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.
6. அடியவர்கள் ஆசார சீலர்களாக வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
7. அடியவர்கள் ஆலயத்தில் நீண்ட நேரம் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
8. கொரோனாத் தொற்று பாதிப்பு காரணமாக சுயதனிமைப்படுத்தல் அல்லது கட்டாய தனிமைப்படுத்தலுக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு காலம் முடிவுற்ற பின்னர் அடியவர்கள் ஆலயத்துக்கு வருகைதரும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் முடிவுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவ சான்றிதழ்களை தம்முடன் கொண்டுவருதல் வேண்டும். முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தல் மருத்துவ சான்றிதழ்களை எப்போதும் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.
9. வயோதிபர்கள், நோயாளர்கள், சிறுகுழந்தைகள் தங்களது தனியாள் சுகாதார நலன் கருதி ஆலயத்திற்கு வருகை தருவதை இயன்றவரை தவிர்த்தல் நன்று.
10. கொவிட் 19 அறிகுறிகள் (காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் போன்றவை) காணப்படுபவர்கள் ஆலயத்துக்கு வருகை தருவதை தவிர்ப்பது நன்று.
11. ஆலயச் சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படி வைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.
12. தற்போது நாட்டில் நிலவுகின்ற கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் அங்கப் பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி, தூக்குக் காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின்போது கொரோனா கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இந்த வருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
13. ஆலயச் சுற்றாடல் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.
14. ஏற்கனவே ஆலய சூழலில் இயங்கி வந்த கடைகள் மாத்திரம் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும். எனினும், இயங்கிவரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.
15. ஆலயச் சூழலிலுள்ள வெற்றுக் காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படமாட்டாது.
16. ஆலய பெருந் திருவிழாவின் போது ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றத் தவறும் பட்சத்தில், அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.
17. தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றனவற்றால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுகாதார அமைச்சு காலத்துக்கு காலம் வெளியிடும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் அத்துடன் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியால் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலங்களில் ஆலய சுற்றாடல்களில் அடியார்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த)







நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் 21 ஆம் திருவிழாவான நேற்றுக் காலை கஜவல்லிமஹாவல்லி உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

## குடமுழுக்கு

புங்குடுதீவு, ஓக. 16

புங்குடுதீவு மேற்கு சிறுப்பிட்டி பெரியபுலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய குடமுழுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.09 மணி முதல் 7.36 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும். ஆலயத்துக்கு வரும் அடியார்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஆலய நிர்வாக சபையினர் மற்றும் ஆலய குடமுழுக்கு திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## சிறப்புச் சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஓக.15

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6 மணிக்கு சிறப்புச்சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன் " குருவாய் வருவாய்" என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



நல்லூர் கந்தசுவாமி கோவில் 21ஆம் நாள் திருவிழாவான தங்கரதத்தில் நேற்று மாலை முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.




## நல்லூரான் சிறப்பம்சம்

### வேல்முருகா

ஆறுமுகம் என்றவுடன் ஆறுதலுண்டு
ஆறுதலுண்டு மனத் தேறுதலுண்டு
தேறும் சிவக்கனலைச் சிந்தனைசெய்தே
செந்தமிழ் முருகனையே
வந்தனை செய்வோம் வேல்முருகா

*கலாபூஷணம் இ.சரவணபவன்*
*அராலியூர் வட்டுக்கோட்டை*

### சரவணபவன்

பொன் வெள்ளி ஒளிரம் வேலேந்தி
பொய்மை சூது தனை வேரறுத்து
பொல்லாத வினைகள் அனைத்தும் பொசுக்கி
பொங்கும் இன்பந் தரும் சரவணபவனே

நின்பாதம் தொழ கூட்டம் அலைமோதும்
நிம்மதி நாடி என்றும் கரங்கூப்பும்
நிதமும் நல்லைக்குமரன் புகழ்பாடும்
நிச்சயம் உலகு திருந்தி வாழும்

*சிவரம்யா*

### நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு....

பல்லவி
எங்கெங்கு பார்த்தாலும் முருகா! உன் அருட்காட்சி
எழில் மிகும் நல்லூரில் இறைவா உன் அருள் ஆட்சி!
(எங்)

அநுபல்லவி
தங்க மயில் மீது வந்து தந்திடுவாய் காட்சி
தமிழ் ஞானப் பழம் உன்னை தொழுவோர்க்கு இல்லை வீழ்ச்சி
(எங்)

சரணம்
சங்கத் தமிழ் வளர்த்த புலவர்க்கெல்லாம் தலைவா
சரவணப் பொய்கைதனில் தோன்றியவா- அழகா
மங்காத புகழ் கொண்ட மாதவனின் மருகா!
மனமாரத் துதிப்போர்க்கு மகிழ்ச்சி தரும் குமரா
(எங்)

*கலாபூஷணம் கீழ்கரவை குலசேகரன்*



# விசேட சோதனையில் 27 பேர் கைது!

திருகோணமலை, ஓக.15

கிழக்கு கடற்படை கட்டளையின் கடற்படையினர், கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 27 நபர்களைக் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து 5 இயந்திரப்படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்தக் கடற்படையினர் சேருநுவர, பூனாடி, முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மற்றும் திருகோணமலை போல்டர் பொயிண்ட் ஆகிய கடல் பகுதிகளில் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்டவிரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மீன்பிடி உபகரணங்களுடன், திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு மீன்வள உதவி இயக்குநர்களிடமும், குச்சவெளி மீன்வள ஆய்வாளரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ரி2)

# நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வர்த்தகக் கொள்கை விரைவில்

**கொழும்பு, ஓக.15**

**நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவிதமான வர்த்தகக் கொள்கை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.**



வர்த்தக அமைச்சில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தமது கடமைகளை ஆரம்பித்து ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், நாட்டிற்கு பாதகமான வர்த்தக ஒப்பந்தங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டு, புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படும். நாட்டுக்குப் பொருத்தமானதும் மக்களின் நலனுக்கு ஏற்றதுமான புதிய சட்டங்களும் ஏற்படுத்தப்படும். பொருத்தமற்ற சட்டவிரோத வர்த்தக ஒப்பந்தங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# நீர் கட்டணங்கள் அதிகரிக்கப்படா!

அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15



நீர் கட்டணங்களை அதிகரிப்பதற்கு எந்தவித தீர்மானத்தையும் அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், நீர் கட்டணங்களை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்படுமாயின், அது நீர் பாவனை அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படும் எனவும், நாட்டு மக்களுக்கு அவசியமான சுத்தமான குடி தண்ணீரை அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ரி3)

## பிரிட்டனிலிருந்து வந்த சொக்லேட் கொள்கலன் சுங்க திணைக்களத்திடம்

கொழும்பு, ஓ.15

பிரிட்டனிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சொக்லேட், சிறார்களுக்கான ஆடைகள் அடங்கிய கொள்கலன் ஒன்றை சுங்க திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது. ஒருகொடவத்தை கொள்கலன் முனையத்தில் கைப்பற்றப்பட்ட இந்த கொள்கலன் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்த திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் இந்நிலையில், இந்தக் கொள்கலனில் சொக்லேட், சிறார்ளுக்கான ஆடை வகைகள், ஜாம் உள்ளிட்ட பல பொருள்கள் இருந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்தில் தங்கியுள்ள இலங்கை வர்த்தகர் ஒருவரினால் கண்டி மற்றும் புத்தளம் பகுதிகளில் உள்ள அதிக சிறார்களைக் கொண்ட இரண்டு குடும்பங்களுக்கு இந்தப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ரி1)

## பல்வேறுபட்ட குற்றச் செயல்கள்: ஒரு லட்சத்து 34,831 பேர் கைது

கொழும்பு, ஓக.15



கடந்த ஜூன் மாதம் 6ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருள் மற்றும் பல்வேறுபட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் ஒரு லட்சத்து 34,831 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இக் காலப்பகுதியில் ஹெரோய்ன், கஞ்சா மற்றும் ஐஸ் ரக போதைப்பொருள்களுடன் 26,886 பேரும், சட்டவிரோத மதுபானம் தொடர்பில் 24,314 பேரும், ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 15,404 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின் போது பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்த 23,139 பேரும், பல்வேறுபட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 45,088 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ரி3)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி விக்னேஸ்வரி சிவசுப்பிரமணியத்தின் பணிநயப்பு விழா, வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஆசிரியர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ரி3-159)

## போலி இரத்தினக் கல்லை விற்க முயன்றவர்கள் கைது

அவிசாவளை, ஓக.15

அவிசாவளையில் போலியான இரத்தினக்கல் விற்பனை செய்ய முயன்ற இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலத்திலும் இவர்கள் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ரி2)

## லங்காபுர பிரதேச செயலாளர் காரியாலயம் மீண்டும் இயக்கம்

கொழும்பு, ஓக.15

கடந்த ஜூலை 30 மற்றும் ஒகஸ்ட் 3 ஆம் திகதிகளில் லங்காபுர பிரதேச செயலாளர் காரியாலயத்தின் உதவியாளர் மற்றும் சிவில் பாதுகாப்புச் சிப்பாய்க்கு கொரோனாத்தொற்று உறுதியானதையடுத்து மூடப்பட்ட லங்காபுர பிரதேச செயலாளர் காரியாலயம் மற்றும் பிரதேச சபை என்பன நேற்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த காரியாலயங்களில் பணியாற்றிய பணிக்குழாமினர் இன்று சேவைக்கு சமூகமளிக்க முடியும் என்று லங்காபுர சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ரி-2)

# சுற்றுலா விசாக்கு சீனர்கள் தாய்மொழியில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஓக.15

இலங்கை சுற்றுலா விசாக்களுக்கு விண்ணப்பிக்க சீனர்கள் இனி ஆங்கிலம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. சீனர்கள் தங்கள் தாய்மொழியில் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை குடிவரவு திணைக்களம் மற்றும் சீனா பயண நிபுணர் பயணிகள் சர்வதேச பயண சேவை நிறுவனங்களுக்கிடையே புதிதாக நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளைவாக இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. (ரி-2)

# கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எனது தன்னிச்சையான முடிவல்ல

## சலாப்புகிறார் துரைராசசிங்கம்

**மட்டக்களப்பு, ஓக.15**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகிய நான் தன்னிச்சையாக நடந்து கொண்டுள்ளேன் என எமது கட்சித் தலைவர் தெரிவித்திருக்கின்றார். தன்னிச்சையாக நடந்திருந்தால். இந்தத் தேசியப் பட்டியலுக்கு நான் என்னையே நியமித்திருக்க முடியும். எனவே இது எந்த விதத்திலும் எனது தன்னிச்சையான முடிவு அல்ல. இந்த நியமனம் தொடர்பில் மக்கள் மகிழ்ச்சி கொண்டிருக்கின்றார்கள். என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாக்குச் சரிவு காரணமாக இம்முறை ஒரு தேசியப் பட்டியல் நியமனம் தான் கிடைத்தது. இந்த தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் வழக்கமாகக் கட்சித்தலைவர்கள் கூடி ஒரு முடிவை எடுப்பார்கள். நான் அவர்கள் தரும் முடிவை வெளியிடுபவராகத்தான் இருப்பேன். இம்முறையும் வழமை போன்று எமது பங்காளிக் கட்சிகளின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டிருக்கும் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது.

இவ்விடயம் தொடர்பில் நான் திருகோணமலையில் உள்ள சம்பந்தன் ஐயாவின் வீட்டிற்குச் சென்று ஆராய்ந்தேன். அப்போது தேசியப் பட்டியல் நியமனத்தை துறைசார் நிபுணருக்கு வழங்குவது. அல்லது பிரதிநிதித்துவம் இல்லாத பகுதிக்கு வழங்குவது எனத் தெரிவித்து. தற்போதைய நிலையில் அம்பாறை மாவட்டத்திற்கு எமது பிரதிநிதித்துவம் இல்லை எனவே அம்பாறை மாவட்டத்துக்கு இந்த தேசியப் பட்டியல் நியமனத்தை வழங்குவது தொடர்பான கருத்தை நான் முன்வைத்தேன். அப்போது ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக குகதாசன் என்பவருக்கு வழங்க வேண்டும் என்ற கருத்தும் வந்தது. அம்பாறைக்கு இந்த தேசியப் பட்டியல் நியமனத்தை வழங்கினால் கட்சியினுடைய நிலைமையை மேலோங்கச் செய்வதாக அமையும் என நான் எடுத்துக் கூறினேன்.

இந்த விடயத்தை எமது கட்சித்தலைவர் மாவை.சேனாதிராஜாவுடன் சம்பந்தன் ஐயா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்துவிட்டு. அதே தொலைபேசியை என்னிடம் தந்தார். அப்போது என்னிடம் தலைவர் சேனாதிராஜா இந்த தேசியப் பட்டியலை அவர் விரும்பவில்லை எனவும், ஆனாலும், இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பலர் நிர்ப்பந்திப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் சம்பந்தன் ஐயா தொலைபேசியை வாங்கி அம்பாறைக்கு இந்த நியமனத்தை வழங்குவது பொருத்தமாக இருக்கும் என தலைவர் சேனாதிராசாவிடம் தெரிவித்து விட்டு தொலைபேசியைத் துண்டித்துவிட்டார். அப்போதிருந்த நிலைமையில் கடந்த 09 ஆம் திகதிக்கு முன்னர் தேசியப் பட்டியல் விபரத்தை அனுப்பி வைக்கவேண்டும் என்பதை நான் தெரிந்திருந்தேன். பின்னர் இதற்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. நான் த.கலையரசனின் பெயரை முன்மொழிந்தேன். பின்னர் அவருடைய தகைமைகள் தொடர்பிலும் ஆராய்ந்தோம் பின்னர்தான் நான் தவராசா கலையரசனின் பெயரை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவிட்டு 9 ஆம் திகதி ஊடகங்கள் வாயிலாக இந்த தீர்மானத்தை வெளிப்படுத்தினேன். தற்போது இது தொடர்பில் சில சர்ச்சைகள் வந்துள்ளன இதுதொடர்பில் எமது அரசியற் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளோம்-என்றார். (ப)

## பிணக்குகளைத் தீர்த்துவைக்கின்ற இணக்க சபைகள் அனைத்தும் 22இலிருந்து இயங்கவேண்டும்

காரைநகர், ஓக. 15

இணக்க சபைகளின் பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல்களை மீள ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட்19 தொற்றுகையின் காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக நாடு முழுவதும் இடைநிறுத்தப்பட்டிருந்த இணக்க சபை அமர்வுகள் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இணக்க சபைகள் ஆணைக்குழுவின் செயலாளர் இணக்க சபைகளின் தவிசாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுத்தல், சுகாதாரப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள முகக் கவசங்களை அணிதல், கைகளைக் கழுவுதல் மற்றும் தனியாள் இடைவெளி பேணல் உட்பட அனைத்து சுகாதார அறிவுறுத்தல்களையும் முறையாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நீதிமன்றத்தால் சமர்ப்பிக்கப்படுகின்ற பிணக்குகளுக்கு முக்கியத்துவம் வழங்கல், தற்போது உள்ள பிணக்குகளின் எண்ணிக்கைக் கேற்ப தேவையேற்படின் ஓகஸ்ட் மாதம் 22,23 மற்றும் 29,30 ஆகிய நான்கு தினங்களும் பிணக்குகள் பற்றிக் கலந்துரையாட முடியும் என்ற அவர் மேலும் அறிவித்துள்ளார். (கு-250)

## இரு தாக்குதல் சம்பவங்களில் பெண்கள் உட்பட ஐவர் காயம்

சாவகச்சேரி, ஓக.15

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் இரு பெண்கள் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தென்மராட்சி கச்சாய் தெற்கு மற்றும் மட்டுவில் மத்தி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றன.

மட்டுவில் மத்தியில் இடம்பெற்ற சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த 27 மற்றும் 28 வயது ஆண்களும், கச்சாய் தெற்குப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் 43 வயது மற்றும் 45 வயது பெண்களும், 22 வயது இளைஞனும் காயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## மன்னார் காற்றாலை நிலைய கட்டுமான பணி நிறைவு!

மன்னார்,ஓக. 15

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந் துள்ளன என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் மிகப்பெரிய காற்றாலையான இதில் 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜிதா ஹேரத் தெரிவித்தார். (ஐ)

## இளையோருக்கான இலவச தொழிற் பயிற்சிகள்

சாவகச்சேரி, ஓக. 15


தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராக்கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் பாடசாலை கல்வியை நிறைவு செய்த இளையோருக்கான இலவச தொழில் பயிற்சிகள் நாளைமறுதினம் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சி நடைபெறும் பாடசாலை அதிபரிடம் அல்லது தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் பெயர்களைப்பதிவு செய்யுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் கணினிப் பயிற்சிகளும், எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நுணாவில் மேற்கு அ.த.க.பாடசா லையில் வீட்டு மின்சுற்று பயிற்சிகள், சாவகச்சேரி. இந்துக் கல்லூரியில் மணப் பெண் அலங்காரம் மற்றும் கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகளும் நடைபெறவுள்ளள என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
27
11
1945



உதிர்வு
12
07
2020

அமரர். திருமதி செல்வராணி ஜெயரட்ணசிங்கம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
எம்மை சீரும் சிறப்புடன் வாழவைத்த
எம் அன்புத் தெய்வத்தை இழந்து
மாதமொன்று கடந்த போதும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு என்றும் நீங்காது

அன்னாரின் நினைவுதினம் (15.08.2020) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் "ராஜபவனம்" சுழிபுரம் மேற்கு. சுழிபுரத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"ராஜபவனம்"
சுழிபுரம் மேற்கு சுழிபுரம்

அன்னாரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# விரைவில் மாகாணசபை தேர்தல்

கொழும்பு, ஓக.15

அரசாங்கம் மாகாணசபை தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமென மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

மேலும் மாகாண சபை தேர்தலை புதிய முறைமையில் நடத்துவதா அல்லது பழைய முறைமையில் நடத்துவதா என்பது தொடர்பாக நாடாளுமன்றமே தீர்மானிக்கும். எனினும் ஆளுநர் என்ற வகையில், தேர்தலை நடத்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி-3)

## கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்ட மஞ்சள் மூடைகள் மீட்பு

கொழும்பு, ஓக.15

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மஞ்சள் மூடைகள் கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட் டுள்ளன.

மன்னார் ஒலுதுடுவாய் கடற்கரைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினராலேயே, கடற்கரைக்கு அருகிலுள்ள புதர்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 57.2 கிலோ கிராம் எடையுள்ள உலர்ந்த மஞ்சள் நிரப்பப்பட்ட இரண்டு மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட உள்ளதுடன், விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-3)

## மட்டு. பாடசாலைகளுக்கு செஞ்சிலுவையால் கைகழுவும் உபகரணங்கள்

மட்டக்களப்பு, ஓக.15

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையினால் கொவிட் 19 திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளுக்கு பாதுகாப்பான முறையில் கைகழுவும் உபகரணங்கள் நேன்று வழங்கப்பட்டுள்ளன என்று இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் த.வசந்தராசா தெரிவித்துள்ளார்.

கொவிட்19 திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று கைகழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பஸ் தரிப்பிடங்கள், பொதுச் சந்தை உள்ளிட்ட பொது இடங்களிலும் கொவிட்19 தொடர்பில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோன்று பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு வருவதோடு, அது தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் பொது இடங்களிலும் வைக்கப்பட்டு வருகின்றன என த.வசவந்தராசா மேலும் தெரிவித்துள்ளார். (ரி2-46)



## ராஜாங்கனையில் மாணவன் ஒருவனுக்கு கொரோனா!

கொழும்பு, ஓக.15

இலங்கையில் சமூக மட்டத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளார். ராஜாங்கான பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவரே இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார் என அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி சந்தியா அபேரத்ன தெரிவித்துள்ளார். ராஜாங்கனை 5 நவோத்யா வித்தியாலயத்தில் 11ஆம் வகுப்பில் கற்கும் 16 வயதுடைய மாணவனுக்கே கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அந்தப் பிரதேசத்தில் முதல் முறையாக கொரோனாத் தொற்றுக்குள்ளான நபரின் வீட்டிற்கு முன்னால் இந்த மாணவன் வசித்து வருகின்றார். அப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 102 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் 101 பேர் ஆரோக்கியமாக உள்ளார்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவன் சிரி செவன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்த மாணவன் கற்கும் பாடசாலையில் உள்ள மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு இதுவரையில் பாடசாலை மூடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஏனைய பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கவில்லை என தம்புத்தேகம கல்வி வலயப் பணிப்பாளர் ஜீ.கே.ஆர். எம்.கே.பண்டார தெரிவித்துள்ளார். (ரி-1)

## சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய கணினி மென்பொருள்!

கொழும்பு, ஓக.15

நாட்டின் விமான நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிப்பதற்கு கணினி மென்பொருள் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மென்பொருள் மூலம் சுற்றுலாப் பயணிகள், விசா பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் முதல் பார்வையிடும் இடங்கள் வரை அவதானிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் மற்றும் அதன் பின்னர் 5 அல்லது 7 நாள்களுக்குப் பின்னரும் இரண்டு தடவைகள் அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த பி.சி.ஆர் பரிசோதனைகளுக்காக சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-2)

## இலங்கையுடனான உறவை வலுப்படுத்த பாகிஸ்தான் விரும்பம்

கொழும்பு, ஓக.15

இலங்கையுடனான உறவை வலுப்படுத்த பாகிஸ்தான் விரும்பம் தெரிவித்திருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். அத்துடன், இரு நாட்டுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நெருக்கமாக பணியாற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ரி-2)

## வீட்டுக் காவலில் ரதனசார தேரர்!

கொழும்பு, ஒக். 15

அரம்பேபொல ரதனசார தேரர் வீட்டுக் காவலில் உள்ளதாக எங்கள் சக்தி மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்

விகாரையின் மீது இனந்தெரியாத குழுவினரினால் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தேசிய பட்டியல் ஆசனத்தை வென்ற எங்கள் சக்தி மக்கள் கட்சியில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை, வீச்சுகளின் பரிமாற்றமாகத் தற்போது மாறியுள்ளது. மேலும் நான் வசிக்கும் விகாரையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்த போதும் எந்தவொரு நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. மேலும் எங்களது விகாரையில் வசித்து வந்த அரம்பேபொல ரதனசார தேரர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவரும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## கல்விசாரா ஊழியர்கள் பணிக்குத்திரும்புங்கள்

பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 15

நாட்டில் உள்ள சகல பல்கலைகழகங்களினதும் கல்விசார ஊழியர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் பணிக்குத் திரும்பவேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது கல்வி சாரா ஊரியர்கள் விடயமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்படி தீர்மானமும் எட்டப்பட்டது. கொரோனா தாக்கத்தின் பின்பு பல பல்கலைக் கழகங்களில் கல்வி சாரா ஊழியர்கள் முழுமையாக பணிக்கு திரும்பாத நிலமை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



# இன்றைய நாள்



**மேடம்:** குடும்பத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பூர்வ சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்களின் மனநிலை மாறும்.



**இடபம்:**உத்தியோகத்தில் சவாலான வேலைகளை சாதாரணமாகச் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சியை மேற்கொண்டால் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம்.



**மிதுனம்:** உறவினர் மூலமாக சிறு செலவுகள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பது நல்லது. வியாபாரிகளுக்குத் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும்.



**கடகம்:** கவலையற்ற போக்குடன் இருப்பீர்கள். தொல்லைகள் சில வந்தாலும் அதை சிறப்பாக அணுகி வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளின் மூலம் மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு கணவரின் ஆதரவு அதிகரிக்கும்.



**சிம்மம்:** கடந்த நாள்களில் இருந்த சோர்வு நீங்கி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்களுக்குக் கீழ் வேலைபார்ப்பவர்களை மிக மரியாதையுடன் நடத்துவீர்கள்.



**கன்னி:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கியை போராடி வசூலிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**துலாம்:** உத்தியோகத்தில் சூட்சுமங்களைக் கற்க பொறுமை தேவைப்படும். எதிர்பாலினத்தினரிடம் பழகும்போது கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** கலைத் துறையினருக்கு நிம்மதியும், சந்தோஷமும் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்தினருக்கு தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வர்.




**தனுசு:**நண்பர்களிடையே சுமுக உறவு ஏற்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வாழ்வில் முன்னேற அதிக அக்கறை காட்டுவீர்கள். கலைத்துறையினருக்கு மன வருத்தங்கள் நீங்கும்.



**மகரம்:** செலவுகளில் கட்டுப்பாடு தேவை. வாழ்வில் முன்னேற அதிகப்படியான வாய்ப்புகள் கிடைக்கும். உறவினர்கள் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.



**கும்பம்:** வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட பணப்புழக்கம் சுமாராகவே இருக்கும். பயணங்களின் போது பொருள்களை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள்.



**மீனம்:** மனத்தைரியம் கூடும். பணவரவு எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் உள்ள போட்டிகள் குறையும். அலுவலகத்தில் பணிகளை நிதானமாகச் செய்வீர்கள்.

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை ஞாயிறு காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** பலாலி வீதி திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால்பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப் பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்றெட், நொதேர்ண் சென்றல் பலாலி வீதி, ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** ஜோசப் முகாம், விமானப்படை முகாம், விமானப்படை முகாம் றேடரர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இளைஞர்கள்...

தலில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சடலம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்போது பட்டாசு கொளுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து பள்ள மடு சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த 7 பேரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவர்கள் பட்டாசு கொளுத்தியதாக குற்றம் சுமத்தியே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

24 வயது மதிக்கத்தக்க இளைஞர் படுகாயமடைந்து பள்ளமடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ,5,56)

## முகாமிருந்த...

பணி அகழ்வுகள் மேற்கொண்டபோதே இந்த மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எலும்பு எச்சங்களுடன் பெண்கள் அணியும் ஆடைகளும் காணப்படுகின்றன. அதனால் அந்த எலும்புக்கூடு பெண்ணுடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தக் காணி 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்ததுள்ளது. அதன்பின்னர் மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (எ,ஒ,25,20)

## இரவு...

ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவருமான திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எனக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் நகரங்களிலுள்ள கடைகளெல்லாம் மாலை 6 அல்லது 7 மணிக்கு பூட்டப்பட்டு பொது மக்களின் நடமாட்டம் குறைந்து போக்குவரத்து அனைத்தும் தேக்கமடைந்த நிலைக்கு வருவதாக அறிகின்றேன். நாட்டில் தற்போது இயல்பு நிலை காணப்படுகின்றது.

வர்த்தக சங்கங்கள், அரச மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகள் ஆகியோருடன் நான் நடத்திய கலந்துரையாடலுக்கமைவாக வட மாகாணத்தின் நகரங்களிலுள்ள கடைகள் அனைத்தும் இரவு 10 மணிவரை முழுமையாக இயங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி அறிவுறுத்தியுள்ளேன்.

கடைகள் அனைத்தும் திறந்திருப்பதோடு பொது மக்களுக்கான சேவைகள் அனைத்தும் முழுமையாகக் கிடைக்கக்கூடிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும். இதை சகல உள்ளூராட்சி சபைகளும் நகர சபைகளும் முன்னெடுப்பதோடு இதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தித்தருமாறு அரச மற்றும் தனியார் போக்குவரத்து சபைகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். அதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன், என்றுள்ளது. (ஒ,5)


10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இரத்தினம் பொன்னம்பலம்

பிறப்பு
05.08.1945

இறப்பு
06.08.2010

திதி: தேய்பிறை ஏகாதசி (15.08.2020)

ஆண்டவன் தன்னோடு அழைத்துக்கொண்டு
ஆண்டுகள் பத்து ஆனதே! அப்பா எங்கள் வாழ்வை உயர்த்தி
குடும்பத்தின் தலைவனாய் நிறைவான வாழ்வை வாழ்ந்து
அமரத்துவமடைந்த உங்கள் ஆத்மாவை
எம் நெஞ்சமதில் வணங்கி உங்கள்
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

இரத்தினசிங்கம் கனகசிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கையும் நீர்வேலி வடக்கையும் வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினசிங்கம் கனகசிங்கம் நேற்று (14.08.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சின்னம்மா அவர்களின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சற்குணபாலன், சந்திர பாலன், சூரிய பாலன் மற்றும் இந்திரபாலன், சிவபாலன், நவரஞ்சினி, நவபாலன், ஜெயரஞ்சினி, ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயானந்தன், (சிவானந்தன்), முருகானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைச்செல்வி, கௌசல்யா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜெயராஜ், தனஜா, லாவணியா, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை, அவரது இல்லத்தில் 9.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(J/12787)

தகவல்,
குடும்பத்தினர்.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NS 160 Pulsar 2500 km
ஓடிய புதிய மோட்டார் சைக்கிள்
(Motor Bike)
விற்பனைக்குண்டு.
077 947 5996

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு
அண்மையில் 2.3 பரப்பு காணி
விற்பனைக்குண்டு.
[நீர்வேலி தெற்கு]
தொடர்பு:- 076 697 2287


## தடைகளைத்...

இடங்களில் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது சிறிலங்கா வான் படை நடத்திய குண்டுவீச்சில் 54 மாணவிகள் உட்பட 61பேர் துடிதுடித்துப் பலியாகினர். இந்தக் கொடூரத் தாக்குதல் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் வருடந்தோறும் வள்ளிபுனம் இடைக்காட்டுச் சந்தியில் நடைபெறுவது வழமை. பிள்ளைகளை இழந்த பெற்றோரும், உறவுகளும் சுடரேற்றி, மலர் தூவி கண்ணீர் விட்டுக் கதறி நினைவேந்துவர்.

வழமைபோன்று செஞ் சோலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகளை நேற்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ராஜபக்சக்கள் பதவியேற்றுள்ள நிலையில், முள்ளிவாய்க்கால்நினைவேந்தலுக்கு பொலிஸார் ஊடாகத் தடைவிதிக்கப்பட்டதைப் போன்று, இந்த நினைவேந்தலை நடத்துவதற்கும் பொலிஸார் தடை விதித்திருந்தனர். நினைவேந்தலை நடத்தினால் கைது செய்யப்படுவீர்கள் என்று ஏற்பாட்டாளர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

**செஞ்சோலை**

தாக்குதல் இடம்பெற்று மாணவிகள் சாவைத் தழுவிய செஞ்சோலை வளாகம் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ளது. அதற்கு அருகில், அந்த வாளகத்துடன் இணைந்த பகுதியில் நினைவுகூரல் நேற்றுக் காலை 6.45 மணிக்கு இடம்பெற்றது. சிறிலங்கா வான் படையின் குண்டு வீச்சு இடம்பெற்ற நேரத்தில் நேற்று நினைவு கூரலை, வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்தனர்.

நினைவேந்தலைத் தடுக்கும் நோக்கில் தேவிபுரம், இடைக்கட்டுவீதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அந்த இடத்தில் ஆயுதம் தாங்கிய படையினரும் பிரசன்னமாகியிருந்தனர். கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

**இடைக்கட்டுச் சந்தி**

அதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து வள்ளிபுனம் சென்ற எம்.கே.சிவாஜிலிங்கம் இடைக்கட்டுச் சந்தியில் பொலிஸாரின் கட்டுப்பாடுகளை மீறி நினைவேந்தல் நடத்தினார். அந்த இடத்தில் நினைவேந்தலை நடத்த வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தியபோதும், அதை மீறி வழமையாக நினைவேந்தல் நடக்கும் இடத்திலேயே சிவாஜிலிங்கத்தால் நினைவேந்தல் நடத்தப்பட்டது.

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வு நேற்று இடம்பெற்றது. செஞ்சோலையில் உயிரிழந்தவர்களுக்கு, சபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் கையில் மெழுகுதிரி ஏற்றி அக வணக்கம் செலுத்தினர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோருக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு அருகில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. நினைவுச்சுடரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்றினார்.

**பல்கலைக்கழகம்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று மதியம் 12.30 மணியளவில் செஞ்சோலையில் உயிரிழந்த மாணவிகள் நினைவாக சுடர் ஏற்றி அஞ்சலிக் கப்பட்டது. இதில் பலர் கலந்து கொண்டனர்.

(எ.ஒ.19,213,20)


## காணி தேவை

யாழ். மாவட்டத்தில் காணி தேவை.
2 - 3 பரப்பு விரும்பத்தக்கது
077 400 1836

## கார் தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள
ALTO கார் தேவை.
தொடர்பு:- 077 625 8242

# ராஜ் ஜுவல்லர்ஸ்
## அடகு பிடிப்பவர்கள்

1 பவுண் - 22 கரட்டிற்கு
78,000/=

**முக்கிய அறிவித்தல்**

01.11.2018 ஆம் திகதிதொடக்கம் 30.09.2019 இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகுகளை (பற்றுச் சீட்டு இலக்கம் 21000 தொடக்கம் 38 000 வரை) 30.09.2020 ஆம் திகதிக்குள் மீட்டுக்கொள்ளவும். அல்லது தற்போதைய தங்கத்தின் அதிகரித்த பெறுமதிக்கேற்ப வட்டியுடன் சேர்த்து புதுப்பித்துக்கொள்ளலாம். தவறின் 30.09.2020 ஆம் திகதிக்கு பின் அவை விற்பனை செய்யப்பட்டு விடும். பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது.

இல. 31 C ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி
(சந்தைக்கு அருகில்)
021 221 7287, 076 636 1238

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு உடையார்
லேனில் நிலப்பரப்பு 01குளி 14
கொண்ட காணி விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:- 077 3058 782

## விற்பனைக்கு

விளக்குமாறு, அகப்பை,
திருவுபலகை வியாபாரிகள்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்
கொள்ளலாம்.
தொடர்பு:-
076 742 1536, 077 559 1778



## அறைகள் வாடகைக்குண்டு

யாழ். கலட்டி சபாபதி வீதியில்
(யாழ். பல்கலைக்கழகத்திற்கு
அண்மையில்) வீட்டுடன் கூடிய 03
அறைகள் வாடகைக்குண்டு.
மாணவர்கள் விரும்பத்தக்கது.
தரகர் தேவையில்லை.

076 497 3040

## யாழ் திரைப்படக் கல்லூரி
Jaffna Film College

யாழ்ப்பாண திரைப்படக் கல்லூரி 2020ஆம் ஆண்டுக்கான குறும்பட ஆவணப்பட கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. வாரநாட்கள் வார இறுதி நாட்கள் என இரண்டு பிரிவுகளாக மேற்படி கற்கை நெறிகளும் முறையே ஆறுமாத காலம் ஒருவருட காலம் என நடைபெற உள்ளன. கற்கை நெறியின் நிறைவில் Diploma in film making என்ற அரச அங்கீகாரம் பெற்ற பட்டச்சான்றிதழ் வழங்கப்படும். குறித்த கற்கை நெறியில் ஆர்வமுள்ள மாணவர்கள் 15.08.2020 முன்னர் எமது அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்

021 222 4550 / 0761380212

யாழ் திரைப்படக் கல்லூரி / Jaffna Film College
No 15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna

## யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை

01. மேசன் - ரூபாய் 1600.00
02. லேபர் - ரூபா 1200.00 (மேசன் உதவி)

தேவைப்படின் உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 724 5399
(திங்கள் முதல் - சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

## மீண்டும் யாழ். திருமலை பஸ் சேவை

மீண்டும் புதுப்பொலிவுடன் **17.08.2020** தொடக்கம்
**K.P.Travels** இன் **யாழ்ப்பாணம் -
திருகோணமலை பஸ் சேவை ஆரம்பம்.**
தினசரி காலை யாழ்ப்பாணத்தில் **7.45க்கு** புறப்படும்
மாலை **4.45Pm** திருகோணமலையில் இருந்து
புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்தடையும்.
**(கட்டணம் சாதாரணம்)**
தொடர்பு:- 077 373 7462, 077 630 9888


**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**2017/ 2018ம் கல்வியாண்டின் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மற்றும் முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் தொடர்பான அறிவித்தல்**

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கல்வி பயிலும் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு நாடகமும் அரங்கியலும் மற்றும் கர்நாடக இசைத்துறை மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 26.08.2020 (புதன்கிழமை) தொடக்கம் நடைபெறவுள்ளன.

அத்துடன் முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு நடனத்துறை மற்றும் கட்புலதொழில் நுட்பக்கலைத்துறை மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 26.08.2020 (புதன்கிழமை) தொடக்கம் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகள் நிறுவ கத்தின் இணையத்தளத்தில் **(www.svias.esn.ac.lk)** பதிவேற்றப்படும்.

**பிரதிப் பதிவாளர்**
**சு.வி.அ.க.நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**14.08.2020**


# உடனடி வேலை வாய்ப்பு

இலங்கையின் பிரபல வங்கி ஒன்றின் உப நிதி நிறுவனம் ஒன்றிற்கான 2020 ஆண்டிற்குரிய பின்வரும் பதவிகளிற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி - 01**

நிதி ஆலோசகர் **(Finacial Advisor)**

- **G.C.E** சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தி (கணிதம் உட்பட)
- பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்
- பகுதி நேர பணிக்கு ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்

**பதவி - 02**

**வியாபார நிறைவேற்று அதிகாரி (Senior Sales Executive)**

- **G.C.E** சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தி (கணிதம் உட்பட)
- வேறு நிதி நிறுவனங்களில் அனுபவமுள்ளவர்க்கு முன்னுரிமை
- **G.C.E** உயர்தரம் 3 பாட சித்தி
- பட்டதாரிகளிற்கு முன்னுரிமை
- சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**விண்ணப்ப முடிவு திகதி** 23.08.2020

பதவி தொடர்பான விவரத்தை விண்ணப்ப கடித மேல்உறையில் குறிப்பிடவும் மேற்படி பதவிகளிற்கான விண்ணப்பத்தை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பவும்.

விளம்பர இல - JF -1022
மே.பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உளமார வாழ்த்துகின்றோம்




Congratulations

Best Wishes

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்
**மாண்புமிகு கடற்தொழில் அமைச்சர்**
**டக்ளஸ் தேவானந்த**
அவர்கள் பதவியேற்றதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் உளம் மகிழ்ந்துபாராட்டுவதுடன் எங்களது ஆதரவையும் தெரிவிக்கின்றோம்.

தங்கள் அன்புக்குரிய
குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச்சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா முருகையா

தோற்றம் 25.08.1948 — மறைவு 15.08.2019

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பா !

நீள்வளவு,
தும்பளை, பருத்தித்துறை — குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் புஸ்பதேவி மகாதேவன்

அன்னை மடியில்
01.03.1947

ஆண்டவன் அடியில்
28.07.2019

திதி:- (15.08.2020)
சனிக்கிழமை


அம்மா எம் கனவில் கலந்த உங்கள் எல்லையற்ற நினைவுகள் நிழலாக நிற்கின்றன
உங்களை இழந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு முகமும் நேசப் புன்னகையும்
எம்மைவிட்டு மறையவில்லை வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத் தோட்டத்தில் பூத்துக்கொண்டே இருக்கும்.

உங்கள் நினைவில் வாடும்
அன்புமிகு கணவர் - மகாதேவன்,
பாசமிகு மகன் - மகாகேதீஸ்வரன்,
பண்புமிகு மருமகள் - சிவனேஸ்வரி
மற்றும் குடும்பத்தினர்.

"இலக்குமி வாசா"
காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
021 226 5792

## மரண அறிவித்தல்

### செல்லையா மகாதேவா



தோற்றம் 17 – 10 – 1945

மறைவு 14 – 08 – 2020

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகாதேவா நேற்று (14.08.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் பாலசுப்பிரமணியம், பரமநாதன், கந்தசாமி, ஜெயகாந்தன், மகேந்திரன், தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காந்திதேவியின் அன்புக் கணவரும், சுரேந்திரன், ரஜனி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (ஆசிரியை, யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) மகேஸ்வரன், சிவானந்தன் ஆகியோரின் மாமனாரும், அபிநயன், ஆதித்தன், சகானா, துஷன், கஜானன், விதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0772920285

வேலணை மேற்கு,
வேலணை. (J/12792)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராஜேஸ்வரி பொன்னம்பலம்



மலர்வு
18.03.1948

உதிர்வு
17.08.2017


திதி: அபரபக்க ஏகாதசி
(15.08.2020)

குடும்ப குல விளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!
மூன்றாண்டு சென்றாலும் ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
இன்றும் எமை வழிநடத்திச் செல்லும் எம் தெய்வமே!
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்

இல.401/ 5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
மகன்:- பொ.அதீசன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### திருத்தணிகை நவரத்தினம்

(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி, தெல்லிப்பளை)

பிறப்பு : 26.06.1938
இறைவன் அடியில்: 18.07.2020

எங்கள் அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உற்றபணி செய்து உறுதுணையாக இருந்து ஆறுதல் நல்கி அஞ்சலி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 8/2, கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

அருட்சகோதரி

### மேரி விக்ருவார் லெம்பேட் தி.கு



வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி விக்ருவார் லெம்பேட் தி.கு (14.08.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிப்பயண வழிபாடு (15.08.2020) சனிக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121,பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



16.07.2020 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### திருமதி மார்க்கண்டு அரசம்மா

அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.08.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கந்தசாமி கோவிலடி,
கோப்பாய் வடக்கு.

குடும்பத்தினர்.


## புதிய...

புதிய பீடாதிபதியாக பேராசிரியர் பாலசுந்தரம் நிமலதாசன் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீட சபை அவரை தெரிவு செய்தது. கணக்கியல் துறை பேராசிரியரான அவர், 43ஆவது வயதில் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திறந்த மற்றும் தொலைக் கல்வி அலகின் பணிப்பாளரும் கணக்கியல் துறையின் பேராசிரியருமான பாலசுந்தரம் நிமலதாசன், மிகக் குறைந்த வயதில் (வயது- 38) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் பேராசிரியராகத் தெரிவாகியவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகப் பட்டதாரியான அவர், ராஜரட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் பட்டதாரியாகவும் பங்களாதேஷ்; சிட்டாக்கொங் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2005ஆம் ஆண்டு விரிவுரையாளராக தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்த பாலசுந்தரம் நிமலதாசன், 2010ஆம் ஆண்டில் முதுநிலை விரிவுரையாளராகவும் 2015ஆம் ஆண்டில் பேராசிரியராகவும் உயர்வடைந்தார். (ஓ.5)

## முன்னணிக்குள்...

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் அந்தக் கட்சியின் தலைவர் மற்றும் செயலரால் வெளியிடப்படவில்லை என்றபோதும், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கூடிய மத்திய குழு, சட்டத்தரணி வி.மணிவண்ணனை முன்னணியின் பதவி நிலைகளிலிருந்து நீக்கும் முடிவை எடுத்தது. இந்தக் கூட்டத்துக்கு மத்திய குழு உறுப்பினரான சட்டத்தரணி வி.மணிவண்ணன் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இம்முறையும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. மூன்றாவது முறையாகவும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் போட்டியிட்டார். தேர்தலின் போது கட்சித் தலைமையால் மணிவண்ணன் ஓரங்கட்டப்பட்டிருந்தார். மணிவண்ணன் கட்சியுடன் கூட்டாக இணைந்து செயற்படாமல் தனித்துச் செயற்படுவதாக தலைமையால் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தப்பட்டு வந்தது. தேர்தல் காலத்திலேயே கட்சிக்குள் மோதல் நிலைமை ஏற்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னர், தேசியப் பட்டியல் தொடர்பில் முடிவெடுக்கும் கூட்டத்துக்கோ அல்லது முன்னணியின் ஏனைய அரசியற் செயற்பாட்டுக் கூட்டங்களுக்கோ மணிவண்ணன் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில், பதிவு செய்யப்படாத அரசியல் கட்சியாக இயங்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் மணிவண்ணன் நாடாளுமன்றத் தேர்தலின் போது கட்சிக்காக வாக்குச் சேகரிப்பில் ஈடுபடாமல் தனக்கான வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக கட்சியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளிலிருந்து அவரை நீக்குவது என்றும், அவரது ஆதரவாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தாலோ, கட்சியின் செயலர் செல்வராஜா கஜேந்திரனாலோ ஊடகங்களுக்கு எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. அவர்களைத் தொடர்பு கொள்வதற்கு பலமுறை முயற்சித்த போதும் பதிலளிக்கவில்லை.

அதேவேளை, கட்சியின் மத்திய செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானமும், மணிவண்ணனுக்கு நேற்று இரவு வரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. கட்சியின் உத்தியோகபூர்வ தீர்மானம் கிடைத்த பின்னரே தனது நிலைப்பாட்டை தெரிவிப்பதாக மணிவண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கட்சியின் மத்திய செயற்குழுவின் முடிவு சமூக ஊடகங்களில் நேற்றுக் காலையே வெளியாகியிருந்தது. இந்தத் தகவல் பரவ ஆரம்பித்ததும், மணியின் ஆதரவாளர்கள் அவரது அலுவலகத்தில் குவிந்தனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மணிவண்ணனுக்காக அந்தக் கட்சியை ஆதரித்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள், அவருக்கு ஆதரவாக சமூகவலைத் தளங்களில் கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். மணிவண்ணன் கட்சியிலிருந்து விலகுவாரானால், முன்னணியின் சரிவுக்கு இதுவே ஆரம்பமாகும் என்றும் பதிவிட்டுள்ளனர்.

இதற்கிடையில், மணிவண்ணன் தொடர்பான கட்சியின் நிலைப்பாட்டால் எழுந்துள்ள எதிர்ப்பையடுத்து, கட்சியின் பொதுச் செயலர் கஜேந்திரன் வீட்டில் கட்சியின் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் நேற்று இரவு மூன்று மணி நேரம் சந்தித்துப் பேச்சு நடத்தினர். மணிவண்ணனுடன் சமரச முயற்சிக்கான வாய்ப்புக்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ஒ.5,26)

## பிரிந்து...

தமிழ்க் கட்சிகளுக்கும் கொடுத்துள்ளார்கள். நாடாளுமன்றத்திலாவது நாங்கள் ஒன்றாக இருப்போம். வீரப் பேச்சுக்கள் பேசுவதில் அர்த்தம் இல்லை. மக்களை நேசிக்கின்ற மக்களின் விடுதலையை நேசிக்கின்ற அத்தனை பேரும் ஒரே அணியில் நாடாளுமன்றத்தில் ஒன்றிணையவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

செஞ்சோலை படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்ச கும்பல் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுவிட்டோம் என்ற அகந்தையில் இருக்கின்றார்கள். எங்கள் மக்களை கொன்றொழித்த இவர்கள் மீண்டும் அடக்குமுறைக்குள் தள்ள முற்படுகின்றார்கள். இந்த நினைவேந்தலை தடுக்கும் முயற்சி அதன் ஆரம்பம்தான்.

சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக முப்படையினரின் அடக்கு முறைகளை தமிழர் தேசத்தில் ஏவி விட்டிருக்கின்றார்கள். தேர்தல் பரப்புரையின் போதே இதனை எச்சரித்திருந்தோம்.

நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவு ஊடாக மக்கள் எங்களுக்கு அபாயச் சங்கை ஊதியிருக்கின்றார்கள்.

தமிழர் தேசத்தில் கோத்தாபய ராஜபக்சவின் கால்கள் ஆழமாக பதிய அனுமதிக்க முடியாது.

எதிர்காலத்தில் மாவீரர் நினைவு நாளாக இருக்கட்டும், இந்த மண்ணுக்காக உயிர் நீத்த எந்த தியாகிகளினது நினைவு நாளாக இருக்கட்டும், மக்கள் ஆதரவுடன் அதனைப் பெருமெடுப்பில் எல்லாத் தடைகளையும் தாண்டி நினைவுகூருவோம், என்றார். (ஒ.5,19)

## முதுபெரும்...

அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவர் தனியார் மருத்துவமனையொன்றில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

நேற்று இரவு 8 மணியளவில் சமூக வலைத்தளங்களில் எஸ்.பி.வி இறந்துவிட்டார் என்று தகவல்கள் வெளியாகின. எனினும் அவை வதந்திகள் என்று மருத்துவமனை அறிவித்தது. எஸ்.பி.பியின் மகனும் அவ்வாறான செய்திகளை மறுத்ததுடன் தனது தந்தை தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவித்தார். (ம)

## தமிழர்களின்...

நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

செஞ்சோலையில் கொல்லப்பட்ட மாணவிகளின் நினைவேந்தலை தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இறந்த தமது உறவுகளை நினைவுகூர்வதைத் தடுப்பது மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல். விமானக்குண்டு வீச்சில் இறந்தது பாடசாலை மாணவிகள் என்று தெரிந்த பின்னரும் அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுப்பது மனித உரிமை மீறல்.

இறந்த ஆன்மாக்களை நினைவுகூர சுதந்திரம் வழங்க மறுக்கும் இந்த அரசு நாட்டில் எப்படி நல்லிணக்கத்தைக் கொண்டுவரும்? சமாதானத்தை எப்படி ஏற்படுத்தும்? தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வை எப்படி வழங்கும்?

ஆயுதம் தாங்கிய படைகளைப் பயன்படுத்தி சர்வாதிகார வழியில் இந்த அரசு பயணிக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இது நாட்டுக்கு நல்லதல்ல. இதற்கான பெரிய விளைவுகளை இந்த அரசு எதிர்நோக்க வேண்டி வரும், என்றனர். (ஒ,5,22)

## பூர்வீக...

கப்பட்டுள்ள தமது பூர்வீக விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகளை விடுவித்துத் தருமாறு கோரி கொக்கிளாய்ப் பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அருகாமையிலிருந்து பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில், மக்கள் ஊர்வலமாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்வரை சென்றனர்.

'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனக் கோசம் எழுப்பி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

காணிவிடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கான மனுக்களை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கையளித்தனர்.

### மனு

அந்த மனுவில், கொக்கிளாய் மக்களின் வயல்காணிகளையும் வாழ்வாதார குடியிருப்பு காணிகளையும் இலங்கை கனியவள நிறுவனம் அபகரித்துள்ளது. அதேபோல் கடற்படையினரும் தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரித்து முகாம் அமைத்து வருகின்றார்கள். மறுபக்கத்தில் தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த சிங்கள மீனவர்கள் தமிழர்களின் குடியிருப்பு காணிகளையும் வாழ்வாதார காணிகளையும் சட்டத்துக்குப் புறம்பான வகையில் அடாத்தாக பிடித்து வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அரசும் படையினரும், கடற்படையினரும் திரைமறைவில் எமக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் ஊரை விட்டு அகதிகளாக வெளியேறிவிடும் பரிதாப நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது, என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (ஒ,5,19,246)

## தேசியப்...

யின் அரசியற் செயற் குழுக் கூட்டம் திருகோணமலையிலுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வீட்டில் இன்று காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. அரசியற் செயற் குழுவில் 9 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம், கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசாவுக்குத் தெரியாமல் வழங்கப்பட்டமையால் கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரம் இன்றைய அரசியற் செயற் குழுக் கூட்டத்தில் ஆராயப்படாது என்று தெரியவருகின்றது.

இதேவேளை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு வலியுறுத்தும் கோரிக்கை முன்வைக்கப்படும் என்றும் அறியமுடிகின்றது. (ஒ,5)

## 11/2 லட்சம்...

பட்டதாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி ஒரு லட்சம் தொழில் வாய்ப்புக்களுக்காக பொருத்தமானவர்களை குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பணிகள் செப்ரெம்பர் 2ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரி தெரிவு செய்தல் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. குறைந்த வருமானம் கொண்டவர்கள் ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்காக பல்துறை அபிவிருத்தி செயலணி நிறுவப்பட்டது. ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின்படி வறுமையற்ற இலங்கை நாட்டை உருவாக்குவதே இவ் வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

தேர்தல் காரணமாக இந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில், தொழில் பெறும் பட்டதாரிகளின் பெயர் பட்டியல் எதிர்வரும் திங்கட்கிழமை அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இணையத்தளத்தில் வெளியிடப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அமைச்சால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நியமனம் பெறுபவர்கள் செப்ரெம்பர் 2ஆம் திகதி தமக்கு அருகில் உள்ள பிரதேச செயலகத்துக்கு சமூகமளிக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட ஒரு லட்சம் பேருக்கான தொழில்களில் அமர்த்துதல் அந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக நிறுவப்பட்டுள்ள செயலணியின் மூலம் செப்ரெம்பர் 2ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும், என்றுள்ளது. (ஒ,5)

## பொலிஸ்...

அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரி. வித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சில் கடமைகளை நேற்றுப் பொறுபேற்றுக் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு அமைய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு கடும் அழுத்தங்களை கொடுத்து வருகிறது.


வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால், பொலிஸ் திணைக்களம் துண்டுகளாக பிளவுபடும். மாகாண பொலிஸ் மா அதிபர்கள் உருவாவார்கள், என்றார். (எ,ஒ)

# புதிய உத்வேகத்துடன் இனி தபால் சேவைகள்

## உறுதியளிக்கின்றார் வியாழேந்திரன்

**கொழும்பு, ஓக.15**

**புதிய தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு, பல பரிமாணங்களைத் தபால் சேவையினுள் புகுத்தி, புதிய உத்வேகத்துடன் தபால் சேவைகள் கொண்டு செல்லப்படும் என்று, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.**



தபால் சேவைகள், வெகுசன ஊடகவியலாளர்கள் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அவர், தபால் சேவைகள் திணைக்களத்தில் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த நாட்டை, சகல துறைகள் சார்ந்தும் சுபீட்ச நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கமைய, புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் தபால் சேவையை, உலகத் தரம் வாய்ந்த ஒரு நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பது ஜனாதிபதியின் நோக்கமாக உள்ளதுடன், மக்களுடைய காலடிக்கே கொண்டு சென்று விரைவாகச் செயற்படுத்தக்கூடிய சேவையாக இதனை மாற்றியமைக்க வேண்டும் என்பது அனைவரது நோக்கமாகவும் உள்ளது. ஆகவே, இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ள நான், புதிய உத்திவேகத்துடன், தபால் சேவையைக் கொண்டு செல்வேன். இதற்காக தபால் சேவையில் உள்ள உயர் அதிகாரிகள், துறைசாந்த வல்லுநர்களின் உதவிகளையும் அத்துறையில் இருந்து ஓய்வுபெற்றோரது அனுபவங்களையும் பெற்றுக்கொள்வேன். அத்துடன், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெடிலவின் ஆலோசனை, உதவியுடன், தபால் சேவையை வினைத்திறன் மிக்கதாகக் கட்டுயெழுப்புவேன். இதற்காக, 5 வருட செயற்றிட்டத்தை நாம் உருவாக்கி, அதனூடாக தபால் சேவையைக் கட்டியெழுப்புவோம்-என்றார். (ஐ)

# மீம்ஸூக்கு நன்றி கூறிய ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஓக. 15



பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, "மாத்தறை சந்தையில் வடை சுடும் ஹந்துன்நெத்தி" என்று வெளியிடப்பட்ட புகைப்படப் பதிவு குறித்து ஹந்துன்நெத்தி பதில் அளித்துள்ளார்.

இது தொடர்பில் ஹந்துன்நெத்தி தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

"இன்று காலையில் இந்தப் பதிவைப் பார்த்தேன். நான் தோல்வியடைந்த பின்னர் செய்யும் வேலை என்றுதான் இந்தப் புகைப்படப்பதிவையாரோ ஒருவர் வெளியிட்டுள்ளார். எனினும், அதனை பதிவிட்ட நபருக்கு எனது நன்றிகள் ஏனென்றால், நான் மத்திய வங்கியில் கொள்ளையடிப்பது போன்ற பதிவொன்றை இடாமல், வடை சுட்டு விற்பது போன்ற படத்தை வெளியிட்டமைக்கு நன்றிகள். உண்மையில் நான் இதனை விரும்புகின்றேன்" என்று அவர் பதிவிட்டுள்ளார். (ப)

# சவால்களை எதிர்கொள்ள அமைதி தேவை

கொழும்பு, ஓக. 15

கடுமையான சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்ட பின்னர், அதன் உச்ச பிரதிப்பலன்களைப் பெற்றுக்கொள்ள சிறிது காலம் அமைதியாகக் காத்திருக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, அன்றைய ராஜபக்ஷ அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சிகளுடன் இரகசியமான அரசியல் உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு, அந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்தார். ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய தினத்திற்கு முதல் நாள் கூட அவர் எந்த மாற்றங்களையும் காட்டிக் கொள்ளாது அலரி மாளிகைக்குச் சென்று அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அப்பம் சாப்பிட்டு விட்டு திரும்பியதாகக் கூறப்படுகிறது. (ப)

# நாமலின் கீழ் 7 நிறுவனங்கள்

கொழும்பு, ஓக. 15

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் அதிகார வரம்பின் கீழ் ஏழு நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய அமைச்சரவையில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். அவருடைய ஆதிக்க வரம்பின் கீழ் வரும் நிறுவனங்களின் பட்டியல் வெளியாகியுள்ளது. அந்தப் பட்டியலின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் படையணி, இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு நிறுவகம், தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையம், மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், ஸ்மார்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் ஆகிய ஏழு நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதேவேளை எதிர்வரும் 18ஆம் திகதி நாமல் ராஜபக்ஷ தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# அமெரிக்காவிலிருந்து கொழும்புக்கு விமானத்தில் வந்த போதைப் பொருள்

கொழும்பு, ஓக. 15

அமெரிக்காவிலிருந்து கொழும்பு முகவரிக்கு அனுப்பப்பட்ட மர்மப் பொதி ஒன்றில் போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அந்தப் பொதி மீட்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் சோதனையிட்டபோது இந்தப் பொதியில் ஒரு வகையான போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

67 கிராம் குஷ் கஞ்சா என்ற போதைப்பொருள் அதில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 4 லட்சம் ரூபாய் என குறிப்பிடப்படுகின்து. அந்தப் போதைப் பொருளுக்கு இளைஞர்கள் மிக வேகமாக அடிமையாகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இது இளைஞர்களுக்கு மத்தியில் வேகமாகப் பரவும் போதைப் பொருள் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போதைப்பொருள் ஆபத்தான பொருளாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்தப் போதைப் பொருள் பொதி இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ப)

# இலங்கையரை அழைத்து வர விரிவான திட்டம்

## அமைச்சின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 15

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் வேலைத்திட்டங்கள் விரிவுபடுத்தப்படவுள்ளன என்று வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

94 நாடுகளில் இருந்து 20, 850 இலங்கையர்கள் இதுவரையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். எதிர்வரும் வாரங்களில் மத்திய கிழக்கு மற்றும் மாலைத்தீவில் உள்ள இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடுகளில் வாழும் பெருமளவான இலங்கையர்கள் தங்களை நாட்டுக்கு அழைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அவர்களை அழைத்து வருவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு அழைக்குமாறுகோரி இது வரையில் 50 ஆயிரம் இலங்கையர்கள் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர்-என்றார் (ப)

# வர்த்தகர்கள் அறுவருக்கு சட்ட நடவடிக்கை

சாவகச்சேரி,ஓக.15

திகதி காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த 5 பலசரக்குக் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் உணவு கையாளும் நிலைய உரிமையாளர் ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மட்டுவில் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் பலசரக்குக் கடைகளில் சுகாதார திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

ஐந்து உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் 14 பலசரக்குக் விற்பனை நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 6 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

# பாகிஸ்தான் தடுமாற்றம்: மழையும் கணிசமான குறுக்கீடு!



லண்டன், ஓகஸ்ட் 15

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாவது நாள் நிறைவில் பாகிஸ்தான் அணி 9 இலக்குகளை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மழை மற்றும் மந்தமான வெளிச்சம் ஆட்டத்தில் கணிசமான இடையூறை ஏற்படுத்துகின்றன.

சவுத்தாம்டன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றபாகிஸ்தான் முதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல் நாள் நிறைவில் பாகிஸ்தான் அணி 5 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அசாம் 25 ஓட்டங்களுடனும் ரிஸ்வான் 4 ஓட்டங்களுடனும் நேற்றுக் களமிறங்கினர். 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அசாம். ரிஸ்வான் மறுமுனையில் நிலைத்துநின்று அரைச்சதம் கடந்தார். ஆனால் அவருக்குத் துணையாக எவரும் நிலைத்து நிற்கவில்லை. மளமளவென இலக்குகள் சரிந்தன. நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 9 இலக்குகளை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரிஸ்வான் 60 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)

## மரண அறிவித்தல்



பிறப்பு
27 . 02 . 1935

இறப்பு
14 . 08 . 2020

### திருமதி மங்கையற்கரசி தியாகராஜா

சங்குவேலி வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும், **Dutch Road, Sandilipay**யை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி தியாகராஜா நேற்று (14.08.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னப்பு - தெய்வானை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பு தியாகராஜா (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அருமை மனைவியும், **Dr.**தயாபரணி **(Teaching Hospital, Jaffna)**, தயாளன் **(Managing Partner - T-Link Digital Solutions)**, தயாளினி **(Accountant, Yarlco Thirunelvely)**இன் அருமைத் தாயாரும், **Eng** பாரதிதாசன் **(DGM North - NWSDB Project Director - JKWSSP)**, சுபாஷினி **(Teacher, Methodist College Colombo - 03)** ஆகியோரின் மாமியாரும், தனுஷன் **(Manipay Hindu College)**, யதுசா, **(Vembadi Girls' High School)**, கிஷான் **(s Thomas College Mount Lavinia)**, இஷானி **(Methodist College Colombo - 03)** ஆகியோரின் அருமை பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் **Dutch Road, Sandilipay**யில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக காட்டுப்புலம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- மக்கள், மருமக்கள், குடும்பத்தினர்.**

**Dutch Road, Sandilipay.**

**மகன் - 076 6266 339, மருமகன் - 077 7871 235**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
15 . 01 . 1945

உதிர்வு
18 . 07 . 2020

### பெரிச்சி அழகம்மா

கடந்த 18.07.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் பெரிச்சி அழகம்மா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15.08.2020) சனிக்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியை நிகழ்வு எதிர்வரும் (17.08.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**இல.11, விவேகானந்த நகர் மேற்கு, கிளிநொச்சி.**

**மகன் - சிவகுமார் (ராசன்)**
**மயிலன் பல்பொருள் வாணியம்.**
**077 280 2398**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யும் பணிப்பெண் தேவை.

**077 232 0354**

**வேலைக்கு ஆள்தேவை (பெண்கள்)**

- **Designer - Salary - 40,000** (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- **Typist - Salary - 25,000** (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

**077 158 7186, 071 793 9246**

**E.S Printers**

மக் பிரிண்ட் (MUG) 450/=

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472

esprintersjaffna@gmail.com

# THREE INTO QUIN QUIN




**PARIMALA - ANNALINGAM S.L.E.A.S**

**DEATH ANNIVESARY OF EX - PRINCIPAL-**
**MRS. PARIMALA ANNALINGAM**

WITH DEEP SORROW WE REMEMBER HER PASSING AWAY FIFTEEN YEARS AGO

*RELATIVES AND FRIENDS*

S.K. ANNALINGAM
(J.P- HUSBAND)SON -IN-LAW
CHILDREN AND GRAND CHILDREN
**107/2,MORRIS LANE,**
**CHUNDIKULI, JAFFNA**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 24

*அரசரின் முன்னே அமைச்சுப் பெறவென வந்தோரே*
*வரிசையில் வந்து தருவதைப் பெறுமின் – பரிகசிக்கும்*
*'பற்றிக்' துணிக்கும் அமைச்சுண்டாம் நல்லிணக்கத்துக்கோ*
*நெற்றிக் கண் திறந்தாலும் ஏதும் கிடையாதே காண்!*

*ஒட்டுக்குழுச் சுவாமிகள்*


சஞ்சீவி
Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 ஆடி 31 சனிக்கிழமை (15.08.2020) சிகரம் : 9



19
தேர்தலுக்கு
பின்னர்....!

ஓ
லெபனானே!!



20

16
வயதினிலே...!



22

# தமிழ் மக்களின் ஆணை

நிலாந்தன்

சமூகவலைத் தளங்களின் உலகத்தில் மக்கள் ஆணை எனப்படுவது அதன் புனிதத்தை மேலும் இழந்திருக்கிறது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளிலேயே வலதுசாரிகள் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு நிலைமையைக் காணலாம்.

எனவே எல்லா மக்கள் ஆணைகளும் புனிதமானவை அல்ல. ஆனாலும் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை 2009க்கு பின் தேர்தலை விட்டால் வேறு அரசியல் செயல்வழி எதனையுமே தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் கண்டுபிடித்திருக்கவில்லை. எனவே மக்கள் ஆணையைப் பெறவும் மக்கள் அதிகாரத்தைப் பெறவும் தேர்தல்களை விட்டால் வேறு வழியில்லை என்ற ஒரு நிலை.

எனவே சரியோ பிழையோ தேர்தல்கள் மூலம் கிடைக்கின்ற மக்கள் ஆணையைதான் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிலைமை. மக்களை விமர்சனபூர்வமாக சிந்திக்க வைப்பதன் மூலம் வாக்களிப்பில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த தமிழ்க் கட்சித் தலைவர்களில் பெரும்பாலானவர்களால் முடியவில்லை.

தமிழ் வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் பழகிய சின்னத்துக்கும் பழகிய கட்சிக்கும் வாக்களித்து வருகிறார்கள். அல்லது இனம்; மொழி; மதம்; பிரதேசம் ; சமயம் என்று சிந்தித்து வாக்களிக்கிறார்கள். மக்களை கொள்கை ரீதியாக விமர்சன பூர்வமாக சிந்திக்க வைக்கும் தகமையோ அல்லது வழங் களோ பெரும்பாலான தமிழ் கட்சிகளிடம் இல்லை.

ஏன் அதிகம் போவான்?தமிழ் கட்சிகளின் பிரமுகர்கள் உட்பட அவற்றின் அடிமட்டத் தொண்டர்கள் எத்தனை பேர் விமர்சனபூர்வமாக சிந்திக்கக்கூடிய தகைமையை கொண்டிருக்கிறார்கள்? இது ஒரு பிரச்சினை. கட்சிகள் விமர்சன பூர்வமாக சிந்தித்தால் தான் தொண்டர்களை அந்த வழியில் பயிற்றுவிக்கலாம். தொண்டர்களை அவ்வாறு பயிற்றுவிக்கும் ஒருகட்சிதான் மக்களையும் விமர்சனபூர்வமாக சிந்திக்கும் வாக்காளர்களாக மாற்றும். ஆனால் பெரும்பாலான தமிழ்க் கட்சிகளிடம் அவ்வாறான மக்கள் பங்கேற்பு ஜனநாயகம் குறித்த நவீன அரசியல் தரிசனங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்டதோர் துர்ப்பாக்கியமான வெற்றிடத்தில் தான் கிடைக்கின்ற மக்கள் ஆணையை வைத்து அடுத்த கட்டத்தைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த அடிப்படையில் கடந்த ஐந்தாம் திகதி தமிழ் மக்கள் வழங்கிய ஆணையைச் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.


முதலாவதாக கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட ஆணை இப்பொழுதும் தனிப் பெரும் கட்சியாக கூட்டமைப்புதான் காணப்படுகிறது. ஆனால் கடந்த முறை வழங்கப்பட்டதை விட மிகப் பலவீனமான ஒரு மக்கள் ஆணை அக்கட்சிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 11 ஆண்டுகளாக அந்தக் கட்சிதான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக காணப்பட்டது. இப்பொழுது அது சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. அது மட்டுமல்ல அந்த வீழ்ச்சி எந்த வகையானது என்று பார்த்தால் வடக்கில் அக்கட்சி தனது ஆசனங்களை மாற்று அணியிடமும் தென்னிலங்கைக் கட்சிகளிடமும் இழந்திருக்கிறது. வன்னியில் அதை முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் சில தென்னிலங்கை மையக்கட்சிகளிடமும் இழந்திருக்கிறது. கிழக்கில் தனது வாக்கு தளத்தை பிரதேச உணர்வுகளை அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளை முன்னிறுத்தும் தரப்புக்களிடம் இழந்திருக்கிறது.

இதில் மாற்று அணியைத் தவிர்த்து கூட்டமைப்பின் வாக்குத் தளத்தை உடைத்திருக்கும் கட்சிகள் யார் யார் என்று பார்த்தால் அவை பெரும்பாலும் அரசாங்கத்துக்கு சேவகம் செய்யும் கட்சிகளே. எனவே கூட்டமைப்பு தமிழ்தேசிய நோக்கு நிலைக்கு எதிரான தரப்புகளிடம் தனது வாக்குத் தளத்தின் ஒரு பகுதியை இழந்து விட்டது. இதன் பின்விளைவாக கூட்டமைப்பின் இதயமாகக் காணப்படும் தமிழரசுக் கட்சிக்குள் பூசல்கள் அதிகரித்திருக்கின்றன. அக்கட்சியின் தலைமைத்துவதுக்கான போட்டிகள் அதிகரித்துள்ளன. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் தமிழ் மக்கள் கூட்டமைப்பை தமது ஏகபோக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே தமிழ் மக்கள் வழங்கிய ஆகப் பிந்திய ஆணையாகும். அடுத்தது மாற்று அணி. இந்த அணி தனக்குள் ஒற்றுமைப்படவில்லை. ஒற்றுமைப்பட்டு இருந்திருந்தால் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட உட்பூசல்களை வெற்றிகரமாகக் கையாண்டு கூட்டமைப்பைப் பெருமளவுக்குத் தோற்கடித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு தோற்கடிக்க மாற்று அணியால் முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் இரண்டு மாற்று அணிகளும் பெற்ற மொத்த வாக்குகள் 91,230 ஆகும். அதேசமயம் அங்கஜனும் டக்ளஸ் தேவானந்தாவும் பெற்ற மொத்த வாக்குகள்95,170 ஆகும். இது மாற்று அணி பெற்ற மொத்த வாக்குகளை விட அதிகம். எனவே மாற்று அணிக்கு கிடைத்த மக்கள் ஆணை எனப்படுவது தாமரை மொட்டின் நண்பர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் வழங்கிய ஆணையை விடவும் பலவீனமானதா? அதேசமயம் வன்னியில் இரண்டு மாற்று அணிகளும் பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 17,021 ஆகும். ஆனால் வன்னியில் ஈபிடிபி பெற்ற மொத்த வாக்குகள் 11,310 ஆகும். இதன்மூலம் அக்கட்சிக்கு மேலும் ஓர் ஆசனம் கிடைத்தது. அப்படி என்றால் மாற்று அணி ஒன்றுபட்டு நின்றிருந்திருந்தால் அந்த ஆசனம் அவர்களுக்கு தானே கிடைத்திருக்க வேண்டும்? இந்தத் தேர்தலின் மூலம் மாற்று அணி கிழக்கிலும் வன்னியிலும் பலமாகக் கிளை பரப்பவில்லை என்பது தெரியவந்திருக்கிறது. மாற்று என்பது ஒரு யாழ்ப்பாண மைய சிந்தனைதான் என்று குற்றம் சாட்டுபவர்கள்



*(03ஆம் பக்கம் பார்க்க)*

# பசி, பசி, படி



கொரோனாவுக்குப் பெருந்தொற்றால் பூட்டப்பட்ட பாடசாலைகள் கொஞ்சம் கொஞ்சமாக இயங்குநிலைக்குத் திரும்பிவருகின்றன. ஒரே நேரத்தில் சகல மாணவர்களுக்கும் பாடம் நடத்தப்படாமல், கட்டம் கட்டமாகக் கற்றல் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. கடந்த பல மாதங்களாகப் பாடசாலைகள் நடக்காததால், பாடத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தியாக்க முடியவில்லை. இதனால் பாடசாலை நேரம் தரம் 11, 12,13 மாணவர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. கொரோனாவுக்கு முந்திய காலத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு முடிவடையும் பாடசாலை நேரம் இப்போது அவர்களுக்கு 3.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் இருவகையான பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்கொள்கிறார்கள்.

ஒன்று, நீண்டநேரம் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதால் அயர்ச்சியும், பாடங்கள் மீதான வெறுப்புணர்வும் அவர்களிடம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

அடுத்தது, பசி.

மதிய உணவுவேளையையும் தாண்டி கற்றல் நடவடிக்கைகள் நடப்பதால், பெரும்பாலான மாணவர்கள் பசியோடுதான் படிக்கிறார்கள். பாடசாலைக்கு வரும்போதே மதிய உணவை எடுத்துவரும் வசதி எல்லா மாணவர்களுக்கும் இருப்பதில்லை. பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக் 'கன்ரீன்களையே' நம்பியிருந்தனர். ஆனால் கொரோனாப் பாதுகாப்பு நடவடிக்கைகளால் பாடசாலைகளில் 'கன்ரீன்கள்' இயங்க அனுமதியில்லை. ஆகவே வயிற்றைக் காயப்போட்டுவிட்டே காலையில் இருந்து மாலைவரை மாணவர்கள் இருந்தாக வேண்டும்.

'செவிக்குணவில்லாத போது வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்' காலமெல்லாம் வள்ளுவரோடு மலையேறிவிட்டது. வயிறு பசியால் கொதித்துக் கொண்டிருக்க, எப்படி மூளைக்குள் போதிக்கும் விடயங்கள் உள்நுழையும்? குறைந்தபட்சம் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகளில் உணவகங்களைத் திறக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் எவரேனும் நலன்விரும்பிகள் மூலம் மாணவர்களுக்கு சிற்றுண்டிகளையேனும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யலாமே?


- மின்னல்



## திரடி அரங்கு

# கலக்கத்தில் கேடயம்

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளால் 'அப்செட்' ஆனவர்களுள் முக்கியமானவர் கேடயத்தார் தான். கிளிநொச்சியில் அவரது கட்சியின் பிரசாரக் கூட்டங்களுக்கு வந்தவர்களின் எண்ணிக்கையும், கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகளும் கேடயத்தாருக்கு பெரிய நம்பிக்கையைக் கொடுத்திருந்ததாம். அதனால் இந்தமுறை கொஞ்சம் கூடுதலாக வேலை செய்தால் கட்டாயம் எம்.பி ஆகிவிடலாம் என எம்பிக் குதித்துள்ளார். மாற்றம் வரப்போகிறது, கிளிநொச்சி மக்கள் சரியான முடிவை எடுத்துவிட்டார்கள் என்று அவரது அல்லக்கைகள் பேஸ்புக்கில் அலறினார்கள். ஆனால் படுதோல்வி. அத்தோடு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் பதவியை வேறு வீணைக்காரருக்கு கொடுத்துவிட்டார்கள். ஏற்கனவே கேடயத்தார் வீணையில் இருந்து விலகியதால், இந்தமுறை வீணைக்கு ஒரு ஆசனம் கிடைக்குமா என்ற சந்தேகமும் இருந்தது. அந்தளவுக்கு தங்கள் கட்சி சரிந்தமைக்கு கேடயத்தார் தான் முக்கியமான காரணம் என வீணைக்காரர் நம்புகிறார். எனவேதான் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக வரச் சம்மதித்தாராம். தங்களை இத்தனை நாளும் வைச்சு செய்த கேடயத்தாரின் கோட்டைக்குள் புகுந்து, அவர்களை இனி வீணைக்காரர் வைச்சு செய்யப்போகிறார் என்று கதை. இது கேடயக்காரருக்கும் தெரியும். ஒருபக்கம் வாத்தியார், மற்றப் பக்கம் வீணையார் எண்டு ரெண்டுபக்கமும் மாறி மாறி அடிவிழுந்தால், கேடயம் உடையவும் கூடும். அதனால் அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்ற கலக்கத்தில் கேடயக்காரர் இருப்பதாகக் கேள்வி.



# வெற்றியால் வந்த வினை

நீண்டநாள்களாக கொதிநிலையில் இருந்த 'முன்னணி' விவகாரம் இப்போது சந்திக்கு வந்துவிட்டது. தமிழ்த் தேசியக் கொள்கையோடு, முற்றிலும் இளம்ரத்தங்களின் வழிகாட்டலோடு ஒரு மாற்று அரசியல் சக்தியாக உருவெடுத்து வந்த தமிழ்த் தேசிய முன்னணி கடந்த காலங்களில் தேர்தல்களில் தொடர் சறுக்கல்களைச் சந்தித்தது. ஆனால் அந்தத் தோல்விகளெல்லாம் துவண்டுவிடாமல், ஒரே அணியாக நின்று இன்னுமின்னும் தங்கள் கட்சியை வலுப்படுத்தும் பணியை முன்னணி தளராமல் மேற்கொண்டது. ஒரு தேர்தலில் தோற்றாலே தூண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று அரசியல்கட்சிகள் தெறித்தோடும் காலத்தில் எத்தனை தரம் தோற்றாலும் அதைப்பற்றி கவனத்தில் கொள்ளாமல் கட்சிக்காகவும், கொள்கைக்காகவும் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருந்த சைக்கிள்காரர்களின் மனோதிடமும், ஒற்றுமையும் மக்களிடத்தே அவர்கள் மீதான மதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் தோல்விகளின் போது நிகழாத உடைவும், சேறுபூசலும், அரசியல் குத்துவெட்டுக்களும், தேர்தல் வெற்றிகளால் முன்னணிக்குள் நிகழத் தொடங்கியிருக்கின்றன. முன்னணியின் இரண்டாம் கட்டத் தலைவர்களிடம் ஏற்பட்டிருந்த உள்ளக முரண்பாடுகளாலேயே இந்த நிலைமை. முக்கியமாக மணிவண்ணன் சுகாஷ் இருவரும் தேர்தல் காலத்தின் போதே முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதை வெளியே மறுத்தும் இருந்தார்கள். இது குறித்து சுகாஷிடம் நேரடியாக நாம் வினவியிருந்தோம். அதற்கு " எல்லாம் அப்பட்டமான பொய். எங்களுக்குள்ள எந்த முரண்பாடும் இல்லை. நேற்றுக்கூட ஒரே கூட்டத்தில நாங்கள் ரண்டுபேரும்( சுகாஷ¬ம் மணிவண்ணனும்) ஒண்டாக் கலந்து கொண்டனாங்கள். முரண்பாடு இருந்தால் அப்பிடிச் செய்ய மாட்டமே" சத்தியம் செய்யாத குறையாகச் சொல்லி இருந்தார். ஆனால் மணிவண்ணனின் தேர்தல் பரப்புரைகளைக் குழப்பும் வகையில் முன்னணியின் ஒரு சாராரே நேரடியாக ஈடுபட்டதை எம்மால் உறுதிப்படுத்த முடிந்தது.

இப்போது என்னாடாவென்றால், தன்னுடைய முகநூலில் " எனக்கு எதிராக ஒருகுழு வேலை செய்தது. என் மீது திட்டமிட்ட அவதூறுகளைப் பரப்பியது" என்ற சாரப்பட பதிவிட்ட அன்றிரவே முன்னணியின் மத்திய குழுக் கூட்டத்தில் மணிவண்ணனுக்கு கட்சியில் வழங்கப்பட்டிருந்த தேசிய அமைப்பாளர், ஊடகப்பேச்சாளர் ஆகிய இரு பதவிகளையும் பறிப்பதாக முடிவெடுக்கப்பட்டுள்ளதாம்.

தன் மீது கட்சி நடவடிக்கை எடுக்கட்டும் என்று மணிவண்ணன் காத்திருப்பதாகவும், அதன் பின்னரே தன்னுடைய அடுத்த கட்டம் பற்றி அறிவிப்பதாகவும் சொல்லியிருக்கிறார். இதைவிட இன்னொரு கொசுறுத்தகவலும் உண்டு. வழக்கமாக கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களே ஏனைய கட்சிகளில் இணைவதும் அல்லது புதிய கட்சி தொடங்குவதுமாக இருந்தது. மணிவண்ணனும், முன்னணியின் இன்னொரு சட்டத்தரணிப் பிரபலமும் ஏற்கனவே கூட்டமைப்பில் இணைவதற்கான இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டதாக ஒரு கதை அடிபடுகின்றது. ஏற்கனவே தேர்தலில் மரண அடி வாங்கியிருக்கும் கூட்டமைப்பு, மணிவண்ணன் போன்ற மக்கள் செல்வாக்குள்ள இளையவர் வந்தால் அவரை வரவேற்கக் காத்திருப்பதாகவும் தகவல். கஜேந்திரர்களுக்கு இந்தத் தகவல் சமர்ப்பணம்.

# அந்தரிப்புகளின் நீளுகை!

ஏதோ ஒரு இயலாமை
ஏதோ ஒரு விரக்தி.
ஏதோ ஒரு திணித்த மௌனம்.
ஏதோ ஒரு மந்தையுணர்வு.
ஏதோ ஒரு கசப்பைத்
துப்ப முடியாத அந்தரிப்பு
ஏதோ ஒரு பிரளயத்தினை
மனச்சாட்சியற்று
மறைத்தாடும் முகாரி.

ஏதோ ஒரு பெருங்கூட்டில்
அடைத்த பறவைக்கு
சிறகு விரிக்கும் சிற்றுலக நரகம்.
வாழ்விடப் பறவைக்கும்
வலசைப் பறவைக்கும் கூட
பாடமுடியாத வாயடைப்பு.
சிறகுகள் இருந்தும் சிறகறுந்த நிலையோடு
மனம் அடைபட்ட பறவைகளாய்
கிளைகளில் இருந்து வேரைத்தேடும்
வெறுமையோடு நகர்கிறது காலம்.
எல்லாமே எல்லாமே
நீறுபூத்த நெஞ்சத்தில்
கிளற முடியாச் சாம்பலுக்குள்
புதைத்த பூசணிக்காயின்
ஆணத்தின் கசிவாக , ஆங்காங்கே
பொசுங்கிப் பொசுங்கி
நசுங்கிச் சிதைய
மௌனமாக எரிகிறது வெறுமை.
இன்னும் ஏதோ ஏதோ தோன்றும்
தீப்பிழம்புகளை வலிந்தடக்கும்
பரிதாபத்துக்கு சொந்தக்காரராகி
நகர்கிறது நாட்கள்.

மிளகாய்த் தோட்டத்தில் கிளிக்கூட்டத்தின்
படையெடுப்பாக
இன்னும் அழகிய வேடத்தோடு
வஸ்துகள் ஆக்கிரமித்தல் செய்யும்
கையறு நிலைகண்டும்
கண்மூடிய தவப்பூனைகளாக
கள்ளத் தவம் செய்யும் பரிதாபம்
நீள்கிறது தொடர் கதையாக.
ஏதோ ஒரு இயலாமை.
ஏதோ ஒரு விரக்தி.
ஏதோ ஒரு திணித்த மௌனம்.
ஏதோ ஒரு மந்தையுணர்வு.
ஏதோ ஒரு கசப்பைத் துப்ப முடியாத
அந்தரிப்பு நீடித்துக்
கொண்டே இருக்கிறது
சாபத்தின் நீட்சியாக.....!

வன்னிமகள் எஸ். கே. சஞ்சிகா

> பலவீனமடையும் கூட்டமைப்பை மாற்றீடு செய்யக் கூடிய ஒரு பலமான மாற்றுஅணி அரங்கில் இல்லை. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் தமிழ் தேசிய அரங்கில் எழுச்சிபெறுவது ஒரு ஜனநாயகச் செழிப்பு என்று சிலர் கூறக்கூடும். ஆனால் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் வாக்குத் திரட்சியை வைத்துப் பார்க்கும் பொழுது தமிழ் மக்கள் இவ்வாறு பல கட்சிகளால் கூறு போடப் படுவது தமிழ் மக்களை மேலும் தோற்கடிக்கவே உதவும்.

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

இந்த மக்கள் ஆணையை எடுத்துக் காட்டுவார்கள். மாற்று அணி அது கூறும் தேசிய நோக்கு நிலையிலிருந்து தன்னை வன்னியிலும் கிழக்கிலும் பலப்படுத்த வேண்டிய தேவை அதிகரித்து விட்டது. இல்லையென்றால் அது தன்னைத் தமிழ்த் தேசிய மாற்றாகக் கருத முடியாத ஒரு மக்கள் ஆணை தான் இம்முறை கிடைத்திருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மூன்றாவது முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்கள். இதில் ஒரு பகுதியினர் ஜனநாயகப் போராளிகள் என்று தேர்தல் அரசியலில் ஈடுபட்டார்கள். ஆனால் வெற்றிபெற முடியவில்லை. அதன்பின் அவர்கள் கூட்டமைப்போடு இணைந்தார்கள். அப்பொழுதும் வெற்றிபெற முடியவில்லை. இம்முறை அவர்களை டெனீஸ்வரன் தத்தெடுத்தார். ஆனால் தேர்தலுக்கு கொஞ்ச நாட்களுக்கு முன் டெனீஸ்வரன் கூட்ட மைப்புக்கு வாக்களிக்குமாறு பத்திரிகையாளர் மாநாடு வைத்துக் கூறினார். டெனீஸ்வரனால் தத்தெடுக்கப்பட்ட விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை என்ற சுயேச்சைக் குழு தேர்தலில் டெனீஸ்வரன் உடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு தனித்துப் போட்டியிட்டது. எனினும் வெற்றி பெற முடியவில்லை. இதுதவிர திருகோணமலையில் புலிகள் இயக்கத்தின் முன்னாள் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் விக்னேஸ்வரனின் கட்சியில் போட்டியிட்டார். ஆனால் தோற்றுவிட்டார். இம்முறை கிடைத்த மக்கள் ஆணையை வைத்து முன்னாள் புலிகள் இயக்கத்தவர்கள் ஒரு தொகுக்கப்பட்ட முடிவுக்கு வரவேண்டும். தேர்தல் அரசியலில் ஏன் தங்களால் தொடர்ந்தும் வெற்றி பெற முடியவில்லை? என்ற கேள்விக்கு அவர்கள் எல்லாக் கோணங்களிலிருந்தும் விடைகாண வேண்டும்.

அடுத்த தரப்பு சாதியை சமயத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சுயேச்சைக் குழுக்கள். யாழ்ப்பாணத்தில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சுயேச்சை குழுவுக்கு 5,492 வாக்குகள் கிடைத்தன. வன்னியில் இந்து மத குருமார்களின் சுயேச்சைக்குழுவுக்கு 3,147 வாக்குகள் கிடைத்தன. அதாவது இவ்விரண்டு சுயேச்சைக் குழுக்களும் வெற்றி பெற வில்லை. தமிழ் மக்கள் சாதியின் பேரால் அல்லது சமயத்தின் பேராலும் பிரிந்து போக மாட்டார்கள் என்பதனை இந்த மக்கள் ஆணை வெளிப்படுத்துகின்றதா?

அடுத்தது கிழக்கு மையக் கட்சிகள். வடக்கின் முதன்மையை நிராகரிக்கின்ற அதேசமயம் கிழக்கின் யதார்த்தத்துக்கு ஏற்றாற்போல மறைமுகமாகவோ நேரடியாகவோ முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் வாக்குகளை திரட்டும் நோக்கங்களைக் கொண்ட தரப்புக்கள். இதில் வியாழேந்திரன் நேரடியாக அரசாங்கத்தின் வேட்பாளராக களம் இறங்கினார். கருணா அம்பாறையில் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் உள்நோக்கத்தோடு போட்டியிட்டார். வாக்குகளை உடைத்து அதன் மூலம் கூட்டமைப்பை அம்பாறையில் தோற்கடித்தார். அவரும் வெல்லவில்லை கூட்டமைப்பும் வெல்லவில்லை. அதேசமயம் பிள்ளையானின் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. கூட்டமைப்பு பிள்ளையானைவிட 11,768 வாக்குகளே கூடுதலாகப் பெற்றிருக்கிறது. மட்டக்களப்பில் பிள்ளையானுக்கு கிடைத்த மக்கள் ஆணை ஒரு விடயத்தை உணர்த்துகின்றது. பிரதேச உணர்வுகளை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத் திரட்சியை உடைக்கும் போக்கு பலமடைந்து வருவதை அது காட்டுகிறது. இது ஒருபுறம் தாயகக் கோட்பாட்டுக்கு
எதிரானது. இன்னொருபுறம் முஸ்லிம்களுக்கு எதிரானது. மொத்தத்தில் ராஜபக்சக்களுக்கு நெருக்கமானது.

தாயகக் கோட்பாடு அதாவது வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை சிந்திக்க வைக்கும் போக்கு அதிகரித்து வருகின்றதா? இதுவிடயத்தில் கிழக்கின் உணர்வுகளை மதித்து தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் புதிய உபாயங்களை வகுக்க வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்புக்கு கிழக்கிலிருந்து எதிர்ப்பு வருமாக இருந்தால் விளைவு விபரீதம் ஆகும். எனவே கூட்டமைப்பும் மாற்று அணியும் கிழக்கில் தேசிய நீக்கம் செய்யப்படும் வாக்குகளை குறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டும். இதுதான் கடந்த 5ஆம் திகதி தமிழ் மக்கள் வழங்கிய ஆகப் பிந்திய ஆணையின் தொகுக்கப்பட்ட ஒரு படம். இந்தப்படத்தை நுட்பமாக ஆராய்ந்தால் பின்வரும் விடயங்கள் துலக்கமாகத் தெரியவரும்.

- **முதலாவது கூட்டமைப்பு அதன் உட்பூசல்களால் பலவீனமடைந்து வருகிறது.**
- **இரண்டாவது தமிழ் மக்கள் சிதறி வாக்களித்திருக்கிறார்கள்.**
- **மூன்றாவதுதென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் வாக்குகளை கவர்ந்திழுக்கும் நிலைமைகள் அதிகரித்து வருகின்றன.**
- **நாலாவது தேசிய நீக்கம் செய்யப்பட்ட தமிழ் வாக்கு வங்கி ஒன்று பெருத்து வருகிறது.**
- **ஐந்தாவது மாற்று அணி தனக்குள் ஒற்றுமைப்படத் தவறினால் இந்த வாக்குச் சிதறல் மேலும் அதிகரிக்கும்.**
-

ஆனால் பலவீனமடையும் கூட்டமைப்பை மாற்றீடு செய்யக்கூடிய ஒரு பலமான மாற்றுஅணி அரங்கில் இல்லை. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் தமிழ் தேசிய அரங்கில் எழுச்சிபெறுவது ஒரு ஜனநாயகச் செழிப்பு என்று சிலர் கூறக்கூடும். ஆனால் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் வாக்குத் திரட்சியை வைத்துப் பார்க்கும் பொழுது தமிழ் மக்கள் இவ்வாறு பல கட்சிகளால் கூறு போடப்படுவது தமிழ் மக்களை மேலும் தோற்கடிக்கவே உதவும்.

வன்னியிலும் கிழக்கிலும் கிடைத்த தோல்விகளின் அடிப்படையில் இதைப் புரிந்து கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் தமிழ்த் தேசியப் பரப்பில் காணப்படுவது வன்னியிலும் கிழக்கிலும் யாருக்குச்
சாதகமானது என்பதனை இம்முறை தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியுள்ளன. எனவே தமிழ் மக்கள் மத்தியிலுள்ள நீதியான நேர்மையான கொள்கைத் தெளி வுள்ள சக்திகள் ஒரு பெரும் கூட்டணியை உருவாக்க வேண்டும். செய்வார்களா? ■

# அந்த ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்றிச் சொச்சப்பேருக்கும் ஒரு கடுதாசி!

**வாக்களிக்காத வாக்காளர்களே!**

உங்கள் எல்லோருக்கும் முதலில் கோடி கும்பிடு!

இப்ப ஒருத்தரும் கடிதம் எழுதிறதுமில்லை, வாசிக்கிறதுமில்லை. ஆனால் எனக்கு அதுதான் மனசில இருக்கிறதை வெளியில சொல்லுறதுக்கு இருக்கிற ஒரே வழி. அதால உங்களுக்கு சொல்ல வேணுமெண்டு நினைச்சதை இதுல எழுதிறன். கொஞ்சம் நேரமெடுத்து வாசிச்சா பரம சந்தோசம்.

இந்தமுறை யாழ்ப்பாணத்தில மட்டும் 571,848 பேர் வலு எழுப்பமா 'நாங்களும் வாக்காளர்தான்' எண்டு பதிவு செய்திருக்கிறியள். சந்தோசம். ஆனா இப்பிடிப் பதிவு செய்தவையளில 394,136 பேர்தான் வாக்களிக்கப் போயிருக்கினம். மிச்சப்பேர் அதாவது 177, 712 பேர் நல்ல குசாலா வீட்டில இருந்திருக்கிறியள். நான் நினைக்கிறன் விதானைமாரின்ர ஆய்க்கினையாலதான் நீங்கள் இப்பிடி வாக்காளர்களாப் பதிவு செய்திருக்கிறீங்களே தவிர, மனசார நீங்கள் பதிவு செய்யேலை எண்டு வடிவாத் தெரியுது, இந்த நாட்டு அரசியல் எக்கேடு கெட்டாலும் அதைப் பற்றி உங்களுக்கு கவலையில்லை. ஆனால் சாமான் விலை கூடினாலோ, உங்களுக்கு ஏதும் பாதிப்பு வந்தாலோ எடுத்த எடுப்பில அரசியல்வாதியளை மட்டும் வக்கனையாக் கரிச்சுக் கொட்ட மட்டும் உங்களுக்கு ஆரும் சொல்லிக் குடுக்கத் தேவையில்லை. சிறப்பா, தரமா அதுமட்டும் செய்வியள். ஆனால் வாக்களிக்க போகமட்டும் உங்களால ஏலாது.

" நாங்கள் வாக்களிச்சால் மட்டும் ஏதும் செய்து கிழிக்கப் போகினமோ?" எண்டு நீங்கள் அதிமேதாவித்தனமாக் கேக்கலாம். அப்படி கேக்கிறதுக்கு முதல் இதே கேள்வியை கொஞ்சம் மாத்தி உங்களை நீங்கள் கேக்க வேணும். 'நாங்கள் வாக்களிக்கக் கூட போகாம என்னத்தை கிழிக்கப் போறம்?" எண்டு கேளுங்கோ ஒருக்கா. உங்கடபாட்டிலையே உங்கட தலை குனியும். ஒருத்தனை நாங்கள் கேள்வி கேக்கப் போற்மெண்டா முதலில நாங்கள் சரியா இருக்கோணும். வாக்களிக்கவே வக்கில்லாத நீங்கள், அரசியல்வாதிகளைப் பற்றி ஒரு சொல்லுக் கூட கதைக்கத் தகுதியில்லை.


போய் வாக்கள்ளிச்சிருந்தீங்களெண்டால், இப்ப வந்த மாதிரி இல்லாமல் தேர்தல் முடிவுகள் வேற மாதிரி வந்திருக்கும். வாக்களிக்கவே போகாமால் "ஐயோ அவன் வெண்டிட்டான், இவன் வெண்டிட்டான், இனி எங்கட எதிர்காலம் அவ்வளவுதான்" எண்டு புராணம் பாடுறது சரியேயில்லை. ஆர் வரவேணும் எண்டு தீர்மானிக்கப்போகிற வாக்குகளை இப்பிடி லட்சக் கணக்கில போடாமவிட்டு அநியாயமாக்கிறதால நட்டம் உங்களுக்குத்தான். உங்கட நலனில அக்கறையில்லாத பிழையான ஒராளை மற்றவங்கள் தீர்மானிக்க, அதை நீங்களும் ஆமோதிக்கிற கதைதான் தொடரும். அப்பிடியில்லாம எங்கட பிரதிநிதியா ஆர் வரவேணும் எண்டதை நீங்கள் முடிவு செய்யவேணுமெண்டா, வாக்களிக்கப் போகாமல் ஒளிச்சிருக்கிற விளையாட்டை விட்டிட்டு, அடுத்த முறையாவது லைன்ல போய் நிண்டு வேளைக்கே வாக்களிக்கப் பழகுங்குங்கோ. கொரோனா வரும், கொழுக்கட்டை வரும் எண்டெல்லாம் சாக்குப்போக்குச் சொல்லாமல் , அடுத்த முறை யாழ்ப்பாணத்தில வாக்களிக்காமல் விட்ட அந்த ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்றிச் சொச்சப்பேரும் ஒண்டாப் போய் வாக்களிச்சுப் பாருங்கோ. நீங்கள் நினைச்ச மாற்றத்தை எங்கட அரசியல்ல கொண்டுவரலாம். உங்கட எதிர்காலத்தையும் நீங்களே தீர்மானிக்கலாம். ஏதோ சொல்லவேணும் போல இருந்திச்சு சொல்லிட்டன், இனி உங்கட விருப்பம். மறுமடலில் சந்திப்போம்.

இப்படிக்கு,
*பட்சமுள்ள,*
**அப்பாவி ஆறுமுகம்.**

# தேசியப்பட்டியல் படுத்தும் பாடு



ராஜ்குமார்



தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது அரசியல் கட்சிகள் ஒருவருக்கொருவர் அடிபட்டு சாவுங்கள் என்ற ரீதியில்தான் அரசமைப்பில் உள்ளடக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தேசியப்பட்டியல் நியமனம் நடைமுறைக்கு வந்த நாள் முதலே ஒவ்வொரு முறையும் தேர்தல் முடிந்த கையோடு கட்சிகளுக்குள் குடுமிபிடிச் சண்டை ஏற்படுவது வழமையாகிவிட்டது. வாக்களிப்பு மூலம் வென்று தெரிவாகும் உறுப்பினர்களை விட மேலதிகமாக புத்திஜீவிகள், தொழில்சார் வல்லுநர்கள், திறமைசாலிகள், பொருளாதார விற்பன்னர்கள் போன்றவர்களை நாடாளுமன்றுக்கு வரவைத்து அவர்கள் மூலம் நாட்டை முன்னேற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கான நோக்கத்திலேயே இந்தத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற நியமனம் அரசமைப்பில் சேர்க்கப்பட்டது. ஆனால் அது பின்னர் உற்றார் உறவினர்,நண்பர்கள்,வால் பிடிப்பவர்கள்,செம்பு தூக்கிகள் என்று பலருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் ஒன்றாக மாறிப்போனது. இதனால் தற்போது இது உருவாக்கப்பட்ட நோக்கத்தைவிட்டு கட்சிகளைக் கூறுபோடுவதற்குக் காரணமாகி விட்டது.

2020 தேர்தலிலும் இது தொடர்வது கவலைக்குரியதாக இருக்கிறது. இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, எங்கள் மக்கள் கட்சி என்பவை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்வில் சிக்கிச் சின்னா பின்னப்பட்டுப் போய் இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் மட்டுமே

> பல கட்சிகளுக்குள்ளும் புகுந்து அவற்றைக் குலைக்கும் வேலையில் ஈடுபட்டு வரும் இந்த தேசிய பட்டியல் ஆசன முறைமையும். விருப்பு வாக்கு நடைமுறையும் அடுத்த திருத்த சட்ட மூலங்கள் மூலமாக மாற்றப்பட்டால் இலங்கையில் ஓரளவேனும் நாகரீகமான அரசியல் பண்பு மீண்டும் முளைவிடலாம்.

கிடைத் தது. அதனை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு வழங்கி அவரை நாடாளுமன்றுக்கு அனுப்ப, கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களும்,கட்சிக்காரர்களும் விரும்பினர். ஆனால் மாவை சேனாதிராஜாவோ அந்த ஆசனத்தை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த சசிகலா ரவிராஜ்க்கு வழங்க முன்வந்திருந்தார். இருப்பினும் கட்சிக்குள்ளிருக்கும் சுமந்திரனும் ஸ்ரீதரனும் இரவோடிரவாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சந்தித்து அவரது மண்டையை கழுவி அந்த ஆசனத்தை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனுக்கு வழங்க வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளனர். சம்பந்தன் இது பற்றி சிந்திப்பதற்கே சந்தர்ப்பம் வழங்காமல் அவரது அரை குறை சம்மதத்துடன் உடனடியாக கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கத்தை வரவழைத்து நியமனக் கடிதத்தை அடித்து தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பியும் விட்டனர். மறுநாள் செய்தி கசித்து தமிழரசுவின் தலைவரும், கூட்டுக்கட்சி தலைவர்களும் தமக்கு தெரியாமல் எப்படி நியமனம் வழங்குவீர்கள் என்று கொதித்தனர். உடனடியாக கலையரசனின் நியமனம் நிறுத்தப்பட்டது என்றும் மத்திய குழு,செயற்குழு எல்லாம் கூடியே முடிவெடுக்கும் என்றும் அறிக்கைகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. மறுபுறத்திலோ' போன பஸ்ஸுக்கு கை காட்டி என்ன பயன்?" என்ற நிலையே காணப்பட்டது. துரைராஜசிங்கம் அனுப்பிய கடிதத்தை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு, உடனடியாக தனை வர்த்தமானியிலும் பிரசுரித்துவிட்டது.

கடைசியில் கலையரசன் நாடாளுமன்ற உறுப்பினராகி விட்டார். இப்போது கலையரசனை பதவியை விட்டு விலகுமாறு தமிழரசு கட்சி கோருகிறது. மாட்டேன் என்று அடம்பிடிக்கிறார் அவர்.

மாவையின் தீவிர விசுவாசியான கலையரசனை இம்முறை தேர்தலில் வேட்பாளராக்க தலையால் தண்ணீர் குடித்தவர் மாவை. ஆனால் இப்போ தேசியப் பட்டியலை மாவைக்கு கொடு என்றால் மாட்டேன் என்கிறார் கலையரசன்.

கூட்டமைப்பின் நிலை இதுவென்றால், ஐக்கிய மக்கள் சக்தியின் கதை இன்னொரு வகை. ரணிலிடம் இருந்து பிரிந்து புதுக் கட்சியை ஆரம்பித்தார் சஜித். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த கூட்டுக் கட்சிகள்ளை தன்னுடன் இணைப்பதற்காக உங்களுக்கெல்லாம் தேசிய பட்டியல் ஆசனம் தருகிறேன் என்னிடம் வாருங்கள் என்று ரவூப் ஹக்கிம் , மனோ கணேசன்,ரிஷாத், சம்பிக்க ரணவக்க ஆகியோரை சஜித் ஆசை வார்த்தை காட்டி அமுக்கிப் போட்டுக்கொண்டார் .

ஆனால் தேர்தல் முடிவுகள் சொதப்பி விட்டன. கிடைத்த வாக்குகளின் படி 7 தேசியப்பட்டியல் ஆசனங்களே ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்தது. அதனை வாக்குறுதிப்படி கூட்டுக் கட்சிகளுக்கு பகிர்ந்தால் சஜித் கட்சிக்கு எதுவுமே மிஞ்சாது. முதலுக்கே மோசம் . அதனால் கூட்டணிக் கட்சிகளை புறந்தள்ளி ஏழு ஆசனங்களையும் கபளீகரம் செய்துவிட்டது சஜித் கட்சி. முதலில் துள்ளி எழுந்த கூட்டுக்கட்சியினர், பின்னர் கொஞ்சம் அமுக்கி வாசிக்கத் தொடங்கினர். கிடைக்கப் போவதோ ஒன்று அல்லது இரண்டு ஆசனங்கள் இவைகளை எப்படி பங்கிடுவது ? பங்கிடப் போனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும். கூட்டு உடையும் .எனவே எதிர்பார்த்த அளவு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்காததால், அவற்றைப் பிரதான கட்சிக்கே விட்டு விடுவோம் என்று தாராளப் பிரபுக்களாக மாறினர். அவர்களில் மனோ கணேசன் மட்டும்தான் கொஞ்சம் கூடுதலாகக் குதித்தார் . இப்போ அவரும் கம்சிப். ஆனால் இந்த தேசியப்பட்டியல் நியமனத்தில் தொந்து நூலாகி ,அவிந்து அவலாகி , வெந்து வேம்பாகி போயிருப்பவர்கள் ;எங்கள் மக்கள் சக்தி' கட்சியினர்தான். இந்தக் கட்சி 17 மாவட்டங்களில் போட்டியிட்டு சுமார் 67 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தது. இதனால் இந்தக் கட்சிக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்திருந்தது. இந்த ஒரு ஆசனத்துக்கே அங்கு குடுமி பிடிச் சண்டை. மன்னிக்கவும் அவர்கள் அனைவரும் பிக்குமார் என்பதால் அப்படிச் சொல்ல முடியாது . வேண்டுமானால் மொட்டைத் தலைச் சண்டை என்று சொல்லிக்கொள்ளலாம்.

இந்த கட்சியின் தலைவரான அத்துரலியே ரத்ன தேரர் ,தனக்கே தனக்குத்தான்அந்த ஒற்றைத் தேசிய பட்டியல் ஆசனம் என அடம்பிடிக்கிறார். நாடாளுமன்றில் மிகவும் அறிவுள்ள ஒரு சில அரசியல்வாதிகளில் தானும் ஒருவர் என்றும் சர்வதேச மற்றும் தேசிய அரசியல் குறித்து பரந்த அறிவை கொண்டவர் தானே என்றும், எனவே தனக்கே தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று சுய தம்பட்டம் அடித்து பீற்றிக் கொள்கிறார். அந்த ஆசனம் கிடைக்காவிடின் தான் நீதிமன்றம் செல்ல போவதாகவும் மிரட்டியிருக்கிறார். ஆனால் கட்சியின் இன்னொரு குழுவோ கலகொட அத்தே ஞானசாரதேரருக்கே இந்த ஆசனம் வழங்கப்பட வேண்டுமென்று அடம்பிடிக்கின்றனர். 'சவுன்ட் பார்ட்டியான' ஞானசாரர் நாடாளுமன்றம் சென்றால் சிறுபான்மையினரை அதிலும் முஸ்லிம்களை அடித்துத் தோய்ந்து பிழிந்து காயப்போட்டுவிடுவார் என்பது அவர்கள் தரப்பு வாதம். ஆனால் இவர்களுக்கு இடையில் புகுந்த அந்தக் கட்சியின் செயலாளரான வெதனியகம விமலதிஸ்ஸ தேரர் தனக்கே தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தரவேண்டுமென ஒரு கடிதத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டார். இதனை அடுத்து கட்சியினர் பொதுக் குழுவை கூட்டி வெதனியகம விமலதிஸ்ஸ தேரரை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தூக்கிவிட்டு புதிய ஒருவரை செயலாளராக நியமித்திருக்கின்றனர். இந்தப் புதிய செயலாளர் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் வெதனியகம விமலதிஸ்ஸ தேரர் தமது கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விட்டதாகவும் புதிய தலைவர்,செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே எமது புதிய நிர்வாக குழு முடிவின்படி ஞானசார தேரரையே தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்திருப்பதாகவும் அறிவித்துள்ளனர். ஆனால் இந்தப் புதிய விளக்கக் கடிதத்தை தேர்தல் ஆணைக்குழு ஏற்கவில்லை. பழைய செயலாளரான வெதனியகம விமலதிஸ்ஸ தேரரை கூட்டி வந்து, அவர் சம்மதம் தெரிவித்தாலே பஞ்சாயத்து தீருமென்று சொல்லிவிட்டார்கள். இப்போது வெதனியகம தேரரை , பிக்குகள் வலைபோட்டுத் தேடிவருகின்றனர். ஆனால் அவர்தான் கடலையே இல்லையாம் என்பது போல் எஸ்கேப்பாகி விட்டாரே. வெதனியகம விமலதிஸ்ஸ தேரர் கிடைத்தால்தான் ஞானசார தேரரோ, அதுரலிய ரத்னதேரரோ தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகலாம். இல்லையேல் சட்டப்படி வெதனியகம தேரரே தேசியப்பட்டியலை பெற்றுக்கொள்வார். இவ்வாறான பல கட்சிகளுக்குள்ளும் புகுந்து அவற்றைக் குலைக்கும் வேலையில் ஈடுபட்டு வரும் இந்த தேசிய பட்டியல் ஆசனமுறைமையும், விருப்பு வாக்கு நடைமுறையும் அடுத்த திருத்த சட்ட மூலங்கள் மூலமாக மாற்றப்பட்டால், இலங்கையில் ஓரளவேனும் நாகரீகமான அரசியல் பண்பு மீண்டும் முளைவிடலாம்.


கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப் புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

# கிராமத்து மனிதர்கள்... 09

# கார்க்கார காத்தியண்ணன்

○ இராகன்

விட்ஸ், ஹெண்டா வெசல், அக்குவா, ஏலியன், பிறிமியோ, பிராடோ, சீஎச் ஆர் என்றெல்லாம் வகை வகையாய் ரதங்கள் போல அலுங்காமல் குலுங்காமல் பயணம் செய்வதற்கு வீட்டுக்குவீடு மகிழுந்துகள் மலிந்துபோய்க்கிடக்கும் காலமிது. வெற்றிலை வாங்க கடைக்குப் போவதற்குக்கூட "ஹங்" உந்துருளியை முறுக்கிக்கொண்டு போகும் இளவட்டங்களின் காலமிது. இரண்டு மூன்று ஊர்களுக்கும் சேர்த்து ஒரேயொரு கார்தான் நின்றகாலம் ஒன்றிருந்தது. அந்தக் காலத்தவர்களுக்குத்தான் தெரியும் கார்க்காரக் காத்தியண்ணனின் கீர்த்தி. ''கார்த்திகேசு என்று அவரது இயற்பெயர் சொல்லி அழைப்பதைவிட காத்தியண்ணன்" என்று அழைப்பதில் ஒருவித நெருக்கத்தை ஊரரார் உணர்ந்திருந்தனர். கார்க்காரக் காந்தியண்ணன் என்றவுடன், இரண்டு பக்க சொக்குகளிலும் சுருண்டு சடைத்த விருமாண்டி மீசை, முழுதாய் மொட்டையாய்ப் போன தலையில் கன்னங்கள் இரண்டையும் இணைத்து பிடரிப் பகுதி யில் எஞ்சியிருந்த தலையில் முன்னர் மயிர் இருந்ததற்கான சாட்சியம், தலையிலிருந்து உதிர்ந்த முடி உடலில் வீழ்ந்து முளைத்துவிட்டதோ என்று சந்தேகிக்க வைக்குமளவுக்கு மார்பிலும் முதுகுப் பகுதிகளிலும் கை கால்களிலும் படர்ந்த கருகரு வென்ற உரோமக்கட்டு, எப்போதும் கழற்றாத கை வைத்த உள் பனியன் பனியனை உள்ளே விட்டு தட்டையான உடலை சுற்றி இறுக்கிக் கட்டிய பால்வெள்ளைச் சாரம், இடுப்பில் ஓர் அகலமான பெல்ற். நெற்றியில் இலங்கும் சந்தனக் குறி என்பவைதான் மனதில் நிற்கும்.



காத்தியண்ணனின் ஏ போட்டி (ஏ40) காருக்கு அயலூர்களிலிருந்தெல்லாம் தேடி வருவார்கள். கோயில்களில் திருவிழாக் காலம் தொடங்கிவிட்டால் காத்தியண்ணனுக்கான கிராக்கி அதிகரித்துவிடும். அந்த நேரங்களில் ஏ போட்டியின் மேற்புறத்தில் கரியர்" பொருத்தி வைப்பார். மேளக் கச்சேரிக்கு நாயனக்காரர், மேளகாரர்களை ஏற்றிவருவது காத்தியண்ணன் தான். கரியரில் தவில்களை ஏற்றுவார். உள்ளே நாயனங்களையும் தவில் வாசிப்பவர்களையும் ஏற்றுவார். ஏ போட்டி இசைப் பயணத்துக்குத் தயாராகிவிடும்! திருவிழாக் காலங்களில் விசேடமாக வரவழைக்கப்படும் ஐயர்மாரை கௌரவத்துடன் ஏற்றி வருவதும் காத்தியண்ணன் தான். ஐயாக்களையோ, இசைவேளாளர்களையோ ஏற்றிவரும்போது இல்லாத மக்கள் செல்வாக்கு, இரவுத் திருவிழாக்களுக்கு சின்ன மேளக்காரிகளை எற்றிவரும்போது இருக்கும். சின்னமேளக்காரிகளை கோயில் மணியத்தின் வீட்டில் யாருமறியாமல் தங்கவைக்கவுள்ள செய்தியை எந்தவகையிலோ அறிந்து இளவட்டங்களும், நடுத்தர வயதுக்காரரும், சில வயதானவர்களும்கூட காத்தியண்ணனின் ஏ போட்டியைச் சூழ்ந்துகொள்வார்கள்.

சித்திரை வருடப் பிறப்பன்று ஊரின் மத்தியிலுள்ள விளையாட்டு வெட்டையில் ஊரே கூடும். தூர இடங்களில் வேலை செய்பவர்களொல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவார்கள். எல்லோரும் கூடி விளையாடி மகிழ்வார்கள். கயிறிழுத்தல், தலையணைச் சண்டை, கிளித்தட்டு, சலக்கோல், உப்புத்தொட்டு, பேணிப் பந்து, சடுகுடு, போர்த்தேங்காய் என்று பல விளையாட்டுகளை அவரவர் தங்கள் வயது, விருப்பம் என்பவற்றுக்கேற்ப விளையாடி மகிழ்வர். அந்த நாளில் நடைபெறும் விசேட நிகழ்வு ஒன்றுக்காக விறுவிறுப்பான எதிர்பார்ப்புடன் காத்திருப்பர். கார்க்காரக் காத்தியண்ணனின் ஏ போட்டி ஆளில்லாமல் ஓடும் அற்புதக் காட்சியது! விளையாட்டு வெட்டையின் நீளத்துக்கு ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு காத்தியண்ணனின் கார் ஆளில்லாது ஓடும் காட்சியை வருடாவருடம் பார்ப்பவர்களும் வியந்துதான் பார்த்திருப்பர். ஜல்லிக்கட்டுக் காளையையும் அதனை அடக்கும் வீரனையும் போல ஏ போட்டியும் காத்தியண்ணனும் விளையாட்டுத் திடலில் வரும் பவனியை ஊரே கூடிப் பார்த்து மூக்கில் விரலை வைக்கும். ஏ போட்டியின் கிளற்ச், கியர், பிறேக், ஸ்ரெயரிங் என்பவற்றை கட்டுப்படுத்தி எவ்வாறு ஆளில்லாது ஓடவைத்தார் என்ற விந்தையின் இரகசியம் இன்றுவரை துலக்கப்படவில்லை.

காத்தியண்ணையின் ஏ போட்டியை தெருவில் காலங்கழிக்கும் இளவட்டங்கள் "சரக்குக் கப்பல்" என்று பரிபாசையில் தங்களுக்குள் சொல்லிக்கொள்வது தெரியவந்து ஒருமுறை அப்படிச் சொல்லக்கூடாது என்று இளைஞன் ஒருவனுக்கு காத்தியண்ணை அடிக்கப் போனதாகவும் ஒரு கதையிருக்கு. ஊரிலிருந்து நகரப்பகுதி ரியுசன் வகுப்புக்குப் பெண்பிள்ளைகள் சைக்கிளில் சென்று படிக்கத் தொடங்காத அந்த நாட்களில், படிக்கப் போகும் குமர்ப்பிள்ளைகள் ஐந்தாறுபேரை ரியுசனுக்கு ஏற்றியிறக்கும் பணியை காத்தியண்ணனின் ஏ போட்டி செய்து வந்ததால்தான் இளவட்டங்கள் அவ்வாறு பெயர் சூட்டியிருந்தார்கள் என்பது காத்தியண்ணனுக்கும் நன்கு தெரியும்!

குடும்பம் குடும்பமாக படமடுவத்துக்கு (திரையரங்கு) இரவுக் காட்சிகள் பார்க்கச் செல்பவர்கள் காத்தியண்ணனிடத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்கூட்டியே பதிவுசெய்துவிடுவார்கள். புதிய படங்கள் திரைக்கு வரும் காலத்தில் ஒரே இரவில் பெஸ்ட் 'ஷோ செக்கண்ட் ஷோ' இரண்டுக்கும் மாறிமாறி ஓடுவார். தன்னோடு வருபவர்களின் நம்பிக்கை சிதையாமல் காத்திருந்து ஏற்றிவருவார்.

காத்திருக்கும் நேரத்தில் ஏ போட்டி அவரின் பள்ளியறையானது. படத்துக்குப் போகும்போது வீட்டிலுள்ள நகை நட்டுக்களைச் சாமிக்குச் சாத்தியது போலச் சாத்திவரும் பெண்களுக்கு காத்தியண்ணனின் ஏ போட்டி கவசவாகனமாகத் தெரிந்தது. சாமவேளைகளிலும் தெருச் சந்திகளை விட்டகலாத சண்டியர்கள்கூட காத்தியண்ணனின் காருக்கு ஒதுக்கம்தான். காரின் கண்ணாடிவழி காத்தியண்ணனுக்குச் சலாம் போட்டுவைப்பார்கள்.

குடும்பத் தலைவியின் மகப்பேற்றுக் காலம் நெருங்கி வரும் தருணங்களில் தங்களுக்கு வரவிருக்கும் தேவைபற்றி காத்தியண்ணனிடம் குடும்பத் தலைவர்கள் முன்கூட்டியே சொல்லிவைத்துவிடுவார்கள். காத்தியண்ணன் அவர்களின் தேவையை மனதில் நிலைநிறுத்திக்கொள்வார். திடீரென மனைவிமாருக்கு குத்தெழும்பும்போது காத்தியண்ணனிடத்தில் ஓடிவருவார்கள். பிரசவத்துக்கு காத்தியண்ணனின் காரைப் பிடிப்பது ராசியானது என்ற எண்ணம் அவர்களிடத்தில் இருந்தது.

"நாங்கள் விரும்பினபடி பொடியன் பிறந்தது காத்தியண்ணையின்ரை காரிலை போனதாலைதான்"! என்று சொல்பவர்கள் மத்தியில் "எங்களுக்கு விருப்பப்படி பெட்டை பிறத்தது அண்ணையின்ரை காரிலை போனதாலை தான்" என்று சொல்பவர்களும் இருந்தார்கள். கார்பிடித்தவர்கள் காத்தியண்ணனிடத்தில் இப்படிச் சொல்லும்போது மௌனமாய்ச் சிரிப்பார். அவசரமாக இரவில் யாரையாவது பிரசவ வேதனையில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றால் விடியும்வரை பிரசவிக்கவில்லையாயின் பெண்ணின் கணவனுடன் துணைக்கு நின்றுவிட்டுக் காலையில்தான் திரும்பிவருவார் காத்தியண்ணன். விடிய லுக்கிடையில் பிரசவித்துவிட்டால் திரும்பிவந்து பிரசவித்த பெண்ணின் வீட்டிலுள்ளவர்களுக்கு சந்தோசமாகத் தகவல் சொல்லித்தான் தன் வீட்டுக்குச் செல்வார். இவ்வளவுக்கும் பிரசவத்துக்காகக் கார் பிடிப்பவர்கள் வலிந்து திணித் தாலும் காசு வாங்கமாட்டார்.


ஊரடங்கக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட ஓர் இரவில் காத்தியண்ணனிடத்தில் ஏற்கனவே தங்கள் தேவையைச் சொல்லிவைத்த ஒருவரின் மனைவிக்குப் பிரசவ வலி ஏற்பட்டபோது, சாமவேளையில் காத்தியண்ணனைத் தேடி வந்தார்கள்.

'அரிக்கன் லாம்பு' வெளிச்சம் கார்க்கண்ணாடி வழி தெரியுமாறு பிடித்துக்கொண்டு அவசரத் தேவைகளுக்குப் போகும் வழக்கம் இருந்ததால் தன்வீட்டில் அப்படியான அவசரத்தேவைக்கு வாங்கிவைத்த விளக்கையும் எடுத்துக்கொண்டு காத்தியண்ணன் வைத்தியசாலைக்குச் சென்றார். பிரசவம் உடனடியாக நிகழ்ந்துவிட்டது. குழந்தை சுகமாகப் பிறந்த தகவலைத் தாங்கி வீடு திரும்பிய காத்தியண்ணனையும் 'ஏ' போட்டியையும் அன்றிரவோடு காணவில்லை என்ற கதைதான் இன்றுவரை எஞ்சியுள்ளது. காத்தியண்ணனையும் காரையும் இருள் விழுங்கிவிட்டது என்று ஊரரார் பேசிக்கொண்டார்கள்! ■

# சாத்தானும் கடவுளும்

○ ராஜ்சிவா

கணிதம் என்றாலே பலருக்குக் கசக்கும் மருந்தாகவே இருந்திருக்கிறது. பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டு விட்டுப் பலர் ஓடிப்போவதற்கு இந்தக் கணிதமும் ஒரு காரணம். ஆனால், கணிதம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். சரியாகப் படித்துப் புரிந்துகொண்டால், அதுபோல இனிப்பானது எதுவுமில்லையென்றே சொல்லலாம். கணிதத்தை உங்களுக்கு நான் சொல்லித் தருகிறேன். உதாரணத்துக்கு இதைப் பாருங்கள். (iγ̸∂)=0 என்ற இந்தச் சமன்பாடு என்ன சொல்கிறதென்றால்...., "ஹலோ! எங்க போறீங்க? பொறுங்க.. பொறுங்க..! என்னாச்சு? சரிய்ய்... எங்கும் போகாதீங்க. நான் மற்ஸ் சொல்லித்தரவில்லை. சும்மா பகிடிக்குச் சொன்னேன். படிச்சுக்கொண்டிருக்கும்போதே இப்படிப் பாதியில விட்டிட்டுப் போறது என்னங்கோ நியாயம்? ஒரு சமன்பாட்டைப் பார்த்ததும் ஓடுவீங்களா? சஞ்சீவி வாசகரான நீங்களே இப்படிச் செய்யலாமா? சரி வாங்க, நம்ம வழியிலேயே நாம் போகலாம்.




### எங்கேயோ கேட்ட குரல்

கணிதம்பற்றிப் பேசுவது தமாஷாயிருந்தாலும், மேலேயிருக்கும் சமன்பாடு மிகவும் முக்கிய மானது. இந்தச் சமன்பாட்டுக்குச் சொந்தக்காரரின் பெயர் 'போல் டிராக்' (Paul Dirac). குவாண்டம் இயங்கியலின் தவிர்க்க முடியாத மிகமுக்கியமான ஆளுமை. கணிதத்தை மட்டும் வைத்துக்கொண்டு, இவர் கண்டுகொண்ட ஆச்சரியமான கண்டுபிடிப்புப்பற்றித்தான் நாம் இங்கு பார்க்கப்போகிறோம். எந்தப் பயமும் வேண்டாம். என் கையைப் பிடித்துக்கொண்டே வாருங்கள். 'வீடொன்றை எதைக்கொண்டு கட்டுவார்கள்?' என்று உங்களிடம் கேட்டால், செங்கற்கள் அல்லது சிமெந்துக் கற்கள்கொண்டு கட்டுவார்கள்' என்று சிரித்துக்கொண்டே சுலபமாகப் பதில் சொல்லிவிடுவீர்கள். அந்தப் பதில் சரியானதும்கூட. ஆனால், அந்தப் பதில் முழு உண்மையையும் அடக்கியதல்ல. செங்கல்லும், சிமெந்துக் கல்லும் எதனால் உருவாக்கப்பட்டவையென்று நாம் பார்ப்பதேயில்லை. உண்மையைச் சொல்லப்போனால்; இந்த இரண்டு கற்களுக்கும் அடிப்படையானது, மண்ணல்லவா? அப்படிப் பார்க்கும்போது, ஒரு வீட்டை எதனால் கட்டுவார்கள் என்றால், சரியான பதில் 'மண்' என்பதாகத்தான் இருக்கவேண்டும். அதாவது, ஒரு வீட்டை மண்கொண்டே நாம் கட்டுகிறோம். ஆனால், இந்தப் பதிலில் உங்களுக்குச் சம்மதமும், திருப்தியும் இருப்பதில்லை. ஏதோ மனதுக்கு ஒட்டாத தன்மை அதில் இருக்கும். இப்போது இதைப் பாருங்கள். நாம் பாடசாலைகளில் கல்வி கற்கும்போது, ஒரு அட்டவணையை நமக்கு அறிமுகப்படுத்துவார்கள். பலர் படிப்பதிலிருந்து தெறித்தோடியதற்கான இன்னுமொரு காரணமாக அந்த அட்டவணை இருந்திருக்கும். 'மெண்டலீவின் தனிம அட்டவணை' (Mendeleev Periotic Table). எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறதல்லவா? வேதியியல் படிக்கும்போது இந்த அட்டவணையால் பட்டபாட்டை நீங்கள் சுலபத்தில் மறந்திருக்க மாட்டீர்கள்.

### அணுவின்றி அசையாது உலகம்

எம்மால் அறியப்பட்ட உலகிலுள்ள அனைத்துத் தனிமங்களையும், அவற்றின் அணுவெண் வரிசையில், மிகவும் சிரமப்பட்டு அட்டவணையாக்கியிருப்பார்கள். அந்தச் சிரமங்களையெல்லாம் நாங்களும் படவேண்டுமென்பதே வேதியியல் விதி. உண்மையைச் சொல்லப்போனால், அறிவியலின் அற்புத அட்டவணை இது. பகிடிகளுக்கப்பால், அறிவியலுக்கு கங்காருப் பாய்ச்சலைக் கொடுத்தது இதுவெனலாம். ரஷ்யாவைச் சேர்ந்த கெமிஸ்ட்ரி தெரிந்த டிமிட்ரியே இந்த அட்டவணையின் சொந்தக்காரர். முழுப்பெயர் 'டிமிட்ரி மெண்டலீவ்' (Dmitri Mendeleev). வேதியியலின் தந்தையாகவே மதிக்கப்படுபவர். உலகிலுள்ள அனைத்துத் தனிம அணுக்களின் விபரங்களும் அந்த அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும். அதாவது, உலகத்தைக் கட்டமைத்த அனைத்து அடிப்படை ஆதார அணுக்களும் அந்த அட்டவணையில் இருந்தன. அப்போதெல்லாம், அணுக்களே அனைத்துக்கும் ஆதாரமாக இருந்தன. உலகம் உட்பட, உலகின் அனைத்துப் பொருட்களும் அணுக்களாலேயே உருவாக்கப்பட்டவை என்று கருதினார்கள். ஓரளவுக்கு அது உண்மையும்கூட. ஆனால் வீடுகள், செங்கற்களால்தான் கட்டப்படுகின்றன என்ற கூற்றுக்கு இணையானது இது. 1920 ஆம் ஆண்டளவுகளில் நடந்த அறிவியல் புரட்சியினால் இவையெல்லாம் மெல்ல மெல்ல மாறத்தொடங்கின. அணுக்களும் கண்ணுக்குத் தெரியாத பல அடிப்படை நுண்துகள்களால் உருவாக்கப்பட்டவை என்று புரிய ஆரம்பித்தது. செங்கல்லின் மண்போல. அதுவரை, அணுவுக்கு வெளியேயிருக்கும் உடுக்கள் (நட்சத்திரங்கள்), கோள்கள், உடுத்திரள்கள் (கலக்ஸிகள்) போன்ற பெரும்பொருட்களடங்கிய பேரண்டத்தை ஆராய்ந்தவர்கள், அணுவுக்கு உள்ளேயிருக்கும் குவாண்டம் என்னும் நுண்ணண்டத்தைப் பார்க்க ஆரம்பித்தார்கள். பார்த்தபின் பிரமித்தும் போனார்கள். புரோட்டோன், நியூட்ரோன், எலெக்ட்ரோன், அணுக்கரு போன்றவற்றால் உருவாக்கப்பட்டதுதான் ஒரு அணுவென்று நம்பியிருந்தபோது, இவை எல்லாவற்றையும்விடக் கோடானகோடி மடங்கு சிறியளவிலான துகள்கள், கோடிக்கணக்கில் அதே அணுவுக்குள் இருப்பது தெரியவந்தது. இந்த நுண்துகள்களைப் பகுத்தாய்ந்து படிப்பதே குவாண்டம் இயற்பியல் என்றாகிப் போனது.



### திரிஷாவை உருவாக்கிய துகள் எது ?

இந்த நுண்துகள்களைத் தேடிப்போனால், தோண்டத் தோண்ட வந்துகொண்டேயிருக்கும் மண்போல, விதவிதமான நுண்துகள்கள் வந்துகொண்டேயிருந்தன. அதன்பின்னரே ஒரு தெளிவு ஏற்பட்டது. உலகம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தப் பேரண்டமும் இந்த அடிப்படை நுண்துகள்களினால் உருவாக்கப்பட்டவை என்பது உறுதியானது. இந்த நுண்துகள்களையும் வகைப்படுத்தி ஒரு அடிப்படை அட்டவணையை இன்றுள்ள நவீன இயற்பியலாளர்கள் உருவாக்கியுள்ளார்கள். அதுவே, 'அடிப்படைத் துகள்களின் மாதிரி அட்டவணை' (Standard model of Elementary Particles) என்று அழைக்கப்படுகிறது. இந்த அடிப்படைத் துகள்களினாலேயே நான், நீங்கள், திரிஷா, நயன்தாரா, அஜித் , விஜய், கோத்தாபய எல்லாருமே உருவாக்கப்பட்டிருக்கிறோம். இந்தக் கோடிக்கணக்கான நுண்துகள்கள் ஒவ்வொன்றையும் கண்டுபிடிப்பதற்கென்றே, அமெரிக்காவில் Fermilab என்னும் வட்டவடிவமான துகள்மோதியும், சுவிஸில் CERN துகள்மோதியும் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில்தான், வானியற்பியலாளர்கள் ஒரு முக்கிய நிகழ்வை அவதானித்தார்கள். மொத்தப் பேரண்டத்தில் இருக்கும் உடுக்கள், உடுத்திரள்கள், கோள்கள், உபகோள்கள், கருந்துளைகள், க்வேசார்கள், தூசுப்படலங்கள் போன்ற அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும், வெறும் 4 சதவீதம் மட்டுமே காணப்படுகின்றன. மீதியெல்லாமே இருட்டான கருமை. அதாவது, துகள்களால் கட்டமைக்கப்பட்டவையென்று சொல்லப்படும் பேரண்டம் நான்கே நான்கு சதவீதம்தான். எஞ்சியிருக்கும் 96 சதவீதமும் வெறுமையான இருண்மை. இந்த 96 சதவீதமும், கரும்துகள்கள் மற்றும் கருப்பாற்றல் ஆகியவற்றால் நிரப்பப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், அவை என்னவென்றே இதுவரை நமக்குத் தெரியாது. அவை என்னவென்று கண்டுபிடிக்க முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்போவது, இந்தக் கரும்துகள்கள், கருப்பாற்றல் தவிர்ந்து, திடப்பொருள்போல இருக்கும் 4 சதவீதப் பொருட்களைப் பற்றித்தான்.


### மிச்சம் 96 எங்கே?

பிக்பாங் என்னும் பெருவெடிப்பின்மூலம் பேரண்டம் உருவாகும்போது, 100 சதவீதத் துகள்களைக்கொண்டே உருவாகியிருக்கிறது என்பதை இயற்பியலாளர்கள் கணித்திருக்கிறார்கள்.

(21ஆம் பக்கம் பார்க்க)

**பலர் படிப்பதிலிருந்து தெறித்தோடியதற்கான இன்னுமொரு காரணமாக அந்த அட்டவணை இருந்திருக்கும். 'மெண்டலீவின் தனிம அட்டவணை' (Mendeleev Periotic Table). எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறதல்லவா? வேதியியல் படிக்கும்போது இந்த அட்டவணையால் பட்டபாட்டை நீங்கள் சுலபத்தில் மறந்திருக்க மாட்டீர்கள்.**

# முகத்தைப் பார்க்காது அகத்தைப் பார்ப்போம்



○ ம.ப. மகாலிங்கசிவம்

தேன்கூடு

பெண்கள் பற்றிய ஆண்களின் பார்வைகள் எப்போதும் ஒரே விதமாக உள்ளன. சங்கப் புலவரான கபிலர், பாராளர் தொடக்கம் இன்றைய புதுக் கவிஞர்கள் வரை காலம் மாறிய போதும் கண்ணோட்டங்கள் மாறவில்லை. கவிஞர்களின் வர்ணனைகள் மார்பு, தொடை, இடை, நடை என்பவை பற்றியவைகளாகவே காலந்தோறும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. இவற்றுக்கான உவமைகள் காலத்துக்கேற்ப மாறியுள்ளனவே தவிர, உள்ளடங்கள் மாறவில்லை.

கவிச்சக்கரவர்த்தியான கம்பரின் இராமாயணத்தைத் தீயிட்டு எரிக்க வேண்டும் என்று கூறி அறிஞர் அண்ணாத்துரை கம்பரசம் எனும் நூலை எழுதினார். கம்பராமாயணத்தை எதிர்க்க வேண்டும் என்று அவர் கூறிய காரணங்களில் ஒன்று,

"தழைத்த பொன்முலைத்தடம் கடந்து அருவிபோய்த் தாழப் புழைத்த போல நீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவை இழைக்கும் நுண்ணிய மருங்குலான் இணைநெடுக்கண்கள் மழைக்கண் என்பது காரணக்குறி என வருத்தான்" எனும் பாடலில் இடம்பெற்றுள்ளது.

சீதை ராமன் பிரிவால் துன்புற்று அசோகவனத்தில் இருந்து அழுது கொண்டிருக்கிறாள். அந்தத் துயர் நிறைந்த சூழலில் அவள் கண்ணீர் சொரியும் நிலையை வர்ணிக்கும் கம்பர் "நுண்ணிய இடைகளைக் கொண்ட அவளது கண்ணீர் திரண்ட அழகான மார்பகங்களில் பட்டு அவற்றைக் கடந்து கீழே செல்கின்றது" என வர்ணித்தார். இது தொடர்பாக அண்ணாத்துரை தெரிவித்த குற்றச்சாட்டு "சீதை கணவனைப் பிரிந்து துன்பத்தில் அழுதுகொண்டிருக்கிறாள். கம்பரோ அவளது கண்ணீர் தழைத்த பொன் முலைத் தடத்தில் படுவது பற்றி வர்ணிக்கிறார்" என்பதாகும். நூலின் எந்தப் பகுதியில் கூற வந்தாலும் அவள் அங்கங்களைப் பற்றி மீண்டும் மீண்டும் வர்ணிக்கும் கம்பனின் பழக்கம் இந்த இடத்தில் பிரச்சினையை ஏற்படுத்திவிட்டது.

ஆண்களின் இத்தகைய வர்ணனைகளை பெண்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? என்ற வினாவுக்கு தமிழ் இலக்கிய வரலாற்றின் எந்தக் காலத்திலும் பதில் கிடைக்கவில்லை. முதல் எதிர்ப்புக் குரலை ஈழத்தின் பெண் கவிஞரான அ.சங்கரி பதிவு செய்கிறார். ஈழத்துப் பெண் கவிஞர்கள் பத்துப் பேரின் 24 கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்த 'சொல்லாத சேதிகள்' என்ற நூலில் இடம்பெற்ற அ.சங்கரி அவர்கள் பார்வையில் 'எனக்கு முகம் இல்லை' என்ற கவிதை இங்கு தரப்படுகிறது.

எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை

அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன

சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள் ஆகும்

கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது உடலையே நோக்குவர்

கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்........

ஆண்கள் தொடர்பான பொதுவான பார்வையாக இக்கவிதை எழுதப்பட்டுள்ளது. ஆண்கள் பெண்களின் முகம் (தனித்தமை) பற்றியோ, இதயம், ஆத்மா என்பவை பற்றியோ சித்தரிப்பதில்லை. அவர்களுக்கு இதயம், ஆத்மா என்பவை உண்டென்பதையே பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

அவர்களின் பார்வையில் பெண்கள் இரண்டு மார்புகள், நீண்ட கூந்தல், சிறிய இடை, பருத்த தொடை என்பவற்றைக் கொண்டவர்களாக அல்லது அவற்றால் அழகு பெறுபவர்களாகவே காணப்படுகின்றனர். பெண்களை மனம் சார்ந்தவர்களாக அல்லாமல், உடல் சார்ந்தவர்களாகவே இவர்கள் நோக்குகின்றனர்.

செயற்பாடுகளைத் தீர்மானிப்பதிலும் கூட பெண்களுக்குச் சுதந்திரம் வழங்கப்படாமல், ஆண்களே அவற்றையும் தீர்மானிக்கின்றனர். சமையல் செய்தல், படுக்கை விரித்தல், குழந்தை பெறுதல், பணிந்து நடத்தல் என்பவை ஆண்கள் எதிர்பார்க்கும் கடமைகளாக உள்ளன.

கற்புக் கோட்பாடு கூட பண்டைக்காலத்திலிருந்து பெண்களுக்கே உரியதாகக் கருதப்பட்டது. கண்ணகியை கற்புக்கரசியாகப் போற்றிய தமிழர்கள், கோவலனின் கற்பிழந்த நிலை பற்றிப் பேசவில்லை. மகாகவி பாரதி மட்டுமே

"கற்பு நிலை என்று சொல்ல வந்தார்- இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" என முதன்முதலாக தனது பெண்கள் விடுதலைக் கும்மிப் பாடல் மூலம் ஆண், பெண் இருபாலாருக்குமே கற்பு அவசியம் என்பதை வலியுறுத்தினார். ஆனால் சங்கரியோ கற்புப் பற்றிப் பேசுபவர்களின் முரண்பட்ட நடத்தைகளை, பெண்களுக்கு மட்டுமே கற்பை எதிர்பார்த்துக் கொண்டு, தாம் முறை தவறி நடக்கும் ஆண்களின் நிலையை மிகவும் துணிச்சலாக எடுத்துக்காட்டுகிறார்.

"கற்புப் பற்றியும்
மழை பெய்யென பெய்வது பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது உடலையே நோக்குவர்"
என அவரின் சித்திரிப்பு அமைகிறது.

பெண்ணின் அகத்தைப் பார்க்காது முகத்தைப் பார்க்கும் நிலையில் , உடல் அழகை மட்டும் ரசிக்கும் நிலையில் சங்கரிக்கு கணவனும் கடைக்காரனும் ஒன்றாகவே தெரிகின்றனர்.

"கணவன் தொடக்கம் கடைக்காரன் வரைக்கும் இதுவே வழக்கம்" எனக் கவிதை முடிகின்றபோது புதிய சிந்தனைகள், குற்ற உணர்ச்சிகள் ஆண்களின் மனதில் தொடங்கக் கூடிய வகையில் கவிதை உருவாக்கப்பட்டிருக்கிறது. இழிவான செயற்பாடுகள் உயர்ந்த புனிதமான உறவான கணவனைக் கூட கீழ் நிலைக்குத் தள்ளிவிடக் கூடும் எனச் சங்கரியின் கவிதை எச்சரிக்கின்றது. எனவே ஆண்கள் பெண்களை வெறும் போகப் பொருட்களாகவும், அழகுப் பதுமைகளாகவும் கருதும் நிலையிலிருந்து விடுபட்டு அவர்களுக்குள்ளும் ஓர் ஆத்மா, ஓர் இதயம், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் என எண்ணிப்பார்ப்போமாக.

## கொரோனா

கொரோனா அரக்கனே!
கொடிது கொடிது உன்னாட்சி
உலகம் சுற்றி வலம் வந்து
உயிர்களை அழித்து ஒழிக்கிறாயே


வயது முதிர்ந்த முதியோரும்
வாழத் துடிக்கும் இளையோரும்
பால் மணம் மாறாப் பாலகரும்
பள்ளி செல்லும் சிறார்களும்

உன்கொடிய கரங்களில் சிக்கி
உத்தரிக்கும் துன்பம் தாங்காது
வளமுடன் வாழ எண்ணி
புலம்பெயர்ந்து புகலிடம் தேடிய

எம்மினிய உறவுகள் துயரமது
எம்மை தினமும் வாட்டுதே
எங்கெங்கும் தட்டுப்பாடு
எப்பொருளும் தட்டுப்பாடு

முகக் கவசம் முதல் மருந்துக்கள் வரை
முந்தி வரிசையில் நிற்கும் எம் உறவுகள்
கொடியவனே உனை அடக்க
உலகில் யாருமே இல்லையா?

**யோ.கேசிகா**
**விவேகானந்த வித்தியாசாலை**
**மானிப்பாய்.**
அங்கத்துவ இல. 34



# மௌன மொழி

8 இற்கான கவிதைகள்



பரிசு பெறும் கவிதை

மழையது தடையில்லை
மனம் இரண்டு மகிழ்ந்திட
மழைக்கொதுங்க இடமின்றி – வாழை
இலை கொண்டு எனை
மறைத்தாய் மன்னவனே
முதுமையிலும்–
புன்முறுவலுடன் முடிவிலாது
வாழும் இந்த பேரன்பே

**சீ.நிருஜன்**, மல்லாகம்.
யாழ்ப்பாணம்.

மழை மட்டும் சாரலைத் தூவவில்லை
உங்கள் இதயங்களும் தான்...
உங்கள் வயது மட்டும் முதிர்ந்திருக்கலாம்
இளமைசொரி அன்புக்கு ஏது முதிர்வு?
இயற்கை சாரலோடு உங்களை அணைக்க
நீங்கள் ஒருவரையொருவர் அணைக்க...
இதுவல்லவோ இனிய வசந்தம்
ஆஹா! இனியேன் வசந்தலோகம்?

**மாதகல் மயூரன்**

கொட்டும் மழைக்கு – கறுப்பு
குடை கொண்டு எதிர்ப்பு வரையாமல்
வெட்டும் மின்னலையும் தான் மறந்து
வண்ண பச்சை வாழையிலை கொண்டு
பச்சைக் கொடி காட்டும் பச்சைத் தமிழன்
பழமை இல்லறவியலுக்கு இவர்கள் உவமை
இச்சை மனைவியுடன் இளமைத் தாவணிக் கனவுகள்
இனிதாய் மீண்டு வர புன்னகைக்குள் புதைந்து

**வே.பாமா**, சுதந்திரபுரம்

வானம் வரம்புமீறி
வகையாய் பொழிந்திட
ஆதவனும் வழிவிட்டான்
அகம் நிறைந்து வாழ்த்திட
மண்ணை முத்தமிட்ட
மழைத்துளிகளும் வெட்கப்பட்டன
காலம் கடந்த
நம் காதல் கண்டு– கண்ணே!

**லயஸ்ருதி சிவகுமார்**,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

முதுமை வயதிலும்
இணைபிரியா ஒற்றுமை
வறுமையிலும் செம்மையாய்
வாழலாம் என
வடித்த ஓவியமோ
மழைக்கு குடையென
இலைக்குள் இடம்கொடுத்த
உயர்ந்த குடிமகனே

வி.கிசானி,
புங்குடுதீவு

குழி விழுந்த கன்னங்கள்
ஒளி இழந்த கண்கள்
தள்ளாடி தடுமாறும் வயது
வீடு பணம் சொத்து இழந்தும்
கொட்டும் மழைச் சாரலிடையே
இளமைக்காதல் துள்ளலுடன்
முதுமையில் காதல் செய்யும்
தம்பதிகள் போல வாழ்வோம்

**இந்திரா ஆனந்தன்**,
பரமானந்தா இல்லம், வதிரி,கரவெட்டி.

வயோதிபம்
எமக்கொரு
தடையல்ல
வா...
வாழ்ந்து காட்டுவோம்
உற்ற உறவும்
பெற்ற பிள்ளையும்
கைவிட்ட போதிலும்...

**க.நாகேஸ்வரா**, சண்டிலிப்பாய்.

உடல் இரண்டு
உயிர் ஒன்று
முகத்தில் முதுமை
அகத்தில் இளமை
வரவுகளில் வறுமை
உறவுகளால் வெறுமை
அகவைகளால் வாழ்க்கையில்
எல்லை இருந்தும்
வாய் நிறைந்த
உவகைகளால்
வாழ்ந்திடும் நீங்கள்

**பொ.யோகேஸ்வரன்**,
ஆலடி, காரைநகர்.

முத்து முத்தாய் மழை தூவ
முதுமை ஜோடி இருவரும் பூரிக்க
குடையென இலையும்
குதூகலமாய் மலரும் நினைவுகளும்
பழையன மறந்து
பட்சமுடன் அணைக்க
இயற்கையின் மகிழ்வில்
இவர்கள் இளையவர்கள்

**சிவரம்யா**, யாழ்ப்பாணம்.

இளமைத்தூறல்கள்
நனைத்த சாரல் மழைத்துளிகள்
தராதவோர் இன்பம் இது
வாழ்வின் இறுதிகளில்
மோகம் கலத்திழையும் காதல்

**கோஜியா**, ஸ்ரான்லி வீதி.

மழைத்துளி ஓர் ஓரமாய் நின்று
என்னவளே உனை நான் ரசித்தபடி என்
கரங்களால் ஓரிலையை பற்றிப் பிடித்து நீ
நனையாது என்னருகில் என்றும்
புன்னகைத்து இன்றல்ல என்றும் உனை
நான் பார்த்திருந்தால் அதுவே
முதுமையானாலும் மாறாத என் காதல்

**ரதன்**, பறசங்குளம், புளியங்குளம்.

முதுமையிலும் முடியாத அன்பு
மழையென்றும் பாராத பேரன்பு
மழைத்தூறல் மங்கையவள்
மடிமீது படாதிருக்க
தலைவனவன் தாங்கினான்
இலை தனையே

**பி.ரஞ்ஜனி**,
**5 ஆம் வட்டாரம், பதுளை.**

வான்முகில் இருளினில் குளிர்காற்று வீசிட
கன்னத்தில் துளிவிழ பூமழை பூமிதனில்
ஆதவன் மறைந்திடும் அந்திப் பொழுதினில்
அப்புவின் பாதியில் ஆச்சியும் எதிரினில்

ஒரு சோடி பறவையாய் பறந்த இதயங்கள்
வாழை யிலை தஞ்சமதில் ஆனந்த புன்னகையுடன்
காதல் ஆரவாரங்கள் வானில் மட்டுமல்ல
பார்வைகளின் சங்கமத்துடன்
பாரினிலும் நடந்தேறியது

**கே.மது**. மீசாலை.

பதின்ம வயது காதல்தான் காதலா
நரைவிழுந்தாலும் நம் காதல்
என்றும் இளமையே
வாழையிலை கொண்டு உன்னை
நனைய விடாமல் என் அருகில்
அணைத்திடுவேன் – இம்மழை
இவ்வாறு நீளாதா என்ற ஏக்கத்துடன்...

வரதராசன் தர்மிகா.

# மௌன மொழி 9




அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

கவிதைக்கு பரிசு 1000/-

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனை யவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**21.08.2020**

0773165555





புதிர் 6

இப்போது
தான் அந்தப்
பொல்லாத பாம்பிடமி
ருந்து தப்பித்து வந்திருக்கிறேன்.
அதற்குள் இன்னொரு சிக்கலுக்குள்
என்னைத் தள்ளிவிடுவது நியாயமா
இளவரசர்களே? என்று பரிதாப
மாகக் கேட்டான் காக்கை
குப்தன்.

# புதிர்மலை மர்மங்கள்




மாயன்

இங்கே இரு வாசல்களிலும் இரு காவலர்கள் உள்ளனர். ஆனால் இந்த வாசல்களில் ஒன்றுதான் உண்மையாகவே உங்களை புதிர்மலைக்குக் கொண்டு செல்லும். மற்றைய பாதை மீண்டும் குகையின் தொடக்க இடத்துக்கே திரும்பப் போகச் செய்யும். எனவே உங்கள் புத்திசாலித்தனத்தை வைத்து சரியான பாதையை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்" என்றது அந்த மர்மக்குரல்.

"இதென்ன அநியாயம். சரியான பாதையை இதற்கு முன் இங்கே வந்திராத எம்மால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?" என்று குமுறினான் பரிவழுதி.

"அப்படியானால் இங்கேயே இருக்கும் காக்கை குப்தன் சரியான பாதையைக் கண்டுபிடிக்கட்டுமே" என்று ஒரு வழி சொன்னான் இளஞ்சந்திரன். அதைக் கேட்டதும் காக்கை குப்தனுக்கு ஐந்தும் கெட்டு, அறிவும் கெட்டது போன்ற உணர்வு.

" இப்போதுதான் அந்தப் பொல்லாத பாம்பிடமிருந்து தப்பித்து வந்திருக்கிறேன். அதற்குள் இன்னொரு சிக்கலுக்குள் என்னைத் தள்ளிவிடுவது நியாயமா இளவரசர்களே?" என்று பரிதாபமாகக் கேட்டான் காக்கை குப்தன்.

"உங்கள் பிரச்சினையைப் பின்னர் வைத்துக் கொள்ளுங்கள். இப்போதுஇந்தப் புதிரைக் கேட்கிறீர்களா?" என்று அந்த மர்மக் குரல் கடுமையான தொனியில் சொன்ன பிறகுதான், இவர்கள் நால்வருக்கும் இன்னும் புதிர் முழுமையாகச் சொல்லி முடிக்கப்படவில்லை என்பது புரிந்து, அமைதியானார்கள்.

" இந்த இரு வாசல்களில் ஒன்றே சரியானது எனச் சொல்லிவிட்டேன். இந்த இரு வாசல்களிலும் காவலுக்கு நிற்பவர்களில் ஒருவனுக்கு பெயர் ராகு. இன்னொருவருனுடைய பெயர் கேது. இவர்கள் இருவரில் ஒருவன் எப்போதும் உண்மையை மட்டுமே பேசுவான். மற்றவன் எப்போதும் பொய்யை மட்டுமே பேசுவான். ஆனால் அவர்களில் யார் உண்மை பேசுபவன், யார் பொய் பேசுபவன் என்பது யாருக்குமே தெரியாது. உங்களில் ஒருவர் ராகு அல்லது கேது இருவரில் ஒருவரிடம் மட்டும், ஒரேயொரு கேள்வியைக் கேட்டு சரியான பாதையைக் கண்டுபிடிக்க வேண்டும். சரியான பாதையைக் கண்டுபிடிக்காவிட்டால் ஆயுள் முழுதும் இந்தக் குகைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியதுதான்" என்று சொல்லிவிட்டு அந்த மர்மக் குரல் கடகடவெனச் சிரித்தது.

"யார் உண்மை பேசுபவன், யார் பொய் பேசுபவன் என்றும் தெரியாது. எது சரியான பாதை என்றும் தெரியாது. இந்த லட்சணத்தில் ஒரேயொரு கேள்வியை, ஒருவனிடம் மட்டும் கேட்டு பாதையைக் கண்டுபிடிப்பதென்பது இந்த ஜென்மத்தில் முடியாத காரியம்' என்று நால்வரும் ஒரேசமயத்தில் எண்ணினார்கள். அந்த நினைப்பே பெரும் அயர்ச்சியை அவர்களுக்குக் கொடுத்தது. திக்பிரமையால் அப்படியே குகைச் சுவரோரமாகச் சாய்ந்து விட்டனர்.

அப்போது திடீரென துவாரகன் துள்ளிக் குதித்தான்.

"ஒரு வழி இருக்கிறது. அது மட்டும் சரியென்றால் இந்தப் புதிரை அவிழ்த்து வெளியேறிவிடலாம்" என்றான்.

"என்ன வழி?" என்று இளஞ்சந்திரன் கேட்டான்.

அதற்குப் பதில் சொல்லாமல் தன் இரு விரல்களை அவன் முன் நீட்டினான் துவாரகன்.

"இந்த இரு விரல்களில் ஒன்றைத் தொடு பார்ப்போம். அதை வைத்து எந்தக் காவலாளியிடம் அந்த ஒற்றைக் கேள்வியைக் கேட்பதென நான் முடிவெடுக்கிறேன்" என்றான்.

சில நிமிடங்கள் யோசனையின் பின்னர் , அவனது ஒரு விரலைத் தொட்டான் இளஞ்சந்திரன். உடனேயே ,

" நீ ராகுவிடம் அந்தக் கேள்வியைக் கேட்குமாறு தெரிவு செய்திருக்கிறாய் " என்றான் துவாரகன்.

சொல்லிவிட்டு ராகு என்ற காவலாளியை நோக்கி நடந்தான் . அப்போது மர்மக்குரல் மீண்டும் ஒலித்தது.

" துவாரகா, துணிவு மட்டும் இந்தப் புதிரை அவிழ்க்க உதவாது. விவேகமும் வேண்டும். தற்செயலாக நீ ஒன்றுக்கும் மேற்பட்ட கேள்விகளைக் கேட்டாலோ, தவறான பாதையைத் தெரிவு செய்தாலோ உனக்கு பேச்சுத் திறன் இல்லாமல் போய்விடும்" என்று எச்சரிக்கை செய்ததுஅந்தக் குரல். அதைக் கேட்டதும் துவாரகன் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டான்.

'ஒருவேளை என்னுடைய கணிப்புத் தவறாகி விட்டால் அவ்வளவுதான். சரி, வருவது வரட்டும்' என்று எண்ணிக் கொண்டே ராகுவை நெருங்கினான். அவனிடம் அந்த ஒற்றைக் கேள்வியை மெல்லிய குரலில் கேட்டான். அந்தக் கேள்வி ராகுவுக்கு கேட்டாலும், ஏனையவர்களுக்கு கேட்கவே இல்லை. கேள்விக்கு விடையாக ஒரு பாதையை ராகு காட்டினான். உடனேயே துவாரகனின் முகம் மலர்ந்தது.

" வாருங்கள் சரியான பாதையைக் கண்டுபிடித்துவிட்டேன்போவோம்" என்று கூறி எல்லோரையும் அழைத்தான். ஆனால் மற்றவர்களுக்கு துளியும் நம்பிக்கை இல்லை. ' எப்போதுமே பொய் பேசும் காவலாளியாக ராகு இருந்திருந்தால், அவன் தவறான பாதையைத்தானே காட்டி இருப்பான். ராகுவின் சொல்லை நம்பி எப்படிப் போக முடியும். முதலில் யார் உண்மை பேசுபவன், யார் பொய் பேசுபவன் என்றல்லவா துவாதே ரகன் கண்டுபிடித்திருக்க வேண்டும்'


என்று அவர்கள் எண்ணிக் கொண்டாலும், வேறுவழியில்லாததால் துவாரகனோடு செல்லப் புறப்பட்டனர். அப்போது துவாரகன் எடுத்த முடிவு அனைவரது தலையையும் கிறுகிறுக்கச் செய்தது. அப்படி என்னதான் முடிவெடுத்தான் அவன்?

(புதிர்கள் தொடரும்)

## பிஞ்சு தூரிகைகள்



கே.அக்ஷிதா,
தரம்- 2A
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



பா.அகிலேஷன்,
தரம்- 6D
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



பி.பிரியங்கன்
தரம்- 9
யாழ்.வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.
அங்கத்துவ இல- 009

# வாழை மரத்து ஊஞ்சல்கள்

சிறுகதை

○ ச.குணாளினி

அப்பா,
இங்கு என்னோடு படித்த நிர்மலாவுடன் வாழ விரும்புகிறேன். அவளது வீடு இங்கே தான். நீங்கள் இங்கே வந்துவிடுவது நல்லது என்று நினைக்கின்றேன். அவசரமாக ஒரு 20ஆயிரம் தேவைப்படுகிறது. எங்கள் வேம்பைக் கொடுத்தால் தேறும் தானே? பரமசாமியண்ணைக்கு கொடுத்திடுங்கோ..

கதிர்காமத்தார் இருமிக் கொண்டிருந்தார். இப்ப கொஞ்ச நாளாய் இப்படித்தான் தொடர்ச்சியான இடைவிடாத இருமல். ஆனாலும் அவருக்கு ஒரு விதத்தில் நிம்மதியாக இருந்தது. இது மகனதும், மருமகளதும் அலுவலக நேரம். ஆகவே சுயாதீனமாக இருமுவதற்குச் சுதந்திரம் உண்டு.

உள்ளே கோமதி சமைத்துக்கொண்டிருந்தாள். அவள் வீட்டு அலுவல்களைப் பெருமளவு பாரத்துக்கொள்ளுகின்ற வேலைக்காரப் பெண். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பாள். கூப்பிட்ட குரலுக்கு வந்து நிற்பாள், போய்விடுவாள். ஐந்து பெண்கள் அவளுக்கு. நான்கு "கரை சேர்ந்த" பின் ஐந்தாவதுடன் சந்தோஷமான வாழ்க்கை. இந்த வீட்டில் அவரைத் திருத்தாத ஒரேயொரு ஜீவன். அவளும் தன் நிலை கருதித்தான் அமைதியாக இருக்கிறாள் என அவர் நினைத்துக்கொள்வார். அல்லது வயதால் தளர்ந்த அவர் மீது பரிதாபம் கலந்த அன்போடு இருக்கிறாளோ என்னமோ? நினைத்த மறுகணமே தலையைக் குலுக்கிக்கொள்வார். "பரிதாபமாவது... பாசமாவது... அவையெல்லாம் வெறும் நாடகங்கள். கேலிக் கூத்துக்கள்" என்பது அவரது தற்போதைய எண்ணம். அனுபவங்கள்தானே மனிதனின் எண்ணங்களை ஆக்குகின்றன.

இருமும் போதெல்லாம் அவரது நெஞ்சு வலிக்கும். இரவில் என்றால் இரட்டிப்பு வலி. மருமகளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய ஈட்டியாய்த் தாக்கும்.

"இது என்ன இது! பகல் முழுதாய் ஓடி ஓடி உழைச்சுக்களைச்சு வீட்ட வந்தாலும் மனுசர் நிம்மதியாய் இருக்கேலாதாம்."

அவவின் உரத்த குரல் கேட்டு இவர் மிகவும் மனம் நொந்து போவார். மகனிடமிருந்து ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை ஆறுதலாக வராதா என்று ஏக்கத்துடன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்வார். புலன்களை ஒருமுகப்படுத்திக் கேட்டாலும், அவர் எதிர்பார்க்கும் வார்த்தைகள் கேட்கா. சொல்லப்பட்டால்தானே அவை கேட்கும்? மனைவியின் சொல்லுக்கு மறுவார்த்தை பேசி அறியாத மகன் மும்முரமாக ஏதாவது வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகப் பாவனை செய்து கொண்டிருப்பான்.

நேரம் 8.45ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. பக்கத்து வளவை நோக்கி நடந்தார் அவர். அதுதான் அவரும் வள்ளியம்மையும் வாழ்ந்து கழித்த வீடு. முற்றத்தில் ஒரு வேம்பு அதன் கீழ் இருந்த சோபா மீது சாய்ந்து கொண்டார். சின்ன இலைகளின் ஊடாக நீல வானம் தெரிந்தது. ஒரு தந்தையின் மார்பில் தவழும் குழந்தையாக வெண்மேகத் திரள் ஒன்று மிதந்து கொண்டிருந்தது. அவரது சிந்தனைகளும் அதைப் போலவே அலைந்து கொண்டிருந்தன.

அவர் அந்த ஊருக்கே பெரியவராக விளங்கியவர். வீதி வழி விட இறங்கி நடந்தால் குடியானவர்கள் சால்வை எடுத்து வணக்கம் சொல்லும் அளவுக்கு குடும்ப கௌரவம் இருந்தது. மூன்று மகன்மார். அப்போதெல்லாம் பெண் பிள்ளைகளை பெற்றவர்கள் பாவிகள் என்பது அவரது கருத்து.

"எனக்கு மூண்டும் பெடியள் தான்" பெருமிதத்தோடு எண்ணிக்கை இல்லாத எத்தனையோ தடவைகள் அவர் சொன்னதுண்டு.

மூத்தவன் மாதவன். தாய் சொல் மீறாத பிள்ளை. தற்போது மனைவி சொல் மீறாத கணவன். அவனுக்கு ஒரே மகன் சேது மாதவன் பெயர். செல்லமாக சேது. இரண்டாவது கேசவன். 20 வயதில் வெளிநாடு சென்றவன். தற்போது ஒரு ஆங்கிலேய கிறிஸ்தவப் பெண்ணை மணம் செய்து கொண்டிருந்தான். செய்தி அறிந்ததும் இவருக்கு தாங்கவே முடியாது போயிற்று.

"என்னை ஆரெண்டு நினைத்துக் கொண்டிருக்கிறான்? இல்லை மெய்யாய்த் தான் கேட்கிறேன். அவன் என்னைப் பற்றி என்ன நினைத்து கொண்டு இருக்கிறான்?" என்று சத்தமிட்டதோடு நில்லாது பல வருடங்களின் முன்பே தந்தை மகன் உறவை கத்தரித்து விட்டிருந்தார்.

"கரோலினா கேசவன் திருமணப் படம் வந்த போது கூட அதை சுக்குநூறாக கிழித்துவிட்டார். மூன்றாவது மகன் ராகவன். மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரியின் ஊடான புதிய ஆசிரியர் நியமனம் அவனுடையது. அவன்தான் அவரது கனவுகளை சிதறடிக்காத ஒரே மகன். அவர்களின் இடையே மிக அன்போடு கடிதங்கள் பரிமாறப்படும்.

"அப்பா இன்னும் மூன்று மாதங்கள் தான் அப்பா..... நான் வந்திடுவன். நீங்க வளர்த்த அந்த வேம்புக்கு கீழே இருந்து கொண்டு..... நீங்கள் தேவாரம், புராணம் பாட கேட்க வேண்டும் போல....." என்று ஏதேதோ எழுதுவான் மகன். இறுதியில், "அப்பா இந்த மாதச் செலவு கொஞ்சம் அதிகமாகப் போயிட்டுது, ஒரு 500 உங்கட பென்சனிலை தரலாமா?" என்று முடித்திருப்பான். கடைசி வரிகள் "சுருக்கென"த் தைத்தாலும், அவர் அதை ஒதுக்கிவிட்டு பிடிவாதமாக மேலே உள்ள வரிகளைத் திரும்பத்திரும்ப படித்துக் கொண்டிருப்பார்.

இன்னும் நேரம் இருந்தது தபால்காரன் வரவுக்கு. அவனது உருவம் பிரதிஷ்டை பண்ணாத விக்கிரகம் அவருக்கு. நாளின் ஆரம்பம் தொட்டு 10 மணி வரை அவனையே தியானித்துக் கொண்டிருப்பார்.

இனி வரமாட்டான். எழுந்து நடந்தார். பத்து மணிக்குப் பக்கத்திலுள்ள மார்க்கெட்டுக்கு காய்கறி வாங்கப் போக வேண்டும். அது அவருடைய பொறுப்பாகி பல வருடங்கள். களைப்பாக இருந்தது. அதைக் கவனிக்க முடியாது. "தம்பி" தன்ர வேட்டிக்குச் சோப் போட்டு வைக்கச் சொன்னவன். இரண்டுக்கு நேசறிக்கு போய் சேதுவைக் கூட்டி வர வேண்டும். சேது வலு துருதுருப்பான பையன். கையில் ஒரு நீர்க் குவளையை வைத்துக்கொண்டு "இந்தக் கிழம் எங்கை போனது? இதோடை நான் படுறபாடு..." என்று தாய்போல் பாவனை பண்ணி நடித்துக் காட்டுவான். சலனமில்லாது பார்த்துக்கொண்டிருப்பார் அவர். "ஏன் தாத்தா சிரிக்க மாட்டீங்களாம்?" என்று அவரை உலுக்குவான். அவருக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியாது.

இன்னும் சில வாரங்களில் மகன் வந்துவிடுவான். மனம் விரும்புவது போல ஆதரவாக அவன் தாங்க,அவர் வாழப்போகிறார். கனவுகள் அவருள் பெருகிக்கொண்டிருந்தன. அப்போது தான் அந்தக் கடிதம் வந்தது. இப்போது கடிதம் வாங்குவதற்கே எழுந்து போக முடியாதபடி உடல் தளர்ந்திருந்தது. கடிதச் செய்தியில் ஆடித்தான் போய்விட்டார் அவர். "அப்பா, இங்கு என்னோடு படித்த நிர்மலாவுடன் வாழ விரும்புகிறேன். அவளது வீடு இங்கே தான். நீங்கள் இங்கே வந்துவிடுவது நல்லது என்று நினைக்கின்றேன். அவசரமாக ஒரு 20ஆயிரம் தேவைப்படுகிறது. எங்கள் வேம்பைக் கொடுத்தால் தேறும் தானே? பரமசாமியண்ணைக்கு கொடுத்திடுங்கோ" என்று முடித்திருந்தான்.

அவர் அதிர்ந்து போனார். இவனுமா? இவனும் இப்படித்தானா? அவருக்கு ஏக்கமாக இருந்தது. தனது வாழ்வின் இலக்கையோ அல்லது அடைவையோ அவரால் தீர்மானிக்க முடியவில்லை. மூன்று மகன்கள் பிறந்ததையே அதிஷ்டமா? துரதிஷ்டமா? எனத் தீர்மானிக்க முடியவில்லை.




கோமதியின் நிம்மதி கூடக் கிடைக்கவில்லையே என்று ஏங்கினார். மார்பு வலிப்பது போலிருந்தது.

"வேம்பு வெட்டுறதா? அது மட்டும் நடக்காது. இனி நீங்கள் எங்கை அவனோட போறது? நீங்கள் சொன்னபடி கடைசிக் காலத்தில பார்க்கப்போற எங்களுக்கு வளவை எழுதிப் போடுங்கோ" மூத்த மகன் காரசாரமாய்ச் சொல்லிவிட்டு போய்விட்டான். அவர் கண்களை மூடிக்கொண்டார். மார்பில் வலி கூடியதை உணர்ந்தார். மூடிய கண்களுள் ஒரே ஒரு காட்சி படலமாகத் தெரிந்தது.

"வாழைமரம் ஒன்று நன்றாகச் செழித்திருந்தது. அதில் ஊஞ்சல் கட்ட எத்தனித்தபடி.... அவர்..." சிந்தனைகள், கேள்விகள், பதில்கள் எல்லாமே துடைத்து விட்டது போல மனம் வெறுமையாக இருந்தது. அவரது மார்பு வலி அதிகரித்துக்கொண்டிருந்தது. நாடித் துடிப்பு மெதுவாகக் குறைந்துகொண்டிருக்க, கைகள் மெதுவாகக் குளிர ஆரம்பித்தன.

(யாவும் கற்பனை)

மீள்பிரசுரம்: சஞ்சீவி 13.06.1998



# கொலரா


பொக்கிசன்

கொலரா, இலங்கை முழுவதையும் ஆட்டிப்படைக்குது. எங்கை பாத்தாலும் கொலரா பற்றின கதை தான். பேப்பர், ரேடியோ எல்லாத்திலயும் கொலரா பற்றின செய்தி தான். மூண்டு நாளைக்கு மேலை கொலரா நீடிச்சா ஆக்கள் செத்துப்போயிடுவினமாம். தண்ணியை கொதிக்க வைச்சுத் தான் குடிக்க வேணுமாம்; ரேடியோவிலை அடிக்கடி சொல்லுகினம் அதோடை பேப்பரிலையும் போடுகினம், கண்டபடி கடையளிலை சாப்பிட வேண்டாமாம். சாப்பிட முன்னமும் சாப்பிட்ட பிறகும் ரொய்லற்றுக்கு போன பிறகும் சவுக்காரம் போட்டு கைகழுவச் சொல்லி ரேடியோவிலை அடிக்கடி சொல்லுகினம்; அதோடை பேப்பரிலையும் போடுகினம்.

எல்லாரும் கட்டாயம் கொலரா ஊசி போட வேணுமெண்டு அரசாங்கம் அறிவிச்சிருக்கு. எல்லாரும் போய்ப் போட்டுகொண்டு வந்திட்டினம். அம்மா, அப்பா, ஊர் ஆக்கள் எல்லாரும் போட்டிட்டினம். நான் இன்னும் போடேல்ல பெரியக்கா, காங்கேசன்துறை எம்.ஓ.எச். ஒபிசிலை போய் போடலாமெண்டு சொன்னவ; பெரியக்கா குஞ்சம்மாக்கா ரெண்டு பேரும் நேற்றுப் போய் போட்டுகொண்டு வந்தவை. பெரியக்கா சொன்னவ, கொலரா ஊசி போடுறதுக்கு முத்திரை தேவையில்லை எண்டு.

இந்த சிறிமாவின்ரை அரசாங்கம் வந்த பிறகு ஆஸ்பத்திரியில மருந்து எடுக்கிறதெண்டா 25 சத முத்திரை கொண்டு வர வேணுமெண்டு அறிவிச்சுப்போட்டுது; அதாலை ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்கப்போற ஆக்களெல்லாம் 25 சத முத்திரை வாங்கிக் கொண்டுதான் போறவை. ஏதேன் அவசரமெண்டு யாரையாவது கொண்டு போனாலும் ஆளை இறக்கிப்போட்டுப் போய் முத்திரை வேண்டிக்கொண்டந்துதான் காட்ட வேணும். நான் வெளிக்கிட்டு பஸ்ஸ்டாண்டுக்கு போனன். 769, 763, ரண்டும் நிக்குது நான் நாகராசா அண்ணையிட்ட எது முதல் வெளிக்கிடுது எண்டு கேட்டன். 69 (769) முதல் வெளிக்கிடுது எண்டார். நாகராசா அண்ணை கீரிமலை பஸ் ஸ்ராண்டுக்கு முன்னாலை கடை வைச்சிருக்கிறார்; அவற்றை கடைக்குத்தான் எல்லா றைவர், கொண்டக்டர்மாரும் வாறவை தேத்தண்ணி குடிக்க.

769 காங்கேசன்துறை சந்தியாலை திரும்பி யாழ்ப்பாணம் போகும். 763 நேரை பருத்தித்துறைக்கு போகும். நான் 769ல் ஏறி இருந்தன் கொண்டக்டரும் றைவரும் வந்து ஏறினார்கள். நான் காங்கேசன்துறை ஆஸ்பத்திரி எண்டு காசைக்குடுத்தேன். ஆஸ்பத்திரி வந்ததும் பெல்லை அடிச்சு இறங்கினன்; முந்தி இந்த இடத்தில இருந்த ஆஸ்பத்திரியை இப்ப தெல்லிப்பளைக்கு மாத்தி போட்டினம். அதாலை எங்களுக்கு பெரிய கரைச்சல். ஆஸ்பத்திரிக்குப் போறதெண்டா தெல்லிப்பளை சந்தியிலை இறங்கி நடக்க வேணும். ஆஸ்பத்திரிக்கு முன்னாலை M.O.H Office Dr.Theivendran எண்டு போட் போட்டுக்கிடக்கு(தற்போது இந்த இடம் துறைமுக பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) கண்ணாடி போட்டுகொண்டு இருந்தார் டொக்டர்; நான் கொலரா ஊசி போடுறதுக்கு முத்திரை வேணுமோ எண்டு கேட்டன்; இல்லையில்லை எண்டு சொல்லிப்போட்டு என்ன பெயர் எண்டு கேட்டிட்டு என்ரை பேருக்கு முன்னாலை Master எண்டு எழுதிப் போட்டுத் தந்தார். நான் போய் ஊசி போட்டிட்டு காட்டையும் கவனமா கொண்டு வந்தன்.



> கண்டபடி கடையளிலை சாப்பிட வேண்டாமாம். சாப்பிட முன்னமும், சாப்பிட்ட பிறகும் ரொய்லற்றுக்கு போன பிறகும் சவுக்காரம் போட்டு கைகழுவச் சொல்லி ரேடியோவிலை அடிக்கடி சொல்லுது; அதோடை பேப்பரிலையும் போடுகினம்.


# யாழ். மாநகர சபையின் வரலாறு

## (1906 - 1949)

ந.பரமேஸ்வரன்

14.11.1925 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு மேலதிக விடுதி அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் செம்மணி வீதி -பருத்தித்துறை வீதிச் சந்தியிலும், கடற்கரை வீதி- சேமக்காலைச் சந்தியிலும் மேலதிக விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென திசைவீரசிங்கம் பிரேரித்தார்; சோமசுந்தரம் வழிமொழிந்தார்.

இதே தினம் கொழும்பு கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் யாழ் நகர அபிவிருத்திச் சபைக்கு 1926ம் ஆண்டிற்கு சுகாதாரச்செலவுகளுக்கு 1593.93 சதமும் 300.00 ரூபா அலவன்சும் ஒதுக்கப்பட்டது;




அத்துடன் யாழ் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்பட்ட அபாயகரமான மரங்களை தறிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

19.11.1925 அன்று 1926ம் ஆண்டிற்குரிய பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் சிற்றூழியர்களினதும், Inspector of Works பதவி உத்தியோகத்தரதும் சம்பளத்தை அதிகரிப்பதெனவும், சிற்றூழியர்களுக்கு மிதிவண்டி அலவன்சும் Inspector of Works பதவி உத்தியோகத்தருக்கு மோட்டார் சைக்கிள் அலவன்சும் வழங்குவதென தீர்மானிக்கப் பட்டது. 1926ம் ஆண்டிற்குரிய சந்தை குத்தகை வருமானம் வருமாறு.

| | |
|---|---|
| பெரியகடை சந்தை | 6221.00 ரூபா |
| மீன் சந்தை | 900.00 ரூபா |
| கல்வியங்காடு சந்தை | 1201.00 ரூபா |

2.11.1925 அன்று யாழ் நகர அபிவிருத்தி சபை ஏனைய நகர அபிவிருத்தி சபைகளைப்போல் செயற்படுவதில்லையெனவும் ஒழுங்கான சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லையெனவும் தெரிவித்து வரி செலுத்துவோர் சங்கம் வீரமாகாளியம்மன் கோயில் முன்றலில் கண்டனக்கூட்டமொன்றை ஏற்பாடு செய்தது. முதலியார் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சிவசம்பு, பண்டிதர் மயில்வாகனம்,A. இளையப்பா, C.நவரத்தினம், A.P.தம்பையா ஆகியோர் உரையாற்றினர். கூட்டத்தின் முடிவில் ஆளுநருக்கு மனு அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.

# விருப்பு வாக்கில் மோசடி செய்ய முடியுமா?

○ சந்திப்பு அ.ஆ.

நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மொஹமட் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் ஜுலை மாதம் 25ஆம் திகதி வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளருமான சி.வி.விக்னேஸ்வரன், பத்திரிகையாளர் சந்திப்பில் குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருந்தார்.

‘2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பில் சில பிரச்சினைகள் உள்ளதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் அதற்கு பொறுப்பாக இருந்தவர் மொஹமட். அப்போது தேர்தல் அதிகாரியாக இருந்தவர், இப்போது இளைப்பாறி விட்டார். இருப்பினும் அவரை தெரிந்தெடுத்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். 2015ஆம் ஆண்டு தேர்தலில் சில பிழையான சம்பவங்கள் இடம்பெற்றதாக எனக்குச் சொல்லப்பட்டது. அன்று நடந்த சம்பவங்கள் தொடர்பாக தமிழ் மக்களிடம் பல கருத்துக்கள் உள்ளன. இம்முறையும் அவ்வாறான சம்பவங்கள் நடக்க வாய்ப்புள்ளது. அம்முறை பிழையான சம்பவங்கள் நடக்க முக்கியமாக இருந்த நபரான மொஹமட், மீண்டும் இங்கு அனுப்பப்பட காரணம் என்ன? அதுவும் அவர் இளைப்பாறி சென்றுவிட்ட பின்னர், அவரை தெரிவு செய்து அனுப்பியதன் பின்னணி என்ன? யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் இப்படி அதிகாரியொருவரை அனுப்பியுள்ளனர். ஏனைய மாவட்டங்களுக்கு இப்படி அதிகாரிகளை அனுப்பவில்லை’ என்று பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டி ருந்தார். இதனையடுத்து மொஹமட், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியிருந்தார். இவ்வாறானதொரு நிலையில், தேர்தல் காலத்தில் இது தொடர்பான விளக்கத்தை வெளியிடுவது ஏதாவது ஒரு வேட்பாளரை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது போலாகிவிடும் என்பதால், தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியான பின்னர் தனது கருத்துக்களை உதயன் சஞ்சீவியிடம் பகிர்ந்து கொண்டார்.

## விளக்குகிறார் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மொஹமட்

**கே: ள்வி: நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நீங்கள், திடீரென திரும்பிச் சென்றது ஏன்?**

ப: **தில்** : தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் ஜனாதிபதித் தேர்தலின் போது சில நாள்களும், நாடாளுமன்றத் தேர்தலின் போது ஏறத்தாழ ஐந்து மாதங்களும் தேர்தல் ஆணைக்குழுவில் அரசகரும மொழி நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஆலோசகராகக் கடமையாற்றினேன். தேர்தல்கள் திணைக்களம் காணப்பட்ட காலங்களிலும், பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலும் ஏறத்தாழ 28 ஆண்டுகள் சேவையாற்றி பெற்ற அனுபவத்தை ஏனையவர்களோடும் பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் மீண்டும் தற்காலிகமாக இணைந்து கொண்டேன்.

### மனமுடைந்ததால் போனேன்

கடந்த மாதம் தேர்தல் ஆணைக்குழுவால் நான் யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் ஒழுங்கமைப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் நோக்கில் அனுப்பப்பட்டேன். 1998 ஆம் ஆண்டு முதல் வட மாகாணத்தில் நடைபெற்ற பல்வேறு தேர்தல்களிலும் கலந்து கொண்டு பணியாற்றியவன் என்ற வகையிலேயே நான் இந்தப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆயினும் கடந்த ஜுலை 25 ஆம் திகதிய யாழ்ப்பாண மாவட்ட பத்திரிகைகளில் தேர்தலில் மோசடி செய்யும் நோக்கில் நான் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், கடந்த 2015ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலின் போது யாழ். மாவட்டத்தின் மேற்பார்வை அலுவலரொருவராகப் பணியாற்றிய சந்தர்ப்பத்தில், பல மோசடிகள் இடம்பெற்றதாக அறிக்கையிடப்பட்டதாகவும் குறிப்பி டப்பட்டு ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

என்னுடைய அரச சேவை வாழ்க்கையில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் தேர்தலோடு நேரடியாகத் தொடர்புபட்ட பல்வேறு பணிகளில் கடமையாற்றி அனுபவம் பெற்ற ஒருவராக இருந்தமையாலும், அச்சேவைக் காலத்தில் நான் கடமையாற்றிய எந்தவொரு மாவட்டத்திலும் இத்தகைய ஒரு குற்றச்சாட்டுக்கு இலக்கானமையினாலும், இத்தகைய பழிச்சொல்லொன்றுக்கு ஆளாகாமையாலும், தனிப்பட்ட வகையில் மிகவும் மனமுடைந்து போய் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பணிகளில் என்னால் கடமையாற்ற முடியாதென தீர்க்கமாக தேர்தல் ஆணைக்குவுக்கு அறிவித்து விட்டு அங்கிருந்து வெளியேறினேன்.

### 2015 தேர்தலில் மோசடிகள் இடம்பெறவேயில்லை

**கே: 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது விருப்பு வாக்குகள் தொடர்பான முடிவுகள் வெளியிடப்பட்டபோது, முதலமைச்சர் சுமத்திய குற்றச்சாட் டுக் கள் போன்று அவ்விடத்தில் ஏதாவது நிகழ்வுகள் இடம்பெற்றனவா?**

ப: 2015 ஆம் ஆண்டு வாக்கெண்ணும் நிலையமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இயங்கியது. யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலராக ந.வேதநாயகனும் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக அகிலனும் கடமையாற்றினார்கள். அப்போதைய தேர்தல்கள் திணைக்களத்தின் சட்டம் மற்றும் விசாரணைப் பிரிவின் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளராக கடமையாற்றிய நான், தேர்தல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் பொருட்டு அப்போதைய தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுகளிலுமிருந்தும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய முடிவுகள் அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எத்தகைய நிகழ்வும் இடம்பெறவில்லை. ஆனால் வாக்கெண்ணலின் இறுதிக்கட்டமான விருப்புகள் எண்ணப்பட்டு வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்து அம்முடிவுகள், முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அவை அங்கிருந்த அலு வலர்களால் மீண்டும் அந்நிலையத்துக்குரிய படிவங்களில் பிரதி பண்ணப்பட்டு, கூட்டப்பட் டுக் கொண்டிருந்த போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சில வேட்பாளர்கள், தெரிவத்தாட்சி அலுவலரைச் சந்தித்து தமது விருப்பு வாக்குகள் மீண்டும் எண்ணப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்கள். அந்த இடத்துக்கு என்னை அழைத்த தெரிவத்தாட்சி அலுவலர் இது தொடர்பான சட்ட விளக்கத்தை வேட்பாளர்களுக்குத் தெளிவுபடுத்துமாறு என்னைக் கேட்டுக் கொண்டார்.

### மீள வாக்குகளை எண்ண வேண்டுமெனில்...

மீள் வாக்கெண்ணலோ அல்லது மீள் விருப்பெண்ணலோ வாக்கெண்ணும் நிலையங்களில் வைத்தே அவ்வாக்கெண்ணும் நிலையங்களின் தலைமை வாக்கெண்ணும் அலுவலரிடமே கோரப்பட வேண்டும். அந்தக்கோரிக்கைகள் குறித்த வாக்கெண்ணும் நிலையத்தின் வாக்குகளின் முடிவுகள் அல்லது விருப்புகளின் முடிவுகள் தொடர்பான இறுதி அறிக்கையில் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் கையொப்பமிட முன்னரே முன்வைக் கப்படல் வேண்டும் என்றும் விளக்கினேன். அத்தோடு அவ்வறிக்கையில் கையொப்பமிட முன்னர் கட்சிகளோ அல்லது சுயேச்சைக் குழுக்களைப் பிரதி நிதித்துவப் படுத்துகின்ற முகவர்களோ இரண்டு முறை மீள் வாக்கெண்ணலை மேற்கொள்ளுமாறு கோரியிருக்கலாமென்றும் தெளிவுபடுத்தினேன். தெரிவத்தாட்சி அலுவலரிடம் வாக்குகளையோ விருப்புகளையோ மீளவும் எண்ணுமாறு கோரப்பட்டால் அத்தகைய மீள் எண்ணல்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்திலே எவ்வித ஏற்பாடும் கிடையாதெனவும் விளக்கிக் கூறினேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த சிலர் தாம் நீதிமன்றம் சென்று இதனைத் தீர்த்துக் கொள்வதாகக் கூறிச் சென்றனர்.

### விருப்பை வாக்கை மாற்ற முடியாது

**கே: வாக்கெண்ணும் நிலையமொன்றில் ஒருவருக்கு அடையாளமிடப்பட்டுள்ள விருப்பை இன்னொருவரின் விருப்பாக அடையாளமிடவோ அல்லது ஒரு விருப்போ, இரண்டு விருப்புக்களோ மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுக்களில் வாக்கெண்ணும் அலுவலர்களோ, முகவர்களோ எஞ்சிய விருப்புக்களை அடையாளமிட்டு முடிவுகளைத் தயாரிப்பதற்கான சாத்தியப்பாடுகளோ காணப்படுகின்றனவா?**

ப: இவை எவ்வகையிலுமே நிகழ முடியாத காரியங்களாகும். ஏனெனில் விருப்பு களை எண்ணுகின்ற பொழுது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 5 முகவர்களின் முன்னிலையிலேயே விருப்பெண்ணலும், பதிதலும் நடைபெறும். அத்தகைய முகவர்களின் எண்ணிக்கை இம்முறை தேர்தல் ஆணைக்குழுவால் பத்து முகவர்களாக அதிகரிக்கப்பட்டது.

விருப்பெண்ணலின் போது ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு கிடைக்கப்பெற்ற வாக்குகள் ஆறாகப் பிரிக்கப்படும். அந்த வாக்குச் சீட்டுக்கள் வேறு வேறாகப் பிரிக்கப்பட்டு இடப்படுவதற்காக ஆறு சிறு பெட்டிகள் வாக்கெண்ணல் நிலையத்தின் மேசையின் மீது வைக்கப்பட்டிருக்கும்.

முதலாவது பெட்டி ‘பி1’ எனப் பெயரிடப்பட்டிருப்பதோடு, அப்பெட்டிக்குள் ஒரேயொரு விருப்பு மாத்திரம் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களே இடப்படும். ‘பி2’ என்ற இரண்டாவது பெட்டியில் இரண்டு விருப்புக்கள் மாத்திரம் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் இடப்படும். ‘பி3’ என்ற மூன்றாவது பெட்டியில் மூன்று விருப்புக்கள் மாத்திரம் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் இடப்படும். நான்காவது பெட்டியில் ‘பி310’

என அடையாளமிடப்பட்டிருக்கும். அப்பெட்டியில் நான்கு விருப்புக்கள் அல்லது அதனிலும் பார்க்க அதிகமான விருப்புக்கள் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் வைக்கப்படும். 'பி வொய்ட்' என்ற ஐந்தாவது பெட்டியில் வாக்குச் சீட்டுக்கள் தெளிவற்ற முறையில் விருப்புக்கள் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் வைக்கப்படும். 'என்.ஓ. பி' என்ற பெட்டியில் எவருக்குமே விருப்புக்கள் அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டுக்கள் இடப்படும்.

இவற்றில் முதல் மூன்று பெட்டிகளான 'பி1, பி2, பி3' என்ற பெட்டிகளில் இடப்பட்டுள்ள அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களின் விருப்புக்கள் மாத்திரமே எண்ணப்படும். ஏனைய மூன்று பெட்டிகளிலும் இடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களில் உள்ள விருப்புகள் நிராகரிக்கப்படும். வாக்குச் சீட்டுக்கள் பிரிக்கப்பட்டு முடிவடைந்தவுடன், முதல் மூன்று பெட்டிகளிலுமுள்ள வாக்குச் சீட்டுக்கள் ஐம்பது வாக்குச் சீட்டுக்கள் கொண்ட கட்டுக்களாகக் கட்டப்படும். கட்டுக்களாகக் கட்டி முடிக்கப்பட்ட வுடனேயே தலைமை வாக்கெண்ணும் அலுவலர் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பெட்டிகளிலிருந்து கிடைக்கவுள்ள மொத்த விருப்புக்களின் எண்ணிக்கைகளை வெவ்வேறாகக் குறித்துக் கொள்வார். இதனால் ஒரு விருப்பு மாத்திரம் அல்லது 2 விருப்புக்கள் மாத்திரம் அல்லது 3 விருப்புக்கள் மாத்திரம் உள்ள சீட்டுக்களில், பின்னர் மேலதிக விருப்புக்களை அடையாளமிடல் முற்றாகத் தவிர்க்கப்படுகின்றது.

**ஆயிரத்தெட்டுப் பரிசீலனைகள்**

ஒவ்வொரு வாக்குச் சீட்டுக் கட்டிலுமுள்ள ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும் அடையாளமிடப்பட்டுள்ள விருப்புக்கள் அந்நிலையத்திலுள்ள அலுவலர்களால் முகவர்களின் முன்னிலையில் ஒப்பீட்டுப் படிவங்களில் ஒவ்வொரு வேட்பாளரினதும் இலக்கத்துக்கெதிரே தொடரொழுங்கில் பதியப்பட்டு செங்குத்தாகவும், கிடையாகவும் கூட்டப்படும். அதன் பின்னர் அந்த ஒப்பீட்டுப் படிவங்களிலுள்ள மொத்த விருப்புக்கள் சாராம்சப் படிவங்களில் பதியப்பட்டு அந்நிலையத்துக்கான விருப்புக்களின் முடிவுகள் தயாரிக்கப்படும். இவ்வாறான ஒவ்வொரு பதிவும் அந்நிலையத்திலுள்ள மேலதிகாரிகளால் பரிசீலனை, மீள் பரிசீலனை, அதி பரிசீலனை, எழுமாற்றுப் பரிசீலனை, முத்தாய்ப்புப் பரிசீலனை போன்ற பல்வேறு மட்டங்களிலுமான பரிசீலனைகளுக்குட்படுத்தப்படுவதோடு, பதிந்தவர்களும், பரிசீலித்தவர்களும் உரிய படிவங்களில் அது பற்றிக் கையொப்பங்களையுமிடுவர். இவ்வாறு ஒரு வாக்களிப்பு நிலையத்தின் விருப் பெண்ணல் தொடர்பாக தயாரிக்கப்படுகின்ற படிவங்களினூடாகவே அந்நிலையத்தின் விருப்புக்களின் முடிவுகள், முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அப்படிவத்தில் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் கையொப்பமிட முன்னரே விரும்பினால் அங்கு சமூகம் தந்துள்ள கட்சியின் முகவர்களுக்கு மீள் விருப்பெண்ண லைக் கோர முடியும். மீள் வாக்கெண்ணலிலும் திருப்தி காணாதவிடத்து இன்னொரு முறையும் மீள் வாக்கெண்ணலைக் கோரலாம். மீள் வாக்கெண்ணலின் பின்னர் அல்லது மீள் வாக்கெண்ணல் கோரப்படாவிடின், தலைமை வாக்கெண்ணும் அலுவலர் குறித்த அறிக்கையில் கையொப்பமிடுவதோடு அதனைத் தயாரித்த அலுவலரும், பரிசீலித்த அலுவலரும் கட்டாயம் கையொப்பமிடல் வேண்டும். விரும்பினால் அங்கு சமூகமளித்துள்ள கட்சி முகவர்களும் கையொப்பமிடலாம்.

மேலே எடுத்து விளக்கப்பட்ட விருப்பெண்ணல் படிமுறையை உற்று ஆய்கின்ற போது, அங்கு எவ்விதத்திலும் ஒரு வாக்குச் சீட்டில் ஒருவர் சார்பாகக் குறிக்கப்பட்டி ருந்த விருப்பை இன்னொருவர் சார்பாக குறிக்க முடியாதென்பதை அவற்றை எண்ணுபவர்களுக்கும், பதிகின்றவர்களுக்கும், பல்வேறு பரிசீலனைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கும், பார்த்துக் கொண்டிருப்பவர்களான முக வர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கும் தெரியும்.

**மாற்றவே முடியாது**

**கே: வாக்கெண்ணும் நிலையங்களில் சரியான முறையில் விருப்புக்கள் எண்ணப்பட்டாலும், முடிவுகள் அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையத்தில் அவற்றை மாற்ற முடியுமா?**

ப: இல்லவே இல்லை. வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற விருப்புக்களை, முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையத்தி லுள்ள படிவங்களில் பிரதியிட்டு மீண்டும் கூட்டுகின்ற ஒரு சிறந்த நடைமுறையை விகிதாசாரப் பிரதிநிதித்து வத் தேர்தல் முறைமை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே தேர்தல் திணைக்களமும், பின்னர் தேர்தல் ஆணைக்குழுவும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கு மேலதிகமாக வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற கூற்றிலுள்ள புள்ளி விவரங்களை ஒன்று கூட்டி முழுத் தேர்தல் மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு வேட்

ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையக் கூற்றிலுமுள்ள ஒவ்வொரு வேட்பாளரினதும் விருப்புக்கள், முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையங்களில் மூன்று சாராம்சப் படிவங்களில் ஒன்றன்பின் ஒன்றாக பிரதிபண்ணைப்பட்டு கூட்டப்படுவதால், முடிவுகளை அறிவிப்பதில் காலதாமதமேற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

பாளருக்கும் கிடைக்கப் பெற்ற விருப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதைக் கண்டறிவதற்கு ஒவ்வொரு கட்சிக்கும், சுயேச்சைக்குழுவுக்கும் தேர்தல் ஆணைக்குழு அவகாசத்தை அளித்துள்ளது. முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையத்தி னுள்ளே கூட ஒவ்வொரு கட்சியையும், குழுவையும் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற இரு முகவர்கள் வீதம் அப்பணிகளை கண்காணிக்க தேர்தல் சட்டம் அனுமதியளித்திருக்கின்றது.

ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையக் கூற்றிலுமுள்ள ஒவ்வொரு வேட்பாளரினதும் விருப்புக்கள், முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையங்களில் மூன்று சாராம்சப் படிவங்களில் ஒன்றன்பின் ஒன்றாக பிரதி பண்ணப்பட்டு கூட்டப்படுவதால், முடிவுகளை அறிவிப்பதில் காலதாமத மேற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. எல்லோருக்கும் தெரிந்தது போல வாக்கெண்ணல் நிலையத்தின் பணிகளின் முடிவிலேயே முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்கின்றன. வாக்கெண்ணும் நிலையத்தின் பணிகள் முடிவடைந்த வுடன் அம்முகவர்கள் முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையத்தைச் சூழ நின்று கொண்டு உடனடியாக முடிவுகள் வெளியிடப்பட வேண்டுமென எதிர்பார்ப்பது தவறாகும்.

**வாக்கை மாற்றுதல்: ஒரு மூடக்கொள்கை**

**பொதுவாக எல்லோருக்குமே முடிவுகளை விரைவாக அறிந்து கொள்ளத்தான் ஆர்வமிருக்கும், அதை ஏன் தவறு என்கிறீர்கள்?**

கே: ஏனெனில் எல்லா வாக்கெண்ணும் நிலையங்களிலுமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள கூற்றுக்களில் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ள விருப்புக்களை மீள் பதிவிட்டு வாக்கெண்ணும் நிலையத்தைப் போலவே பரிசீலனை, மீள் பரிசீலனை, அதி பரிசீலனை, எழுமாற்றுப் பரிசீலனை, முத்தாய்ப்புப் பரிசீலனை என்ற அனைத்து பரிசீலனைகளையும் முடித்து இறுதி முடிவுகளை வெளியிடுவதற்கு கணிசமானளவு நேரமெடுப்பதால், வெளியில் காத்திருக்கின்ற முகவர்கள் தங்களுக்குள் ஐயங்களை வளர்த்துக் கொள்கின்றார்கள்.

ஒவ்வொரு சாராம்சப் படிவத்திலுமுள்ள இறுதிக் கூட்டுத் தொகைகள் அடுத்த சாராம்சப் படிவத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டே இறுதி ஆவணம் தயாரிக்கப்படும்.



ஏதேனுமொரு கட்சி எல்லா வாக்கெண்ணும் நிலையங்களி லுமிருந்து தமக்குக் கிடைக்கின்ற விருப்புக்கள் தொடர்பான புள்ளிவி வரங்களை முறையாகவும் சரியாகவும் கூட்டிப் பார்த்திருந்தால் நீங்கள் கூறியி ருக்கின்ற ஐயம் எவருக்கும் ஏற்பட வாய்ப்பில்லை. வாக்குகளை எண்ணுதல், விருப்புகளை எண்ணுதல், வாக்குகள் மற்றும் விருப்புக்களின் முடிவுகளை அட்டவணைப்படுத்தி வெளியிடுதல் தொடர்பாக இலங்கையின் அரசியல் கட்சி ஆதரவாளர்களிடையே நிலவுகின்ற ஐயம் தொடர்பாக என்னால் கூற முடிந்தது இது ஒரு மூட நம்பிக்கை அல்லது மூடக்கொள்கை என்பதேயாகும்.

**தவறுகள் நடப்பதேயில்லையா?**

**கே: அப்படியானால் வாக்கெண்ணலின் போது ஒருபோதும் தவறுகள் இடம்பெறுவதே இல்லையா?**

ப: மூன்று தசாப்த காலங்களாக இப்பணியில் ஈடுபட்டும், அதனை வழிநடாத்தியும், மேற்பார்வை செய்தும் நான் பெற்ற அனுபவத்துடன் ஒப்பிடுகையில் சில சந்தர்ப்பங்களில் மிகமிகச் சிறிய மனிதத்தவறுகள் இப்பணிகளின் போது இடம்பெற முடியுமாயினும், பின்னர் நடைபெறுகின்ற பரிசீலனைத் தொடர்களில் ஏதாவதொரு பரிசீலனையின் போது கட்டாயம் அது வெளிப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை தோல்வியடைந்த பெரும்பாலான வேட்பாளர்கள் தாம் தோற்கவில்லையெனவும், திட்டமிடப்பட்டு தோற்கடிக்கப்பட்டோமெனவும் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

எப்பொழுதாவது வாக்கெண்ணல் நிலையங்களினதும் முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையங்களினதும் அனைத்து கருமங்களையும் நேரலை மூலம் ஒளிபரப்புச் செய்வதற்கான சந்தர்ப்பமும் கிடைத்து, வாக்குச் சீட்டொன்றில் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குகளையோ, விருப்புக்களையோ காட்சிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமல்லவெனவும், சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டாலேயே ஒழிய, இம்மூட நம்பிக்கையை அகற்றவே முடியர்து.

ஆதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்தினதும் எல்லா வாக்கெண்ணும் நிலையங்களிலும், முடிவுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் நிலையங்க ளிலும் வேறு மாவட்டங்களின் அலுவலர்களில் ஒரு கணிசமான தொகையினர் வாக்கெண்ணல் மற்றும் முடிவுகளை அட்டவணைப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்படின், இத்தகைய போலிக் குற்றச்சாட்டுக்களுக்கு அலுவலர்கள் ஆளாவதைத் தவிர்க்க முடியும்.

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

9

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை



○ இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலை்கழகம்



எமது வடக்குக் கல்விப் புலத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்யவேண்டிய காலஅவசியம் குறித்த சிந்தனைக்கிளறலை பல்வேறு மட்டங்களிலும் கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதிய சஞ்சீவியில் வெளியான கட்டுரை ஏற்படுத்தியிருந்தது. மாணவர்கள் விஞ்ஞானக்கல்வியைப் புறக்கணிப்பது தொடர்பில் மாணவர்கள் சார்ந்த காரணிகளில், சுயவிருப்பின் பேரில் தவிர்க்கும் மாணவர்களின் நிலைப்பாடுகள் குறித்து அந்தக் கட்டுரையில் அலசப்பட்டது. இவ் வாரம் எற்கனவே மாணவர்கள் சார் பில் குறிப் பிடப்பட்ட பின்வரும் ஏனைய இரு காரணிகள் குறித்த சில விடயங்களை ஆராய்வது பொருத்தமானது.

1. பிறரின் வற்புறுத்தலின் பேரில் தவிர்க்கும் மாணவர்கள்

## வடக்கின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவோம்

2. விருப்பிருந்தும் வாய்ப்பற்ற மாணவர்கள்

**பிறரின் வற்புறுத்தலின் பேரில் தவிர்க்கும் மாணவர்கள்**

பொதுவாகவே மாணவர்கள் உயர்தரப் பாடத் தெரிவின்போது பலரது அபிப்பிராயங்களையும் பெற்றுக்கொள்வது வழமையானதொன்று. இது அவசியமானதும் கூட. ஆனால் துறைசார் புலமைத்துவம், நிபுணத்துவம், தூரநோக்கு அற்ற தரப்புக்களிடமிருந்து அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதும், அத்தகைய அபிப்பிராயங்களின் பிரகாரம் தமது உயர்தரப்பாடத் தெரிவுகளை மேற்கொள்வதும் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் செயற்பாடாகும். குறிப்பாக இத் துறைகளுக்கு வழிகாட்டவென பயிற்றப்பட்ட அல்லது வாண்மைபெற்ற விசேட அணியென அடையாளப்படுத்தத்தக்க அணியொன்று நிறுவனமயப்பட்ட நிலையிலோ அல்லது சமூகமயப்பட்ட நிலையிலோ வடக்குக் கல்விப் புலத்தில் ஒருங்கிணைக்கப்பட்டதாக இல்லை. பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலகின் பொறுப்பாசிரியர்களாக இருக்கும் பலர், உயர் கல்வி வாய்ப்புக்கள் குறித்த தெளிவான சிந்தனைகளைக் கொண்டிராத துர்ப்பாக்கிய சூழ்நிலையும், எமது கல்விப் புலத்தில் உள்ளது. இதனால் மாணவர்கள் குறிப்பாக எவரை அணுகி தமது உயர்தரப் பாடத்தெரிவு தொடர்பான விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெறுவது என்பது குறித்து அறியாது, தாம் திறன்மிக்கவர் எனக் கணிக்கும் அல்லது நினைக்கும் நபரை இது விடயத்தில் நாடுகின்றனர்.

இவ்வாறு மாணவர்கள் நாடும் நபர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மாணவர்களை தவறான வழிகாட்டுதல்களின் அடிப்படையில் விஞ்ஞானக் கல்வியிலிருந்து ஒதுங்க வைத்துவிடுகின்றனர். இது மிகப் பெரும் ஆபத்தாகும். இத்தகையவர்கள் பொதுவாக முன்வைக்கும் காரணங்கள் "விஞ்ஞானத்துறைப் பாடங்கள் கடினமானவை", "நீங்கள் அவற்றில் சித்தி பெறுவதே கடினம்'', "உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தி பெறாது விட்டால் எதிர்காலம் இருள்மயமானதாக மாறிவிடும்", "கலைத்துறைப் பாடங்களைக் கற்றால் இலகுவாக பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறலாம்.", "பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டால் கூட, வெளிவாரிப் பட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்வது இலகுவானது'' "கலைப்பீடங்களுக்குத் தான் விஞ்ஞானபீடங்களை விட அதிகளவான மாணவர்களை உள்வாங்குவார்கள்" "பல்கலைக்கழக அனுமதி கிடைக்கா விட்டால் கல்வியியல் கல்லூரி அனுமதிகள் நிச்சயம் கிடைக்கும். அதன்மூலம் வேலைவாய்ப்பு உறுதி"

இவ்வாறான, ஆய்வுப் பின்னணியற்ற பல காரணங்களை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி, விஞ்ஞானக் கல்வியின் பால் திசைதிரும்ப நினைக்கும் மாணவர்களை இத்தரப்பினர்கள் தடம் மாற்றிவிடுகின்றார்கள். இத்தகைய அறிவுரைகளினால் மாணவர்கள் வழிநடத்தப்படுவது அறிவார்ந்த ஒரு சமூகத்துக்கு ஆபத்தானது. அதிலும் பேராபத்தான விடயம், இத்தகையவர்களுள் குறித்த ஒரு பகுதியினர் விஞ்ஞானக் கல்வி குறித்த விழிப்பை சரியான நியாயப்பாடுகளுடன் மேற்கொள்பவர்கள் மீது தமது கண்டனங்களை சகட்டு மேனிக்கு முன்வைப்பதனால், விஞ்ஞானக் கல்வி குறித்த சமூக விழிப்பைச் செய்வதற்கான செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது கலைத்துறைக்கு எதிரான பிரச்சாரம் அல்ல. வடக்கின் விஞ்ஞானக் கல்விப் பாரம்பரியம் என்பது மிகப்பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. அந்தச் சரிவைச் சீர் செய்வதே தற்போது அவசியமானது. வடக்குக் கல்விப் புலத்தின் விஞ்ஞானக் கல்வியை மேலும் முன்னேற்றுவதற்கு காலம் இன்னும் உண்டு. தற்போது நம்முன் உள்ள கடமை, வடக்கு கல்விப் புல விஞ்ஞானக் கல்வியை இரு தசாப்பதங்களுக்கு முன்னர் இருந்த நிலமைக்குக் கொண்டுவருதலேயாகும். எனவே விஞ்ஞானக் கல்விப் பாரம்பரியத்தை மீட்டெ டுத்தலே தற்போது நாம் செய்ய வேண்டிய பெரும் பணியாகும். விஞ்ஞானக் கல்வியை நோக்கி மாணவர்களை திசைப்படுத்தும் முயற்சிகளைச் செய்யும் போது கலைத்துறையும் சமாந்தரமாக வலுப்பெறும் கல்விச் சமநிலை ஏற்படும். கலைத்துறையை மானசீகமாக நேசிக்கும் ஆற்றல்மிகு மாணவர்கள், அத்துறைக்குள் அடையாளப்படுத்தப்படுவார்கள். அதுமட்டுமன்றி, விஞ்ஞானக் கல்வியின் முன்னேற்றம் என்பது, உயர்கல்வி நிறுவனங்களில் ஒரு போதும் கலைத்துறைசார் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை யைப் பாதிக்கப்போவது கிடையாது. ஏற்கனவே அனுமதிகளின் எண்ணிக்கைக்கு அதிகமாக கலைத்துறையில் தகைமைபெற்ற பல மாணவர்கள் வாய்ப்பின்றி வெளியில் காத்திருக்கும் நிலமை யுண்டு. அதற்கும் அப்பால் மொழித் தனித்துவமிக்கதாக கலைத்துறை சார் உயர்கல்வி வாய்ப்புக்கள் இருப்பதனால் இது குறித்த அச்சம் எழ வேண்டிய அவசியமில்லை.

விஞ்ஞானக் கல்விப் பின்னடைவு என்பது ஒரு தொடர்ச்சியானதொரு சமூகப் பின்னடைவை ஏற்படுத்தப் போகின்றது. குறிப்பாக விஞ்ஞானத் துறை சார் ஆசிரிய ஆளணி வெற்றிடம் வடக்குக் கல்விப் புலத்தில் ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளது. ஆசிரிய விண்ணப்பங்கள் கோரப்படும்போது வெற்றிடமாகவுள்ள ஆளணி எண்ணிக்கையைவிட, குறைவான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையால் போட்டிப் பரீட்சையின்றி, விண்ணப்பதாரர்களுள் அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்த அனைவருக்

> உயர்த்ரத்தில் விஞ்ஞானக் கல்வியைத் தெரிவு செய்யும் மாணவர்களின் வீழ்ச்சி என்பது எதிர்காலத்தில் கணித விஞ்ஞானத் துறைசார் ஆசிரியர்களுக்கான பற்றாக் குறைகளையும் வடக்குக் கல்விப் புலத்தில் மேலும் வலுவாக்கும். இது வடக்குக் கல்விப் பேரிடராக அமையும்.

கும் ஆசிரிய நியமனம் வழங்கிய பல சந்தர்பங்கள் வடக்குக் கல்வி நிர்வாகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நிகழ்ந்ததுண்டு.

அதைவிடப் பெரும் கொடுமை, அரசியல் தேவைப்பாடுகளினால் வடக்கில் மட்டும் நியமனம் செய்யப்பட்ட தொண்டராசிரியர்களுள் க.பொ.த சாதரணதரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி பெற்றவர்கள் பாடசாலைகளில் இரண்டாம் நிலை மாணவர்களுக்கு கணித விஞ்ஞான ஆசிரியர்களாக செயற்படப் போகின்றார்கள். இத்தகைய நிலமைகள் மாணவர்கள் விஞ்ஞானக் கல்வியில் அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வதில் பாதக நிலமைகளை உருவாக்கும். அதனால் உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையை நோக்கி ஈர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் குறைவடைந்து செல்லும் ஏதுநிலைகள் நிறையவுண்டு. உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியை தெரிவு செய்யும் மாணவர்களின் வீழ்ச்சி என்பது எதிர்காலத்தில் கணித விஞ்ஞானத் துறைசார் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைகளையும், வடக்குக் கல்விப் புலத்தில் மேலும் வலுவாக்கும். இது வடக்குக் கல்விப் பேரிடராக அமையும்.

எனவே தவறான வழிநடத்தல் மற்றும் வற்புறுத்தலின் பேரில் விஞ்ஞானக் கல்வியிலிருந்து மாணவர்களை விலகச்செய்யாதிருக்கும் சமூகப் பெறுமதிமிக்க பயன்மிக்க தார்மீகக் கடையை நாம் செய்யத் திடசங்கற்பம் கொண்டாகவேண்டும்.





# நீர்

நீர்!
குடும்பத்தில் மூன்றாம்
கோளுக்கு கொடை நீர்!
கௌரவம் கொடுத்தது
நீரே!
மாந்தருக்கு வாழ்வளித்தது
நீரே!

முப்பது விழுக்காட்டில்
மேடுகள் வெளித்தெரியவிட்டு
அதிகம் போர்த்தது,
புவியை!

அதிகம் கொண்டது
உப்பாயினும்
அதிலும் ஆயிரம்
பயன் கொடுத்தது.

ஆவியாய் ஆவியாக்கமாய்
முகிலாய் மழையாய்
ஆறாய் செயலில்!
உயிர் முதல் மண் வரை
சமனிலை நீரால்!

சமனிலை நோக்கில்
பரந்தது சரியே!
சதிவலை மனிதன்
வேலிகள் போட
தகர்ந்தது சமனிலை!

பரம்பரை நினைப்பின்றி
பாவித்தே முடிப்பு!
வேதிகள் கலப்பு!
எல்லைகள் பிரிப்பு!
ஊடல்கள் உயர
போத்தலில் அடைத்தோம்
பணம் குடிக்க!

சிந்து, காவேரிகளின்
பரம்பரைகளும்
பிரிந்தன.

இன்று சில தோட்டாக்கள்
செல்வதும்
நீருக்காம்!
"போருக்கு நீர்" போய்
"நீருக்காய் போர்"

நிரந்தர ஆறற்றது!
வட ஈழம், ஆயினும்
பல நன்னீர் பானைகள்
கொண்ட சுண்ணக்கல்!
மயோசின் காலம் தந்தது.

நீர் ஊடல்கள்
அண்மையிலேயே!
ஊர்க்குளம்!
ஊர்க்கிணறு!
அயற்கிணறு! என.
உணரத்தவறின்
உயர்வே இல்லை.


இருப்பை சரியாக்க
இருபதிற்கு
இருபதின் கருப்பொருள்
"நீரும் காலநிலை மாற்றமும்"

**யோ. சசீகரன்**
கிளி/பூநகரி மத்திய கல்லூரி.

---

தில்லைநாதன் கோபிநாத்

# சுன்னாகம் திராவிட வித்தியாசாலை



மு. சி. இராசரத்தினம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மதம் பரப்பும் நோக்கத்துடன் இலங்கை வந்த கிறித்தவ மிசனரியினர், பெருமளவு பாடசாலைகளை அமைத்துக் கல்வி கற்பித்து, அதனூடாக மதமாற்றச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை யாழ்ப்பாணத்தில் பெருமளவு பாடசாலைகள், மிசனரிப் பாடசாலைகளாகவே இருந்தன.

இந்த நிலைமையை மாற்றும் நோக்குடன் ஆங்காங்கே சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் தனிநபர் முயற்சிகளாக அமைந்தன. நிறுவனச் செயற்பாடுகளான மிசனரிப் பாடசாலைகளுக்கு ஈடுகொடுக்க வல்லனவாக அவை இருக்கவில்லை. விதிவிலக்காக நிறுவனமயமாகிச் செயற்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சபை, நகரங்களைச் சார்ந்து சிறு எண்ணிக்கையிலான பெரிய பாடசாலைகளையே நிர்வகித்து வந்தது. கிராமம் கிராமமாக அமைந்திருந்த மிசனரிப் பாடசாலைகளுக்குப் போட்டியாக அது அமையவில்லை.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதாக, அமைந்ததே 1923இல் உருவான இந்து போர்ட் என்றும் அறியப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம். 1961இல் அரசாங்கம் பாடசாலை களைப் பொறுப்பேற்ற காலத்தில், 187 பாடசாலைகளையும், ஓர் ஆசிரிய கலாசாலையையும் கொண்ட ஓர் ஆலமரமாக வளர்ந்திருந்த நிறுவனம் அதுவாகும். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆரம்ப காலங்களில் மிக முக்கிய பங்களிப்புச் செய்தவர் எம். எஸ். இராசரத்தினம் என அறியப்படும் முருகேசர் சின்னத்தம்பி இராசரத்தினம் ஆவார்.

மு. சி. இராசரத்தினம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். 1884.08.18ஆம் திகதியன்று பிறந்தவர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கிறித்தவத்தைத் தழுவிக் கல்வி கற்றார் என்று சொல்லப்படுகிறது. 1905இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்று, 1906இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார். பின்னர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிகளில் கல்வி கற்பித்தார். ஆசிரியராக இருந்த காலத்தில் சட்டக்கல்வி கற்று வழக்கறிஞர் ஆகி 1911இல் யாழ்ப்பாண வழக்கறிஞர் சபையில் இணைந்தார். யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களில் தொழில்புரிந்து வந்தார். பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபடலானார்.

1923இல் சைவ வித்தியா விருத்திச் சங்கம் அமைக்கப்பட முக்கிய காரணமாக இருந்தவர் மு.சி. இராசரத்தினம் என்றே கூறப்படுகிறது. குறிப்பிடத்தக்க பொது வைபவங்கள் தவிர ஏனைய நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கலந்து கொள்ளாதிருந்த சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகியோரை ஒன்றாக வரச் செய்து சைவ வித்தியா விருத்திச் சங்கத் தொடக்க நிகழ்வினை அவர் ஒழுங்கு செய்திருந்தார். சங்கத்தின் தலைவராக இராமநாதன் இருந்தபோதும், சங்கம் உருவாக முக்கிய காரணமாக இருந்தவர் மு. சி. இராசரத்தினமே ஆவார். அத்துடன் சங்கத்தின் செயலாளராக இருந்து செயற்பாடுகளை முன்னெடுத்தவராகவும் அவர் இருந்தார்.

மாதகலில் சங்கத்தின் முதலாவது சைவப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஏழு, எட்டுப் பாடசாலைகள் என அமைக்கப்பட்டன. இவை ஒவ்வொரு ஊர்ப் பெரியவர்களது உதவியுடனேயே ஆரம்பிக்கப்பட்ட போதிலும், சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக வட்டுக்கோட்டையில் மு.சி. இராசரத்தினத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளான திருஞானசம்பந்தர் வித்தியாலயம், திருநாவுக்கரசர் வித்தியாலயம் என்பவை சைவ வித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளே. சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளில் சைவச் சூழலில் மாணவர்கள் கல்வி கற்க முடியும் எனக் கூறப்பட்ட போதிலும், தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் அனுமதிக்கப்படாத நிலைமையே இருந்தது. அப்பிள்ளைகள் தொடர்ந்தும் மிசனரிப் பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் தீண்டாமையால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அதிலிருந்து விடுதலை பெற முடியும் எனும் நம்பிக்கையில் மதம் மாறும் செயற்பாடுகளும் தொடர்ந்து நடந்து வந்தன.

இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம மரியாதையும், கல்வியும் முன்னேற்றமும்

வரலாற்றுப் படை 8

கிடைப்பதே அவர்கள் சைவ சமயத்தில் தொடர அவசியம் என்பது உணரப்பட்டது. அவ்வகையில் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்கள் சங்கம் 1926 இறுதியில் உருவானது. அச்சங்கத்தின் ஆரம்பத் தலைவராக மு.சி. இராசரத்தினமே இருந்தார். அக்காலத்திலும் அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சாதியத்தை ஒழிப்பதை விடவும் சைவ சமயத்தை முன்னிலைப்படுத்தியே தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் உருவாகியது என்பது உண்மையே. அதே நேரம் சம ஆசன, சம போசனப் போராட்டம், ஆலயநுழைவுப் போராட்டங்களுக்கு முற்பட்ட சாதிய ஆதிக்கம் நிறைந்த சூழலில் தாழ்த்தப்பட்டவர்களுடன் அடையாளப்படுத்திக் கொண்டு மு. சி. இராசரத்தினம் செயற்பட்டார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

1927இல் காந்தி யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அவரை வரவேற்கும் குழுவில் மு.சி. இராசரத்தினமும் முக்கிய இடம் பெற்றிருந்தார். தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் சார்பில் ஆரம்பிக்கும் பாடசாலையை அடிக்கல் நட்டு ஆரம்பிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. அவ்வாறு 27.11.1927 திகதியன்று சுன்னாகத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பாடசாலையின் பெயர் "சுன்னாகம் திராவிட வித்தியாசாலை" என்பதாகும்.

இப்பாடசாலையைக் கட்டுவதற்கு உதவி புரிவதாகக் கூறிய இந்து போர்ட் (சைவ வித்தியா விருத்திச் சங்கம்) எட்டு மாதங்களாகியும் உதவவில்லை என மனவருத்தத்தைத் தெரிவிக்கும் ஆசிரியத் தலையங்கம் 1928 ஆவணிமாத திராவிடன் இதழில் வெளியாகியிருக்கிறது.

அக்காலங்களின் பின்னர், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் மு. சி. இராசரத்தினம் அதிக பணிகள் செய்ததாகத் தெரியவில்லை. சுன்னாகம் திராவிட வித்தியாசாலை எனும் பாடசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பாடசாலைப் பட்டியலிலும் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மு. சி. இராசரத்தினம் முன்னெடுத்த பணிகள் அவரைப் பற்றி எழுதப்பட்ட தனிப்பட்ட வரலாறுகளிலும் பதிவு செய்யப்படவில்லை; சாதியத்துக்கெதிரான போராட்டங்களைப் பற்றிய வரலாறுகளிலும் பதிவு செய்யப்படவில்லை. இவை எல்லாவற்றுக்கும் சாதியக் காரணங்கள் உண்டு என்பதே உண்மை.



# காய்கறி குருமா!

**தேவையான பொருட்கள்:**

*250g பூக்கோவா*
*20g போஞ்சி*
*2 கரட்*
*1 உருளைக்கிழங்கு*
*100g பட்டாணி*
*2 பெரிய வெங்காயம்*
*2 தக்காளி*
*1/2 மேசைக்கரண்டி மஞ்சள்*
*1 மேசைக்கரண்டி மிளகாய்த்தூள்*
*1 மேசைக்கரண்டி மல்லித்தூள்*
*1/2 மேசைக்கரண்டி*
*இறைச்சிச் சரக்குத்தூள்*
*2 மேசைக்கரண்டி*
*இஞ்சி உள்ளி விழுது*
*தேவையான அளவு உப்பு*
*தேவையான அளவு எண்ணை*
*சிறிதளவுகொத்தமல்லி இலை*

**அரைக்கத் தேவையானவை:**
*50g தேங்காய்ப்பூ*
*15 கயூ / பாதாம்*
*1 மேசைக்கரண்டி கசகசா*
*1 மேசைக்கரண்டி பெருஞ்சீரகம்*

**தாளிக்கத் தேவையானவை:**
*1 பிரியாணி இலை*
*1 துண்டு கறுவாப்பட்டை*
*3 ஏலக்காய்*
*5 கராம்பு*

**செய்முறை:**

முதலில் அரைப்பதற்குக் கொடுத்துள்ள பொருட்களை ஒன்றாக மிக்ஸியில் போட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றிச் சூடேறியதும், தாளிப்பதற்குக் கொடுத்துள்ள பொருட்களைச் சேர்த்துத் தாளித்து, அதனுடன் வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்கிக் கொள்ளுங்கள்.

பின்பு அதில் தக்காளி மற்றும் இஞ்சி உள்ளி விழுது சேர்த்துச் பச்சை வாசனை போக நன்கு வதக்கி எடுங்கள்.

பட்டாணி, பூக்கோவா தவிர்த்து ஏனைய காய்கறிகளை மிளகாய்த் தூள், மல்லித் தூள், கரம் மசாலா மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து 5 நிமிடம் பச்சை வாசனை போக வதக்குங்கள்.

அதன் பின்பு பட்டாணி, பூக்கோவா மற்றும் அரைத்து வைத்துள்ள தேங்காய் விழுது , தண்ணீர் மற்றும் தேவையான அளவு உப்புச் சேர்த்து குறைவான தீயில் காய்கறிகள் அவிந்து குருமா ஓரளவு தடித்து வரும் வரை அவியவிடுங்கள்.

இறுதியாகக் கொத்தமல்லி இலை தூவி சோறு / சப்பாத்தி / பூரி போன்றவற்றுடன் பரிமாறலாம்.

# கால்கள் மற்றும் பாதங்கள் மினுமினுக்க...



- ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணெய் மற்றும் அப்பச் சோடாவுடன் பாதி எலுமிச்சைச்சாறு சேர்த்து கால்களில் பூசி மெதுவாக மசாஜ் செய்து மூன்று நிமிடங்கள் ஊற விட்டு மீண்டும் ஒரு தடவை பூசி இரண்டு நிமிடங்கள் கழித்து சாதாரண நீரில் கழுவி வர உங்கள் கால்கள் மற்றும் பாதங்கள் வெள்ளையாகவும் மினுமினுப்பாகவும் மாறும். வாரம் இருமுறை செய்து வந்தால் போதுமானது.
- பெரிய பாத்திரம் ஒன்றில் வெதுவெதுப்பான நீர், உப்பு, எலுமிச்சைச் சாறு, மஞ்சள் என்பவற்றைச் சேர்த்து அதனுள் கால்களை அமுக்கி சிறிது நேரம் வைத்திருங்கள். பின்னர் கால்களை வெளியே எடுத்து எலுமிச்சம் தோலை உப்பில் அமிழ்த்தி அதனால் கால்கள் மற்றும் பாதங்களை நன்றாகத் தேயுங்கள். அதன் பின்னர் வெதுவெதுப்பான நீரில் கால்களைக் கழுவி, காய்ந்ததும், கற்றாழை ஜெல் பூசி மசாஜ் செய்யுங்கள். முதலில் வாரம் ஒருமுறையும், பின்னர் மாதம் ஒருமுறையும் செய்து வந்தால் போதுமானது.
- தினமும் இரவில் நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் ஆமணக்கு எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய் கால்களுக்கும் பாதங்களுக்கும் பூசி நன்றாக மசாஜ் செய்து வர கால்கள் மற்றும் பாதங்கள் பளபளப்பாகவும் மென்மையாகவும் மாறும்.

**நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...**
**எழுதி அனுப்புங்கள்!!**




# வித்துவான் பதில்கள்!



**வித்துவா? சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*லோஜிகா, வரணி.*


சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள் பற்றிய சில விமர்சனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. எனினும் கொரோனா காலத்தில் அவற்றின் செயற்பாடுகள் மிகவும் மெச்சத்தக்கவை. வேப்பெண்ணெய் குடித்தால் கொரோனா வராது மாட்டுச்சாணம் பூசினால் கொரோனா வராது என்று ஒரு புறம் காதில் பூ வைத்துக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் பயனுள்ள பணி களை அவை முன்னெடுத்தன. தொழில் வாய்ப்பிழந்தோருக்கான உதவிச் செயற் றிட்டங்களைப் புலம்பெயர் தேசங்களிலிருந்து நிதி உதவிகளைப் பெற்று மேற் கொண்டன. வீட்டிலிருந்தவாறே கற்றுக்கொள்ள மாணவர்களுக்குப் பேருதவி புரிந்தன போதுமா?

**வித்து மாமா! கொரோனா கால 'லொக் டவுன்' காலத்தை எப்படி பயன்படுத்தினீர்கள்?**

சுதர்சன், யாழ்ப்பாணம்.

நல்ல சந்தோஷமாகப் பயன்படுத்தினேன். 'கவுண்ட் டவுண்' தொடங்கும்போது நானும் மனைவியும் என இரண்டு பேராக உள்ளே போனவர்கள் கவுண்ட் டவுண் முடியும் போது இரண்டு பேரும் இரண்டு மாதமுமாக வெளியே வந்தோம் என்றால் பாருங்களேன்.





**அமெரிக்காவில் கொரோனா பாதிப்பு அதிகமாக இருக்க என்ன காரணம் வித்துவான்?**

*தரங்கினி, நாச்சிமார் கோவிலடி.*

டொனால்ட் ட்ரம்பின் பொறுப்பற்ற தன்மைதான் காரணம். அமெரிக்காவில் வேலை செய்யும் சீனர்கள் சீனப் புத்தாண்டைக் கொண்டாட தாய் நாட்டுக்குச் சென்றனர். ஆனால் சீனாவில் கொரோனா பரவியதால் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டன. சீனர்கள் மீண்டும் அமெரிக்கா திரும்புகின்றனர். அவர்கள் எந்தப் பரிசோதனையும் இல்லாமல் நாட்டுக்கு வர அமெரிக்கா அனும தித்தது. இரண்டரை லட்சம் சீனர்கள் நாட்டுக்குள் வந்தனர். கொரோனாவும் அவர்களுடன் சேர்ந்தே வந்தது. சிறிதேனும் சிந்தித்திருக்க வேண் டாமா? சீனாவில் பரவத் தொடங்கும் போதே எரிபொருள் நிரப்பு நிலை யங்க ளில் வரிசையில் காவல் நின்ற யாழ்ப்பாண தமிழர்களின் தீர்க்கதரிசனம் ட்ரம்பிடம் கொஞ்சமும் இருக்க வேண்டாமோ?

**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 316 5555



# சொற்சிலம்பம் போட்டி 8

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | ■ | 19 | 20 | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:......................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. மிதவாதி அல்லன் 5. அதிக 7.களிம்பு நிலையில் உள்ள பொருள் 8. ஏற்றுமதியாகும் ஓர் கடலுணவு வகை 9. வாழும் இடம் 11. நாங்கள் என்பதை இப்படியும் குறிப்பிடலாம் 12. இதற்குப் படையுமே அஞ்சுமாம். 14. பரிசுத்த 15. தீப்பிழம்பு வடிவம் 16. தாமரை 17. இது இரண்டொழிய வேறில்லை. 18. இல்லாமல் அழித்தொழி 19.இது வந்திடப் பத்தும் பறந்திடும். 21. முற்கால ஆயுதமொன்று 22. வலிமை மிக்கவன்.

### மேலிருந்து கீழ்

1. இந்துக்களின் திருநாள்களில் ஒன்று. 2. பகுபத உறுப்புகளில் ஒன்று. 3. சுதேச வைத்தியத்தின் அடிப்படை. 4. உறுதி 5. நாணம் 6. மழை/வெயில் இரு காலத்திலும் உதவும் 10. பிள்ளையார் 12. அரைவாசி 13. மகன் 14. தொங்கல் 15. இது மிகக் கெடுதி பாப்பா எனப் பாடல் வரியுண்டு. 16. பலருக்கு இதன் மீது ஆசை. 20. எண்ணிக்கையில் குறைந்த.

### சொற்சிலம்பம் போட்டி 06 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அகவை 4. உபசரி 8. கண்ணகி 10. கட்சி 11. வழிகாட்டி 13. பாகம் 15. தடு 17.வடை 18.கலி 19.கரு 20.தூண் 21.கல்வி 22.மண்டபம் 23.வேண்டும் 24.பிச்சை

**மேலிருந்து கீழ்**

1.அகம்பாவம் 2.கண் 3.வைணவம் 5.பகட்டு 6.சட்டி 7.ரிசி 9.கிழி 12.காதலி 14.கடை 16.குருவிச்சை 18.கண்டம் 19.கல் 20.தூண்டு 21.கம்பி 22.மண்

**சொற்சிலம்பம் போட்டி இல.08**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

**21.08.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 06இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
ம.சத்தியசீலன்
அழகொல்லையடி,
அளவெட்டி.

**2 ஆம் பரிசு**
சி.இராஜரத்தினம்
பூம்பொழில், திருநகர் தெற்கு,
கிளிநொச்சி

**3 ஆம் பரிசு**
குணராசா விஜிதன்
06ஆம் வட்டாரம், குமுழ்முனை,
முள்ளியவளை.

**4 ஆம் பரிசு**
இ.சனோஜன்
சங்கம் வீதி, நுணாவில் மத்தி,
சாவகச்சேரி

**5 ஆம் பரிசு**
சுமந்திரன் சுபரமி
சிங்கம் லேன், உடுவில்,
சுன்னாகம்

## சஞ்சீவி மாணவர் கழகம்

**51**



பெயர்: ஜெ.அபிஷாந்
முகவரி: இல.84/1 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
பி. திகதி: 2013.07.28
பாடசாலை: யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

**52**



பெயர்: ப.சிறிஹர்சினி
முகவரி: இல.32/4 மல்வத்தை வீதி, தெஹிவளை.
பி. திகதி: 2011.10.10
பாடசாலை: பம்பலப்பிட்டி மெதடிஸ்த கல்லூரி.

**53**



பெயர்: த.யாகாஷ்
முகவரி: இல.435, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
பி. திகதி: 2011.10.03
பாடசாலை: யாழ்.ஆனைப்பந்தி.மெ.மி.வி.

**54**



பெயர்: வ.அபிநயன்
முகவரி: இல.105, கலைமகள் வீதி, நல்லூர்.
பி. திகதி: 2011.02.17
பாடசாலை: புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**55**



பெயர்: கு.ஷாருகேசி
முகவரி: பாடசாலை முன்வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
பி. திகதி: 2011.09.21
பாடசாலை: யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

**56**



பெயர்: ச.சயிலுஜா
முகவரி: இல.03, பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர் வடக்கு, நல்லூர்.
பி. திகதி: 2012.01.02
பாடசாலை: யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.

**57**



பெயர்: யூ.திபேரிநாத்
முகவரி: இல.06, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
பி. திகதி: 2010.12.14
பாடசாலை: புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**58**



பெயர்: நோ. துஷாளின்
முகவரி: சில்லாலை, பண்டத்தரிப்பு
பி. திகதி: 2003.12.30
பாடசாலை: யாழ்.வட்டு இந்து கல்லூரி.

**59**



பெயர்: ஜீ.சஞ்சய்
முகவரி: புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம், இருபாலை தெற்கு.
பி. திகதி: 2006.05.20
பாடசாலை: யாழ்.இந்துக் கல்லூரி.

**60**



பெயர்: கோ.ஷஜானி
முகவரி: அச்சுவேலி தெற்கு, பிள்ளையார் கோவிலடி.
பி. திகதி: 2009.06.29
பாடசாலை: யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.

**சஞ்சீவி**
**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..........................................
2. முகவரி: ..........................................
..........................................
3. பிறந்த திகதி: ..........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்: ..........................................
6. தொலைபேசி இலக்கம்: ..........................................

..................... .....................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

○ பரமேஸ்வரன்

# பொறுப்புணர்ந்து செயற்படுவார்களா?




நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் ,பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் இரண்டையும் நீக்கி புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைவழங்குமாறு சிங்கள மக்களை மகிந்த ராஜபக்ச கேட்டுக்கொண்டார் . மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் அந்தப் பெரும்பான்மையை எப்படிப் பெற்றுக்கொள்வது என தனக்குத்தெரியுமெனவும் அவர் பொடிவைத்துப் பேசியிருந்தார்.இப்போது அவரது எதிர்பார்ப்பை மற்றவர்களின் ஆதரவில்லாமலே நிறைவேற்றுமாறு சிங்கள மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

பத்தொன்பதாவது திருத்தச்சட்டம் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து நாடாளுமன்றுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது. பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் பற்றி அனைவருக்கும் தெரியும்இந்தத் திருத்தச்சட்டத்தின் கீழ் தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மாகாண சபை முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது.

மாகாணசபையை இலங்கை அரசாங்கம் ஒன்றும் இலவசமாகத் தரவில்லை. ஆயிரக்கணக்கான போராளிகளும், பொதுமக்களும் குருதி சிந்தி உயிர் தியாகம் செய்ததன் விளைவால் பெற்றுக் கொள்ளப்பட்ட, தமிழர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு அதிகாரப்பகிர்வுத்திட்டம் தான் மாகாண சபை. தமிழர்கள் மாகாணசபையை நிராகரித்த போது, அதனை அதிகாரப்பகிர்வுக்கான தொடக்கப்புள்ளியாக கருதியாவது ஏற்றுக்கொள்ளுமாறு அப்போதைய இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்த்தரப்புகளை கேட்டுக்கொண்டார். புலிகள் மாகாணசபையை ஏற்க மறுத்து இந்திய இராணுவத்துடன் யுத்தத்தை ஆரம்பித்தனர். இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை படிப்படியாக வெட்டிக்குறைத்தனர் . இதனால் மாகாணசபை கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு வந்தது.

2009ஆம்ஆண்டுமுள்ளிவாய்க்கால் பேரழிவுடன்யுத்தம்முடிவடைந்தவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச '13+' ஐ தமிழர்களுக்கு வழங்கப்போவதாக அறிவித்தார். (இந்தியாவுக்கு வாக்குறுதியளித்தார்) வாக்குறுதியளித்த பின்னர் பேச்சுவார்த்தை என்று 2015 வரை இழுத்தடித்த மகிந்த 2015 வரை எதுவுமே செய்யவில்லை.

2015 ல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவுடன் சர்வதேசத்தின் ஆசியுடன் நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்றது. நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக இதயசுத்தியுடன் செயற்படவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நினைத்திருந்தால் மைத்திரியின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இனப்பிரச்சினையைத் தீர்க்கச்சொல்லி நல்லாட்சி அரசை வலியுறுத்தி இனப்பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். ஆனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பு அதனைச் செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால் ரணில் மீதும் ஐக்கிய தேசியக்கட்சி மீதும் காட்டிய கரிசனையை தமிழ் தேசியக்கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வில் காட்டவில்லை. இப்போது மீண்டும் மகிந்த ராஜபக்ச அரசு அரியணை ஏறியுள்ளது. 13+ என 2015 இல் திருவாய் மலர்ந்த மகிந்த ராஜபக்ச, இம்முறை 13 ஐ நீக்குவதற்கு ஆணை தாருங்கள் என தேர்தல் பிரசாரத்தின் போது சிங்கள மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். சிங்கள மக்களும் அவரது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து அவர் கேட்டுக் கொண்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நெருங்கும் வகையில் வாக்குகளை வழங்கியுள்ளனர். புதிய அரசாங்கம் பதவியேற்றதும் அரசின் முதல் நடவடிக்கையாக அரசியல் யாப்பு சீர்திருத்தம் தான் இருக்குமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுத்தேர்தல் முடிந்த கையுடன். மாகாண சபை முறைமையை இல்லாமல் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதாக ஜனாதிபதி ஏற்கனவே கூறியிருந்தார்.

மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் பட்சத்தில் பெரும்பான்மை சிங்கள மக்கள் மாகாண சபை தேவையில்லை என்றே வாக்களிப்பர். மாகாணசபை முறைமையை ஒழிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்வார்கள் என்பது தான் இப்போது தமிழ் மக்களிடமுள்ள மிகப்பெரும் கேள்வி.இந்தக் கேள்விக்கான பதில் நடவடிக்கையில் தான் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் எதிர்காலமும் தங்கியுள்ளது. அந்த வரலாற்றுப் பொறுப்பையுணர்ந்து தமிழ் அரசியல்வாதிகள் செயற்படுவார்களா?



# காக்டெய்ல்

## அதே புளிச்ச மாவே தான்!

சோழர் காலத்து ஐம்பொன் முருகன் சிலை அரசு அருங்காட்சியகத்தில் இருந்து காணாமல் போகிறது. மைம் கோபி இந்த சிலையை திருடி வைத்திருக்கிறார். சில தினங்களுக்கு பிறகு பொலிஸ் அதை கண்டுபிடித்ததாக சொல்கிறார்கள். ஆனால் அது உண்மையான சிலை கிடையாது. இவ்வாறு செய்தி வெளியிட்டால், காணாமல் போன சிலை ஏதாவது ஒரு வகையில் கிடைக்கும் என திட்டமிட்டு பொலிஸார் இவ்வாறு செய்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, சென்னையில் சலூன் கடை வைத்திருக்கும் யோகிபாபுவுக்கு மூன்று நண்பர்கள் உள்ளனர். அதில் அன்பு என்பவருக்கு திருமணம் நிச்சயமாகிறது. இதற்காக யோகிபாபு உள்ளிட்ட நண்பர்களுக்கு, அன்பு, வீட்டில் பார்ட்டி கொடுக்கிறார். அப்போது, அவர்கள் அனைவரும் என்ன நடந்தது என தெரியாத அளவுக்கு குடிக்கின்றனர். மறுநாள் எழுந்து பார்த்தால் அங்கு ஒரு பெண் இறந்த நிலையில் கிடக்கிறார்.

இதைப்பார்த்து 'ஷாக்'கான யோகிபாபுவும் அவரது நண்பர்களும், அந்த பிணத்தை மறைக்க திட்டமிடுகின்றனர். பின்னர் அந்த பெண் யார்?, அவர் எப்படி இங்கே வந்தார்?, அவரை யார் கொன்றது?, முருகன் சிலை என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

காமெடி வேடங்களில் கலக்கி வந்த யோகிபாபு, இந்தப் படத்தில் கொஞ்சம் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்திருக்கிறார். இவரது டைமிங் காமெடி ரசிக்க வைத்தாலும் சில இடங்களில் மொக்கை காமெடி எடுபடவில்லை. நாயகி ராஷ்மி கோபிநாத் கொடுத்த வேலையை கச்சிதமாக செய்துள்ளார். மற்ற கதாபாத்திரங்கள் ஆங்காங்கே பொருந்தி மறைகின்றன. காமெடியை மையமாக வைத்து படத்தை இயக்கி இருக்கும் இயக்குனர் விஜய முருகன், திரைக்கதையில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். கதாபாத்திர தேர்வு, அவர்களை கையாண்ட விதம் ஆகியவற்றைப் பாராட்டலாம். சாய் பாஸ்கரின் இசையில் பாடல்கள் மனதில் பதியவில்லை. ரவீனின் ஒளிப்பதிவு நேர்த்தியாக அமைந்துள்ளது.

# தேர்தலுக்கு பின்னர்.....!

○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்



தேர்தல் முடிந்து விட்டது. கூடவே தேர்தல் கால நிகழ்ச்சிகளும் பரபரப்புகளும் அடங்கி விட்டன. இப்பொழுது தேர்தலுக்குப் பிறகான நிகழ்ச்சிகளின் காலம். இனி இந்த நிகழ்ச்சிகளின் பரபரப்புகளையும் அவை உண்டாக்கும் சேதிகளையும் அவற்றின் விளைவுகளையுமே பார்க்கப்போகிறோம்.

இந்தப் பரபரப்புகள் நம்மைக் கொதிநிலையில் வைத்திருக்கப்போகின்றன. குறிப்பாக தேர்தல் தோல்விகளால் கட்சித்தலைமைப் பதவியையே இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தலைவர்கள். வழமைக்கு மாறாக தலதா மாளிகையில் வைத்துச்செய்யப்பட்ட அமைச்சரவைப் பொறுப்பேற்றல், முள்ளிவாய்க்காலில் செய்யப்படும் பதவியேற்புகள்...மாற்றம் செய்யப்படவுள்ள அரசமைப்பு... இப்படித் தொடர்ந்து நமக்கு இனிக்கும் சேதிகள், கசக்கும் சேதிகள் என்று பலவும் வரவே போகின்றன. ஆனால், இந்தச் சேதிகளின் உள்ளே ஒரு பொதுத்தன்மை எப்போதுமிருக்கும், அது வெகுஜன உளவியலைப் பரபரப்பில் வைத்திருப்பதாக அமையும்.

பெரும்பாலும் எம்மில் பலரும் இந்தப் பரபரப்பில் வேடிக்கை பார்ப்போராகவே இருக்கப்போகின்றனர். சமூகத்தின் பொதுப்போக்கும் பொது உளவியலும் அநேமாக அப்படித்தானிருப்பதுண்டு. எதையும் வேடிக்கை பார்ப்பதாக. தமிழ்ச்சூழலில் இது இன்னும் கூடுதல். வேடிக்கை பார்க்கும் மனநிலையைக் கடந்து, நம்மைச் சூழ நிகழ்வனவற்றைப் பற்றிச் 'சீரியஸாகக்' கவனிப்போரும் சிந்திப்போரும் குறைவு. இதனால்தான் நாம் பலவற்றிலும் பின்னடைந்திருக்கிறோம். நெருக்கடிகளையே தொடர்ந்தும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

சமூக நிலைப்பட்டுச் 'சீரியஸாகச் 'சிந்திப்போர் அதிகமாக இருந்தால் இந்தப் பரபரப்புகளை ஊடுருவிச் சென்று கவனிக்க வேண்டிய பலவற்றைக் கண்டு பேசியிருப்பர். ஒரு சிறிய உதாரணத்துக்காக அல்லது அவதானத்துக்காக, நடந்து முடிந்த தேர்தலின்போது நம்முடைய பொதுவெளி எப்படியிருந்தது என்று பார்த்தால் பெரும்பாலானவர்களின் முகநூல்கள் ஒரே குப்பையும் கூழமுமாகவே இருந்தன. ஜனநாயக மறுப்பாக விரிந்து கிடந்தன. தேர்தல் மேடைகள் பொய்களாலும் அவதூறுகளாலும் கண்ணியக் குறைவுகளாலும் நிரம்பி வழிந்தன. தனிப்பட்ட உரையாடல்களில் கூட வதந்திகளையும் பொய்ச் சேதிகளையும் திட்டமிட்ட முறையில் பலர் பரப்பிக் கொண்டிருந்தனர் என்பதையெல்லாம் அப்போது கண்டுணர்வீர்கள். இதில் படித்தவர்கள், பெரும் பொறுப்புகள், பதவிகளில் உள்ளோர், மூத்த தலைமுறையினர், அரசியலிலும் சமூகச் செயற்பாடுகளிலும் அனுபவத்தைக் கொண்டிருப்போரும் உள்ளடங்குவர்.

வேண்டுமானால் ஒரு தடவை தேர்தற்கால முகநூல் பதிவுகளுக்குச் சென்று பாருங்கள். எவ்வளவு கீழ்த்தரமான முறையில் பதிவுகள் இடப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டு வெட்கமடைவீர்கள். அத்தனையும் ஜனநாயக விரோதம் அல்லது ஜனநாயக மறுப்பைக் கொண்டவை. பண்புக்கும் பண்பாட்டுருவாக்கத்துக்கும் எதிரானவை. ஆனால், அவற்றை நாமெல்லோரும் பார்த்தோம், படித்தோம், ரசித்தோம் அல்லவா. சிலர் முகச் சுழிப்போடு அவற்றைக் கடந்து சென்றிருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இது தவறு. இந்தப் போக்கு எம்முடைய சமூகத்துக்கும் அதனுடைய அரசியல் பயணத்துக்கும் விடுதலைக்கும் கேடானது என்று எவருமே சொல்லவில்லை. சொல்லத்துணியவில்லை. அப்படி எவராவது நியாயத்தையும் உண்மையையும் சொல்ல முயன்றிருந்தால் அவர்களின் மீதும் சேறு வாரியிறைக்கப்பட்டிருக்கும். தவறுகளைக் கண்டித்திருந்தால் குழுத்தாக்குதல்களுக்கு ஆளாக வேண்டியிருந்திருக்கும். குறைந்த பட்சம் ஒரு சிறிய மாற்று அபிப்பிராயத்தை, மறு பார்வையையே வைக்க முடியாது என்ற நிலையே நிலவியது. இது அறிவுப் பகிர்வுக்கு எதிரானது. அறிவியல் வளர்ச்சிக்கு மாறானது.

தவறான முகநூல் பதிவுகளுக்கே விமர்சனங்களை முன்வைக்க முடியாதி ருக்கும் போது எப்படி, தேர்தல் மேடைகளிலும் பிற அரங்குகளிலும் சொல்லப்பட்ட பொய்களுக்கு எதிராகக் குரல் எழுப்ப முடியும்? அங்கெல்லாம் விதைக்கப்பட்ட வசைகளையும் அவதூறுகளையும் எதிர்க்கவும் கண்டிக்கவும் முடியும்? இது எம்முடைய இயலாமையா? அல்லது அக்கறையின்மையா? அல்லது தெரிந்து கொண்டும் தெரியாதது போலவும் புரிந்து கொண்டும் புரியாதது போலவும் இருக்கும் ஒரு வகையான பொய்யான பாவனையா? அல்லது இவற்றினுள்ளே மறைந்திருக்கும் ஜனநாயக மறுப்பையும் அதிகாரத்தையும் நாமும் உள்ளூர ரசிக்கிறோமா? அதற்கான அனுமதியை வழங்கிக்கொண்டிருக்கிறோமா? அல்லது முன் சொல்லப்பட்டதைப்போல அச்சவுணர்வா? ஜனநாயக மறுப்பின் அடிப்படையே அச்சத்தை உண்டாக்கி கட்டுப்படுத்தி, அதிகாரத்தை நிறுவுவதேயாகும்.

நம் சூழலில் பொதுவாகவே ஜனநாயக மறுப்புகள் தாராளமாக உண்டு. அவற்றைப் பற்றிய உறுத்தல்கள் எதுவும் எமது பொது மனதில் இல்லை. பிறர் குறித்த மதிப்பிறக்கங்களை நாம் தாராளமாக ரசிப்போம். சினிமாவில் கூட செந்திலுக்கு எப்போதும் அடித்துக் கொண்டிருக்கும் கவுண்டமணியையும், அவரிடம் அடிவாங்கும் செந்திலையும் ரசித்துக் கொண்டிருப்பவர்கள் நாம். பிறரிடம் அடிவாங்குகின்ற அல்லது மாட்டிக்கொண்டு திக்குமுக்காடுகின்ற வடிவேலுவை, விவேக்கை ரசிப்போம். எம்முடைய நகைச்சுவை உணர்வென்பது பிறர் ஈனநிலையில் மகிழ்வதாகவே எப்போதும் உள்ளது.

இதனால்தான் எமக்குள் வன்முறைகள் குவிந்து போயிருக்கின்றன. வன்முறையாளர்களை நாம் தாராளமாக அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். ஜனநாயக மறுப்பு வழமையாக, மரபாக, பண்பாடாக ஆக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் முடிவுகளே இதற்குச் சான்று. சமூகக் குற்றமிழைத்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலரே மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம், ஜனநாயகம் பற்றி தெளிவின்மை, அக்கறையின்மையே ஆகும். இதனால் தான் தமிழ்ச் சமூகத்தின் ஜனநாயகக் குறைபாட்டைப்பற்றி தொடர்ந்து பேசி வருகிறோம். "இலங்கையிலேயே ஜனநாயகம் இல்லை. இதற்குள் நீங்கள் தமிழ்ச்சமூகத்திலுள்ள ஜனநாயகக் குறைபாட்டைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" என்று கேலி செய்குவோம் உண்டு.

இது முற்றிலும் தவறான பார்வை. முதலில் எம்மைத் திருத்திக் கொள்வோம். பிறகு பிறரைப் பற்றிப் பார்த்துக் கொள்ளலாம். இதனால்தான் "உன்னைத் திருத்திக் கொள், சமூகம் தானாகத் திருந்து" என்று சொல்கிறார்கள்.

விடுதலைக்காகப் போராடும் இனமொன்று முதலில் தனக்குள் ஜனநாயகச் செழுமையைக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதனால் விடுதலையை நோக்கிப் பயணிக்க முடியும். இல்லையெனில் தொடர்ந்தும் வீழ்ச்சியும் நெருக்கடியுமே ஏற்படும். விடுதலை தடைப்பட்டுக் கொண்டேயிருக்கும். எத்தகைய வளர்ச்சிக்கும் அடிப்படையானது ஜனநாயகம். ஆகவேதான் ஜனநாயகத்தின் அவசியமும் அதன் செழுமையும் தொடர்ந்தும் வலியுறுத்தப்படுகிறது. உலகில் நடக்கும் அத்தனை போராட்டங்களின் அடிப்படையும் ஜனநாயகத்துக்கானதே. ஜனநாயகத்துக்கான போராட்டமே உலகிலே மிகப் பெரிய போராட்டமும் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டதுமாகும். ஜனநாயகச் செழுமையில்லை என்றால் வளர்ச்சியே இல்லை. முன்னேற்றம் ஏற்படாது. எமக்குள் ஜனநாயகம் எந்த அளவுக்கு உள்ளது? இதற்கு முன்னால் எமது சூழலில் ஜனநாயகம் பற்றிய புரிதல் எந்தளவுக்கு உண்டு என்று பார்க்க வேண்டும். நம் குடும்ப அமைப்பிலேயே ஜனநாயகம் சீராக இல்லை. குடும்பங்களுக்குள் நிலவுகின்ற ஜனநாயக மறுப்புகள் ஏராளம். கணவன் - மனைவி, தந்தை - மகன், அண்ணன் - தம்பி, மாமியார் - மருமகள் என்று உள்ள உறவுகளின் கட்டமைப்பே ஜனநாயகத்துக்கு மாறான நிலையில்தான் பெரும்பாலும் உள்ளது. இங்கே எழுதப்படாத அதிகாரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒருவிதமான மேல் - கீழ் நிலை நிலவுகிறது. கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டவள் அல்லது கணவனை அனுசரித்துப் போக வேண்டியவள் என்ற மாதிரியான ஒரு நிலை இது. இதை சமூக நடைமுறையாகக் கொள்கிறோம். இதனால் தான் "கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருசன்" என்ற பழமொழியே வந்தது. என்னதானிருந்தாலும் புருசன் (ஆண்) என்ற அடையாளத்தையும் தகுதியையும் மனைவி (பெண்) அனுசரித்துப் போக வேண்டும் என்ற நிலை. இதுவே ஏனைய உறவுக் கட்டமைப்பிலும் உண்டு.

குடும்ப அமைப்புக்கு வெளியே நிர்வாக அடுக்குகள், அரசியல் கட்டமைப்புகள், கட்சிகள், நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பு என அத்தனை தளங்களிலும் அதிகாரம் வலுவாக நிறுவப்பட்டுள்ளது. இங்கிருக்கும் ஜனநாயக அடிப்படைகள், ஜனநாயக உரிமைகளைப் பற்றி எவரும் பொருட்படுத்துவதில்லை.

எனவேதான் எல்லா இடங்களிலும் பிரச்சினைகள் குவிந்துபோய் கிடக்கின்றன. எல்லா இடங்களிலும் சிதைவுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஜனநாயகத்தின் அடித்தளத்தை, அதனுடைய செழுமையைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். முதலில் மற்றவர்களை மதிப்பதில் இருந்து இதை உருவாக்குவோம். மற்றவர்களின் கருத்தை மதிப்பது. மாற்றுக் கருத்தைப் புரிந்துகொள்ள முற்படுவது, மற்றவைகளை ஏற்றுக் கொள்வது. இதற்கான சகிப்புணர்வை உருவாக்கிக் கொள்வது என இது விரிவடையும். எங்களைப் போல மற்றவர்களுக்கும் அவர்களுக்கென்று அபிப்பிராயங்களும் நிலைப்பாடும் அனுபவங்களும் அறிவும் இருக்கும் என்று புரிந்து கொள்வதும் ஏற்றுக் கொள்வதும் இதில் முதற் தொடக்கமாகும். இது ஒரு பண்புச் செயல். இதுவே ஜனநாயகத்துக்கான தொடக்கம். இதைச் செய்யும்போது எமது சூழல் சுத்தமாகும். பொது வெளி அழகாகும். அழகு கூடக்கூட வளர்ச்சி ஏற்படுகிறது என்பதே அர்த்தமாகும்.



# ஓ லெபனானே!!

ஆர்.பிரகாஷ்

உலக உலா

போரால் உலகில் உருக்குலைந்த நாடுகளின் வரிசையில் லெபனானும் ஒன்று. சன்னி ஷியா இஸ்லாமியர்களிடையே நடந்த மோதல், இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்கள் இடையே நடந்த மோதல் என்பவற்றால் பெரும் அழிவைச் சந்தித்த லெபனான், அதன் பின்னர் சிரியாவுடன் இடம்பெற்ற எல்லைப் பிரச்சினையாலும், இஸ்ரேலுடன் இடம்பெற்ற ஆக்கிரமிப்பு மோதலாலும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தது. எனினும் இவை அனைத்துக்கும் நிகரான மிகப்பெரும் அழிவை தற்போது அந்த நாடு சந்தித்துள்ளது. லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இடம்பெற்ற அமோனிய நைட்ரேட் வெடிப்பே அந்தப் பேரழிவு.

இலங்கை நேரப்படி ஒகஸ்ட் 4ஆம் திகதி பின்னிரவு. அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த பெய்ரூட் துறைமுகப் பகுதி திடீரென அதிரத் தொடங்கியது. அந்த அதிர்வின் தாக்கம் சுமார் 200 கிலோமீற்றருக்கும் அப்பால் உணரும் அளவுக்கு சக்திகொண்டதாக இருந்தது.

பெய்ரூட் நகரில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைத்த 2 ஆயிரத்து 750 தொன் அமோனியம் நைட்ரேட் சில கணங்களில் வெடித்திச் சிதறி, கண்ணிமைப்பதற்குள் அந்த இடத்தையே சுடுகாடாக்கிவிட்டது. சுமார் ஆறு ஆண்டுகளாகப் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்ட அமோனியம் நைட்ரேட்தான் இந்தப் பெருவெடிப்புக்கு மூலகாரணம். இதில் 200க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். வெடிப்பு ஏற்பட்ட சில நிமிடங்களிலேயே அவசர நிலை அறிவிக்கப்பட்டது. தனது நேச நாடுகளை உதவிக்கு வருமாறு லெபனான் ஈனக்கூரலில் கெஞ்சியது. நிலைமை தீவிரமானது. பொருளாதார வளர்சுட்டெண்ணின்படி பார்க்கையில் 40 ஆண்டுகளில் உலக நாடுகளிடம் இருந்து பின்னகர்ந்துள்ளது லெபனானின் தலைநகர் பெய்ரூட்.

கொரோனாப் பெருந்தொற்று மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாக சூடான், சோமாலியா, யேமனுக்கு அடுத்த படியாக பெரும் உணவுப் பஞ்சத்தை லெபனான் எதிர்கொண்டிருந்தது. இந்த நிலையில் ஏற்பட்டுள்ள இந்தப் பெருவெடிப்பு ஒட்டுமொத்த லெபனானையும் பட்டினிச் சாவுக்குள் வலிந்து தள்ளியுள்ளது. பல தொன் உணவுகள் பயன்பாட்டுக்கு உதவாதனையாக ஆகியுள்ளன. இதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் 50 தொன் தானியங்களும், உணவுகளும் லெபனானுக்கு பல கப்பல்களில் விரைகின்றன. அடுத்த 4 மாதங்களுக்கு தேவையான உணவுகள் அவ்வாறு அனுப்பிவைக்கப்படவுள்ளன. பிரான்ஸ் தனியாக சிலதொன் உணவுகளை வழங்கவுள்ளது. பிரான்ஸைப் பொன்று ஏனைய சில நாடுகளும் உதவிக்கரம் நீட்டியுள்ளன. இவ்வளவு அனர்த்தையும் உண்டுபண்ணிய பெய்ரூட் வெடிப்புச் சம்பவத்துக்கு யார் காரணமென்பது இன்னமும் மர்மமாகவே நீள்கிறது.

'இதுவரை காலமும் எதிர்கொண்ட அவலங்களும், தற்போது ஏற்பட்டிருக்கும் பெருவெடிப்பும்தான் லெபனானின் பிரச்சினைகளா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

உண்மையில் லெபனானிற் பிரச்சினை தற்போதுதான் ஆரம்பமாகின்றது. ஈவிரக்கம் காட்டாமல் இரையை வேட்டையாடும் கழுகுபோல் மத்திய கிழக்கின் ஆக்கிரமிப்புக் கழுகான இஸ்ரேல், பலஸ்தீனத்தை இரையாக்கிவிட்டு லெபனானையும் அதன் பலவீனத்தையும் நோக்கித் தன் பார்வையைத் திருப்பி பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆக, லெபனானின் கையறு நிலையை இஸ்ரேல் தனது ஊடுருவலுக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் சாதகமாகப் பயன்படுத்தக்கூடும்.

**அதேபோன்று ஈராக் மற்றும் சிரியாவில் இருந்த கச்சா எண்ணெய் வளத்தை அங்கு இராணுவ நிலைகளை அமைத்துச் சூறையாடிய அமெரிக்கா, 2,750 தொன் அமோனிய நைட்ரேட்டை பூதாகரமாக்கி மத்திய கிழக்கில் தன் இன்னொரு நிலையாக லெபனானை ஆக்கிரமிக்கவும் முனையலாம். ஏனெனில் அமெரிக்காவுக்குத் தேவையான கச்சா எண்ணெய் லெபனானிலும் தாராளம். அதேபோன்று மத்திய கிழக்கில் தாராளமாகக் கொட்டிக் கிடக்கும் ஆயுதக் குழுக்கள் சிரியாவைப் போன்று தமது களமாக லெபனானையும் மாற்றக்கூடும். அதற்குரிய ஏதுநிலையில்தான் லெபனான் தற்போது உள்ளது.**

**ஓ லெபனானே! மத்திய கிழக்கின் மற்றொரு துயரம் நீ!.**

■

# ஆளே இல்லாத கடையில்...

'ஆளே இல்லாத கடையில ஆருக்கடா ரீ ஊத்திறாய்..?' என்பது நகைச்சுவை நடிகர் விவேக்கின் பிரபலமான திரைப்பட வசனம். எவரும் கண்டுகொள்ளாத விடயத்தை எதற்காகச் செய்யவேண்டும் என்ற பொருளை வெளிப்படுத்துகின்றது அந்த வசனம். இது எதற்குப் பொருந்துகின்றதோ இல்லையோ நிகழ்கால விளையாட்டு அரங்குக்கு அப்படியே பொருந்தும். கால்பந்தாட்ட ஜாம்பவான்களான ரொனால்டோ, மெஸ்ஸி முதல் கிரிக்கெட் ஜாம்பவான்களான டோனி, கோலி வரையில் அனைவரும் தற்போது 'ஆளில்லாத கடையில் ரீ ஆத்தும்' நிலைக்குத்தான் தள்ளப்பட்டுள்ளனர்.



கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக முடங்கியிருந்த விளையாட்டு உலகம் கடந்த சில வாரங்களாக மீண்டும் தன் இயல்பு நிலைக்குத் திரும்ப எத்தனித்துக் கொண்டிருக்கின்றது. வல்லுநர்களின் நெறிப்படுத்தலில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி ரசிகர்கள் இல்லாமல் மூடிய மைதானத்துக்குள் கால்பந்து, ரென்னிஸ், கிரிக்கெட் ஆட்டங்கள் தற்போது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கால்பந்தாட்டங்களைப் பொறுத்தவரையில் ஸ்பெய்னின் லா லிகா தொடர், இத்தாலியின் லீக் ஏ தொடர் என்பவை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் தொடரும், இங்கிலாந்து - அயர்லாந்துத் தொடரும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. கால்பந்தாட்ட ரசிகர்களுக்கு விருந்துதரும் வகையில் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான யூரோ கிண்ணத் தொடரும், கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்துதரும் வகையில் ஐ.பி.எல் தொடரும் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன. எனினும் துரதிர்ஷ்டவசமாக ரசிகர்கள் இல்லாமல் மூடிய மைதானங்களிலேயே இந்த ஆட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ரசிகர்கள் இல்லாமல் ஆட்டங்களை நடத்துவதில் சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் முதலாவதும் முக்கியமானதும் என்னவெனில், கொரோனா பெருந்தொற்றின் முன்னர் களத்தில் வீரர்களிடம் வெளிப்பட்ட ஆக்ரோசத்தை இப்போதெல்லாம் காணமுடிவதில்லை. கமராக்களை நோக்கியும், தமது ரசிகர்கள் கூட்டத்தை நோக்கியும் சைகை காட்டி பெரும் 'கவனவீர்ப்புக் கருவிகளாக' இருந்த வீரர்கள் தற்போதெல்லாம் பெரிதும் அடக்கி வாசிக்கின்றனர். ஆக்ரோசம் என்பது அரிதிலும் அரிதாக அல்லது அறவே இல்லாத விடயமாக இப்போது ஆகிப்போயுள்ளது.

ஆக்ரோசத்தில் உச்சமானவர்கள் என்று அடையாளப்படுத்தப்படும் கோலி, வோர்ணர், ஸ்ராக் போன்ற கிரிக்கெட் வீரர்களுக்கும் ரொனால்டோ, நெய்மர் போன்ற கால்பந்தாட்ட வீரர்களுக்கும் நிகழ்கால மைதானங்கள் துர்க்கனவேயன்றி வேறில்லை. அதேபோன்று, ரசிகர்களின் கூக்குரல்களுடன் பார்த்துப்பழகிய ஆட்டங்கள் அந்தக் கூக்குரல்கள் நீங்கலாகப் பார்க்கும்போது உப்புச்சப்பில்லாத ஊமைப்படம் பார்ப்பது போன்ற விடயங்களாகவே உள்ளன. ரசிகர்கள் இல்லாமல் இத்தகைய கள நிலவரத்தில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதினால்கூட அது ஏ அணிகளுக்கு இடையிலான மோதல் போன்றுதான் இருக்கும். அதேபோன்று போர்த்துக்கல் ஆர்ஜென்ரீனா அணிகள் மோதுவதும் கூட கால்பந்தாட்டத் தகுதிகாண் ஆட்டங்களைப் போன்றுதான் இருக்கும். விளையாட்டு உலகின் உயிர்நாடியே ரசிகர்கள்தானே. அவர்களை நீக்கிவிட்டால் பிறகென்ன ஆட்டங்கள். அதேநேரம், ரசிகர்களின் உடல்நலமும் சுகாதாரமும் அனைத்தையும்விட மேலானது என்ற அடிப்படையில் தற்போது எடுத்துள்ள 'பூட்டிய மைதானத்துக்குள் ஆட்டங்கள்' என்ற முடிவு வரவேற்கப்பட வேண்டியதுதான். அதுமட்டுமல்லாமல் கொரோனா பொதுமுடக்கம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கியிருப்பவர்களுக்கு இந்த ஆட்டங்கள் சிறந்த பொழுதுபோக்கு என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

■

# சிரித்து வாழ வேண்டும்



சூரியகுமார் சியாளினி
கலைப்பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மகிழ்ச்சியை மட்டுமல்ல ஆரோக்கியத்தையும் இலவசமாகத் தருவது தான் சிரிப்பு. சிரியுங்கள் அது இதயத்தின் இசை என்கிறார் அரிஸ்டோட்டிஸ்.

மொழி, ஜாதி, மதம் என அனைத்தும் கடந்த தன்னிகரில்லாமனித உணர்வு தான் சிரிப்பு.

"உதட்டுக்கு அழகே புன்னகை எனவே
அது அணிவதில்லை பொன் நகை"

எனப் புன்னகையை அழகாக வர்ணிக்கின்றனர். நாம் பல இலட்சம் மதிப்புள்ள உடைகளையும், அணிகலன்களையும் கொண்டு சிரிக்க வேண்டிய இடத்தில் சிரிக்காமல் முகத்தை ஏழு கோணத்தில் 'உம்' என்று வைத்துக் கொண்டால் பார்க்கவே சகிக்காது. நம்மைச் சூழ்ந்துள்ள சில நபர்களின் எதிர்மறைவான எண்ணங்களையும், ஆற்றல்களையும் கூட நேர்மறையானதாக மாற்றிய மைக்கத்தக்க கூடும் சக்தியைக் கொண்ட ஒரே முக வெளிப்பாடு சிரிப்பு மட்டுமே ஆகும். சிரிப்பு என்பது எம்மையும் எம்மைச் சுற்றியுள்ள வர்களையும் மகிழ்விப்பது மட்டுமல்லாமல் எம் உடல் நலத்தையும் பேணி பாதுகாக்கின்றது. பல ஆராய்ச்சிகளில் இது உறுதி செய்யப்பட்டு 'சிரிப்புச் சிகிச்சை' என்று கூடத் தொடங்கி விட்டன. பல ஹோர்மோன்களின் தொழிற்பாட்டுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கும் கருவியாகவும், முக வசீகரத்தை மெருகேற்றி சுமாராக இருப்பவர்களைக் கூட மிகவும் அழகுடையவர்களாக மாற்றும் சாதனமாகவும் சிரிப்பு விளங்குகின்றது.

தற்போது பல கொடிய நோய்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம் போதியளவிலான சந்தோச சூழ்நிலைக் குறைபாடே ஆகும். மகிழ்ச்சி எம்மைத் தேடி வரும் என்றும் நாம் நினைத்துக் கொண்டிருக்காமல் அத்தகைய சூழலை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

உன் சிரிப்பின் நீளம் எவ்வளவோ அந்தளவு என் ஆயுளின் நீளம் என்பார்கள். மனம் விட்டுச் சிரிக்கும் ஒவ்வொரு முறையும் மரணம் தள்ளிப்போடப்படுகின்றது.

சிரிக்கும் போது நாம் அதிகளவில் பிராண வாயுவைச் சுவாசிக்கின்றோம். இதனால் உடலுக்குப் புத்துணர்வு கிடைப்பதோடு இதயத்தில் இரத்த ஓட்டம் தூண்டப்பட்டு நாள் முழுவதும் சுறுசுறுப்பைத் தருகின்றது. உலகிலேயே மிகவும் கடினமான செயல் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதுதான்.

வாய்விட்டுச் சிரி நோய்விட்டுப் போகும் என்ற பழமொழி ஏதோ வாய்ப்போக்கில் சொன்ன பழமொழி அல்ல. சிரிப்பின் மதிப்பை உணர்ந்து சொன்னதாகும்.

நாம் காலை முதல் இரவு வரை பரபரப்பான வாழ்க்கை முறையாலும் கொவிட் 19 எனப்படும் கொரோனாக் காலத்தில் மிகவும் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதன் காரணமாக மன அழுத்தம் மன உளைச்சல், பொருளாதாரப் போராட்டம், வறுமை எனப் பல நெருக்கடிக்களைச் சந்திக்கின்றோம். இதற்கிடையில் சிரிப்பதென்பது கடினமான காரியம் தான்.

சிரிப்பால் விளையும் மருத்துவப் பயன்கள் சில வருமாறு;

சிரிக்கும் போது முகத்தின் தசை நார்களுக்கு பயிற்சி கிடைக்கின்றது. முகத்தின் அழகு அதிகரிக்கின்றது.

மன அழுத்தத்தைக் குறைக்கின்றது.

இரத்த அழுத்தம் வராமல் இரத்த ஓட்டம் சீராக்கவும் உதவுகின்றது.

நீண்ட சிரிப்பு உடலில் உள்ள அதிக கலோரிகளை எரிக்கின்றது. சிரிக்கும் போது நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது.

உடலில் உணவுகள் எளிதாக ஜீரணமா கின்றது. மூளையில் எண்டோர்பின் ஹார்மோன் சுரக்கின்றது.

உடல் வலியைக் குறைக்கின்றது.

இதயத் துடிப்பை சாதாரண நிலைக்குக் கொண்டு வருகின்றது.

திருக்குறள் முதல் வாட்ஸ் அப் ஸ்மைலி வரை அத்தனையும் அழுத்தமாகச் சொல்வது சிரிப்பைத் தான். மன அழுத்தங்கள் திடீரென விடுதலை பெறும்போது வெடித்துச் சிதறுவது சிரிப்பு என்கிறார் உளவியலின் தந்தை சிக்மன் ப்ராய்ட். ஆகவே பிறர் சிரிக்க வாழாமல், சிந்தித்து சிரியுங்கள். ■

# அமெரிக்கர்களுக்கு வந்த மர்மப்பொதிகள்

குமாரதாஸன் (பிரான்ஸ்)

அமெரிக்க மாநிலங்கள் எங்கும் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு தாவர விதைகள் உள்ளடங்கிய மர்மக் கடிதப் பொதிகள் கிடைத்துள்ளன என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவில் இருந்து அனுப்பப்பட்டவை என்று நம்பப்படும் இந்தப்பொதிகளில் காணப்படும் விதைகளைப் பயிரிடவோ அன்றி தரையில் வீசவோ வேண்டாம் என்று அமெரிக்க மக்களை அந்நாட்டு அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனர்.

வோஷிங்டன், லூஸியானா, வேர்ஜீனியா, கென்சாஸ் போன்ற அமெரிக்க மாநிலங்கள் பலவற்றினதும் விவசாய சேவைப் பிரிவுகள் தமது பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கு இந்த மர்ம விதைகள் குறித்து அறிவுறுத்தும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.


காய்கறிகள், பூங்கன்றுகள், மூலிகைகள் போன்றவற்றின் விதைகள் சிறிய பொதிகளில் இடப்பட்டு கடிதம் மூலம் பெரும் எண்ணிக்கையானோரின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பொதிகளில் சீன எழுத்துக்கள் காணப்படுவதை அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டிருக்கும் படங்களில் அவதானிக்க முடிகிறது.

கொரோனா வைரஸ் நெருக்கடிக்குப் பின்னர் மக்களிடையே வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் ஆர்வம் அதிகரித்திருப்பதால் இந்த மர்ம விதைகளை இலவசமாகப் பெற்ற அமெரிக்கர்கள் அவற்றை விதைத்துப் பராமரிக்கத் தொடங்கி உள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவை சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி பயிரினங்களை நாசம் செய்யக்கூடிய ஆக்கிரமிப்புத் தாவர இனங்களின் விதைகளாக இருக்கலாம். உள்ளூர் தாவரங்களுக்கு நோயைப்பரப்பும் தன்மையைக் கொண்டிருக்கலாம். அத்துடன் கால்நடைகளுக்கும் பாதிப்பை உண்டுபண்ணலாம் என்று அமெரிக்காவின் ஓஹியோ மாநில பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறை நிபுணர்கள் எச்சரித்திருக் கின்றனர்.

விதைகளை இணையச் சந்தைகளில் விற்கும் முகவர்களின் வியாபார உத்தியா அல்லது அமெரிக்காவுக்குள் நச்சு விதைகளையும் ஆபத்தான விவசாயக் களைகளையும் பரப்புகின்ற சீனாவின் சதியா இதன் பின்னணி என்பதைக் கண்டறிவதில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருகிறது. கொரோனா வைரஸ் அனர்த்தத்தை அடுத்து அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே முரண்பாடுகள் முற்றித் தீவிரமடைந்து புதியதொரு பனிப்போர் யுகம் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சாத்தானும்...



ஆனால், இப்போதிருக்கும் பேரண்டமோ, 4 சதவீதத் துகள்களை மட்டுமே கொண்டிருக்கிறது. எஞ்சிய 96 சதவீதத் துகள்களுக்கும் என்ன நடந்தது? அவை எங்கே மாயமாகிப் போயின? இந்த இடத்தில்தான் நான் ஆரம்பத்தில் கூறிய 'போல் டிராக்' வருகிறார். குவாண்டம் இயற்பியல் ஆரம்பித்த காலங்களிலும், ஐன்ஸ்டைன் தன் சார்புக் கொள்கைகளை வெளியிட்ட காலங்களிலும் இப்போதிருப்பது போன்ற எந்தக் கருவிகளும் அப்போது இருக்கவில்லை. மின்சாரம்கூட புதிய ஒன்றுதான். தொலைநோக்கிகளோ, கணனிகளோ இல்லாத காலமது. ஆனால், அப்போதே மொத்தப் பேரண்டத்தின் ஆரம்ப இரகசியங்களையும், அமைப்புகளையும் இயற்பியலாளர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். அவற்றைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு உதவிய ஒரேயொரு கருவி, கணிதம் மட்டுமே! அண்டம் முழுவதும் ஏதோவொரு விதிக்கமைய, முறையான அமைப்புகளுடன் காணப்படுவதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். பூமி தன்னைத்தானே எப்போதும் ஒரே சீரில் சுற்றுவதும், சந்திரன் பூமியைச் சுற்றுவதும், பூமி சூரியனைச் சுற்றுவதும், எப்போதும் மாறாக் கணக்கின்படியே நடந்துகொண்டு வருவதை அவதானித்தார்கள்.

**எல்லாமே கணித மயம்**

ஒரு பந்தை மேல்நோக்கித் தூக்கியெறிந்தால் கூட, அது கணிதவிதிக்கமையக் குறிப்பிட்ட வளைவுடன்தான் கீழ்நோக்கித் திரும்புகிறது. இதுபோல எதையெடுத்துக்கொண்டாலும், இயற்கையின் அனைத்து அமைப்புகளும் கணிதத்தால் தெளிவுபடுத்தக்கூடிய வகையிலேயே அமைந்துள்ளதைத் தெரிந்துகொண்டார்கள். அதனால், கணிதத்தைப் பயன்படுத்தியே இயற்கை தன்னை உருவாக்கியிருக்கிறது என்னும் பேரண்ட இரகசியத்தைத் தெரிந்து கொண்டார்கள். அண்டத்தின் வரைவுமொழி கணிதமே என்னும் முடிவுக்கும் வந்தார்கள். அந்தக் கணிதத்தின் சமன்பாடுகள் மூலம் அண்டத்தையே அளக்க ஆரம்பித்தார்கள். அண்டத்தின் அனைத்து இரகசியங்களையும், வீட்டில் ஒரு மேசையில் அமர்ந்துகொண்டே அறிந்து கொண்டார்கள். அவர்கள் கணித்ததில் 99 சதவீதம் உண்மையானவை என்பதைப் பிற்கால ஆராய்ச்சியாளன் நிரூபித்தான். நிரூபித்துக் கொண்டிருக்கிறான். நிரூபிப்பான். கணிதத்தை வைத்து, போல் டிராக்கால் ஒரு சமன்பாடு உருவாக்கப்பட்டது. அதன்மூலம், அண்டத்தில் தொலைந்துபோன துகள்களுக்கு என்னவானது என்பதைத் தெரிந்து கொண்டார்கள். டிராக் கண்டுபிடித்த அந்த அற்புதத்தையும், அதன் விபரங்களையும், இதற்கு ஏன் 'கடவுளும், சாத்தனும்' என்று பெயர் வைத்தேன் என்பதையும் அடுத்த பகுதியில் சொல்கிறேன். ஆனால், இது எங்களுக்கு வேண்டாம். இந்த அறிவியல் போரடிக்கிறது என்று நீங்கள் கருதினால், தயங்காமல் எனக்குச் சொல்லுங்கள். நான் அடுத்த பகுதியில் வேறு ஏதாவது சொல்கிறேன். ■

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொடர் திருட்டுக்களால் அந்தப்பகுதி மக்கள் அச்சத்துள் மூழ்கினர். எவ்வளவோ முயற்சித்தும் பொலிஸாரால் திருடர்களை முதலில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் ஒரு சிறு தவறு, அந்த நகைத்திருட்டுக் கும்பலை கூண்டோடு பிடிக்க உதவியது. அப்படி என்ன தவறு செய்தார்கள்? எப்படிப் பிடிபட்டார்கள்? அந்தக் கும்பலின் தலைவன் யார்? போன்ற திடுக்கிடும் உண்மைகளை எமது புலனாய்வு அணி நேரடியாகச் சென்று சேகரித்து சஞ்சீவி வாசகர்களுக்காக இங்கே தருகின்றது.

# 16 வயதினிலே...!



○ உளவாளி

**சிறுவன் தலைமையில் நடந்த அதிரவைக்கும் நகைத்திருட்டுகள்!!**

**எங்கே போயின நகைகள்?**

அவனுக்கு வயது 15 தான். ஆனால் கொஞ்ச நாட்களாக அவனது செய்கைகளில் ஏதோ ஒரு வித்தியாசம். அடிக்கடி எதையோ யோசிப்பதும், படபடப்போடு அங்குமிங்கும் திரிவதும், வீட்டில் உள்ள அறைக்குள் சென்று நீண்டநேரம் அதற்குள்ளேயே நிற்பதுமான அவனது போக்கு வீட்டிலுள்ள வர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. சரி அப்படி என்னதான் செய்கிறான் என்று பார்ப்போமென, எதுவுமே தெரியாதவர்கள் போல பெற்றோர் அவனைக் கொஞ்சம் கண்காணிக்கத் தொடங்கினர்.

வெளியே ரியூசனுக்குப் போய்விட்டு வீட்டுக்குள் வந்தவன், வீட்டை ஒருதரம் நோட்டமிட்டான். தகப்பன் வெளியே எங்கோ போயிருக்க, தாயார் மட்டும் வீட்டு வேலைகளில் மும்முரமாக மூழ்கியி ருந்தார். தன்னை எவரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டவன், வீட்டு அறைக்குள் போய்விட்டான். இத்தனையையும் கண்டுகொள்ளாதவர் போல ஓரக்கண்ணால் நோட்டமிட்டபடி இருந்த தாயார், அறையோரமாக ஒளிந்து நின்று மகன் என்ன செய்கிறான் என்று எட்டிப் பார்த்தார். அறைக்குள் ஒரு சூட்கேசுக்குள் இருந்த தாயாரின் நகைகளை ஒவ்வொன்றாகஎடுத்து அவன் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

"எதற்காக என் நகைகளை அவன் எடுத்துப் பார்க்க வேண்டும்?" என்ற யோசனை தாயாருக்கு வந்தது. சரேலென அறைக்குள் நுழைந்தவர் .

" என்ன தம்பி, அம்மான்ரை நகைகளை ஏன் பார்க்கிறாய்?" என்று கேட்டதும்தான் தாமதம், அவன் முகம் சட்டென இருண்டது. நாக்கு குழறிய குரலோடு "ஒண்டுமில்...லை... சும்மா உடுப்புத் தேடேக்க நகை தட்டுப்பட்டிச்சு, அதுதான் பாத்தனான்" என்று சொல்லிகொண்டே நகைகளை இருந்த இடத்தில் வைத்துவிட்டு, வெளியேறினான். அவனது பயத்துடனான குரல் தாயாருக்கு என்னவோ போலிருந்தது. முழுநகைகளையும் எடுத்து மனத்திருப்திக்காக சரிபார்த்தபோது, 11 பவுண் நகை மிஸ்ஸிங். கூட்டிக் கழித்துப் பார்த்தபோது, மகன் தான் இதற்குக் காரணமென அவருக்குத் தெரிந்தது.

"ஆனால் பத்தாமாண்டு படிக்கும் மகன் எதற்காக வீட்டு நகைகளை எடுக்க வேண்டும்? அதுவும் 11 பவுண் நகை எதற்கு?"

தாயாரால் இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கமுடியவில்லை. தந்தை வந்ததும் நடந்ததையெல்லாம் சொல்ல, விசாரணை தொடங்கியது. முரண்டு பிடிக்காமல் அவன் உண்மையைக் கக்கத் தொடங்கினான். அவன் சொல்லச் சொல்ல பெற்றோருக்கு அதிர்ச்சியைத் தாங்கமுடியவில்லை

**பயமுறுத்தலும் நகை பறிப்பும்**

வடமராட்சியில் அதுவும் வல்வெட்டித்துறையில் பட்டம் விடுவதென்பது ஒரு கலை. சிறு வயதிலேயே பட்டங்கள் மீது காதல் வந்துவிடும். அப்படித்தான் இவனுக்கும் விதவிதமான பட்டங்கள் விடுவதில் ஆர்வம் அதிகம். அப்படி வெவ்வேறு வடிவங்களில் பட்டம் கட்டுவோரிடம் காசுகொடுத் துப் பட்டங்களை வாங்கி வந்து பறக்க விடுவான். ஒரு நாள் பாடசாலையில் , இவனை விட ஒரு வயது கூடிய இன்னொருவன் விநோதமான பட்டமொன்றைக் கொண்டு வந்திருந்தான். இவனுக்கு அந்தப் பட்டத்தைப் பார்த்தவுடனேயே பிடித்துப் போனது. " அண்ணை இது எங்க வாங்கினது?" என்று கேட்க, அவனோ " இது வாங்கேல, நான் கட்டினது" என்று சொல்லியிருக்கிறான்.

உடனே இவன் " நான் காசு தாறன் எனக்கும் இப்பிடி ஒண்டு கட்டித் தாறிங்களா?" என்று கேட்டிருக்கிறான். காசு என்ற சொல்லைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்த பட்டம் கட்டுபவன் சந்தோசமாகத் தலையசைத்து , "பின்னேரம் வீட்டை வா, கட்டித்தாறன்" என்றுசொல்லி விட்டுப் போயிருக்கிறான். இவன் பட்டம் வாங்க அங்கு செல்வதும், காசு கொடுப்பதும், பட்டத்தை பறக்க விடுவதுமாக நாள்கள் கழிந்தன. கூடவே பட்டம் கட்டுபவனுக்கும் இவனுக்குமான நட்பும் அதிகமானது. ஒருநாள் பட்டம் கட்டுபவன் தன்னைவிட வயதுகூடிய நாலைந்து பேரோடு நின்று இவனையும் கூட்டுச் சேர்த்து பம்பலடித்துக் கொண்டிருந்தான். அப்போது பம்பலோடு பம்பலாக இவனது வாயில் ஒரு சிகரெட்டை வைத்து போனில் படமெடுத்து சிரித்தார்கள்.

அதற்குப் பிறகுதான் தொடங்கியது வினை.

அடுத்தநாள், பட்டம் கட்டுபவன் இவனைச் சந்தித்தான். முகத்தில் நட்புக்கான சிரிப்பில்லை. கையில் வைத்திருந்த போனை எடுத்து அதிலுள்ள இவன் சிகரெட்டை வாயில் வைத்திருக்கும் புகைப்ப டத்தைக் காட்டினான். " இதை உங்கட அம்மாட்ட காட்டப் போறன். அவா ரீச்சர்தானே. காட்டினால் என்ன நடக்குமெண்டு உனக்கும் தெரியும்தானே" என்று வெருட்ட, இவன் காட்ட வேண்டாம் என்று கெஞ்சிக் கூத்தாடி இருக்கிறான். அப்போது பட்டம் கட்டுபவன், " சரி, நான் காட்டேலை. ஆனால் நீ எனக்கு ஒரு வேலை செய்ய வேணும். உன்ர வீட்டில இருக்கிற நகையளைக் கொண்டு வந்து தா. அப்பிடிச் செய்தா நான் இதைக் காட்ட மாட்டன்" என்று தீர்வு சொல்லியிருக்கிறான். வீட்டில் அடி வாங்குவதை விடவும், இது நல்ல யோசனையாகப் பட, இவன் தலையாட்டினான்.

பிறகு வீட்டில் உள்ளவர்கள் காணாத வகையில் நகைகளைக் கொண்டு சென்று பட்டம்கட்டுபவனிடம் கொடுத்திருக்கிறான். அப்படி நாலைந்துமுறை நடந்து, 11 பவுண் நகைகள் பட்டம் கட்டுபவனிடம் போய்ச் சேர்ந்திருக்கிறது.

**கோட்டை விட்ட பொலிஸ்**

நடந்ததை மகன் சொல்லச் சொல்ல தந்தைக்கு அதிர்ச்சியோடு ஆத்திரமும் தலைக்கேறியது. மகனையும் அழைத்துக்கொண்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்குப் போய் முறைப்பாடு செய்தார். அங்கு " அந்தப் பெடியனைப் பிடிச்சுக் கொண்டு வாங்கோ,நாங்கள் விசாரிச்சு சொல்லுறம்" என்று பொலிஸார் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தநாள், இவனிடம் வழக்கம்போல நகையை வாங்குவதற்காக பக்கத்துக்கு வளவுக்கு பட்டம் கட்டுபவன் வந்தான். அவனறியாமல் பின்னால் வந்தவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான். அவனைக் கொஞ்சம் அதட்டி விசாரித்ததில் தானும் இன்னும் சிலரும் சேர்ந்தே இதனைச் செய்ததாக ஒத்துக் கொண்டான்.

" எங்கயடா மற்றவங்கள்?" என்று கேட்க,

" நீங்கள் என்னைப் பிடிச்சதைக் கண்டுட்டு ஓடிட்டாங்கள்"

"அப்பிடியோ எங்க ஓடியிருப்பாங்கள்?"

" என்னை உங்கட வீட்ட விடுங்கோ, நான் இருக்கிறன். நீங்கள் மற்றவங்களைப் பிடிச்சாங்கோ,.நான் இடம் சொல்றன். பொய் எண்டா வந்து அடியுங்கோ" என்று சொல்லியிருக்கிறான் பட்டக்காரன். பட்டக்காரனை வீட்டில் இருந்திவிட்டு, மற்றவர்களைப் பிடிக்க அந்தப் பையனின் போய்விட்டார்.

பறந்து போய்விட்டான். அதற்குப் பிறகு உசாரான பொலிஸ் அவன் சாதாரண ஆளில்லை, பலே கில்லாடித் திருடன் என்பதை உணர்ந்து தேடத்தொடங்கியது.
என்றாலும் அவன் இலேசில் சிக்கவில்லை. பல முயற்சிகளுக்குப் பிறகு பட்டக்காரனின் நெருங்கிய நண்பன் ஒருவனின் தொலைபேசி மூலம் அவனது தொடர்பு கிடைத்தது. பொலிஸார் சொற்படி நண்பன் இயல்பாகக் கதைத்தான்.
“ மச்சான் கனநாளா சாப்பாடு இல்லை. கொண்டு வாறியா ஏதும் சாப்பாடு?” என்று பட்டக்காரன் கேட்க, நண்பனும் சம்மதித்து, மைதானத்துக்கு வரச் சொல்லியிருக்கிறான். சாப்பாடு வாங்க வந்த பட்டக்காரன், ஏற்கனவே பதுங்கியிருந்த பொலிஸாரால் அமுக்கப்பட்டான். பொலிஸ் நிலையம் கொண்டு வந்து விசாரித்தபோது, ஏழெட்டு வீடுகளில் இரவில் புகுந்து நகைகள், போன் என்பவற்றை திருடியதை அவன் ஒப்புக்கொண்டான்.
“ சாராயத்துக்கும், கஞ்சாவுக்கும், சாப்பாட்டுக்கும் தான் இப்பிடிக் களவெடுத்தம்” என்று சொல்லியிருக்கிறான். அதன் பின்னர் அவனும் சகாக்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அங்கு கல்லும் கரையும் வண்ணம் கதைத்திருக்கிறான் பட்டக்காரன்,
” நான் ஒழுங்காப் படிச்சிருந்தா இப்பிடி செய்திருக்க மாட்டன். இப்பதான் எழுத்துக்கள் படிக்கிறன். இனி நான் இப்பிடிச் செய்யமாட்டன்” என்று அவன் சொல்ல, பொலிஸ் விசாரணையில் இருந்து அவன் விடுவிக்கப்பட்டு, சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் சேர்க்கப்பட்டான். கிட்டத்தட்ட ஒருமாதம் அங்கே இருந்தான் பட்டக்காரன். பின்னொரு நாளில், அங்கே இருந்தவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு தப்பியோடியே விட்டான்.
அவன் தப்பிப்போய் ஒரு மாதம் கடந்த நிலையிலும், அவனை இன்னும் பொலிஸால் கண்டுபிடிக்க முடியவில்லை. தேடிக்கொண்டே இருக்கிறார்கள். யாருக்குத் தெரியும், சிலகாலங்களுக்குப் பிறகு இன்னொரு குற்றச் செயலோடுதான் அவன் பிடிபடுவானோ, என்னவோ? கைக்கு கிட்டிய சிறுவயதுக் குற்றவாளியை கடைசியில் பொலிஸ் கோட்டை விட்டுவிட்டது.

## குற்றக் குறிப்பு 1

பட்டக்காரன் இப்படி சிறுவயதிலேயே குற்றவாளியாக மாறியமைக்கு காரணம் கண்டிப்பாக அவனது குடும்பச் சூழல்தான். தந்தை மதுவுக்கு அடிமையானவர். கூடவே அந்தப் பகுதியில் பிரபலமான கஞ்சா வியாபாரியும் கூட. கஞ்சா வாங்க வந்த ஒருவனோடு ஏற்பட்ட பழக்கத்தில், அவனோடு பட்டக்காரனின் தாயும் சென்றுவிட்டாள். அண்ணன்மாரும் லேசுப்பட்டவர்களில்லை. அப்பனுக்குத் தப்பாமல் அவர்களும் கஞ்சா விற்பதிலும், அதனை நுகர்வதிலுமே காலத்தைக் கழிக்கிறார்கள். பட்டக்காரனைத் தேடி ஒருநாள் பொலிஸ் வீட்டுக்குப் போனபோது, பட்டக்காரனின் அண்ணன் ஒருவர் கஞ்சா புகைப்பதற்குத் தயார் செய்துகொண்டிருந்திருக்கிறார். அந்தச் சமயம் பார்த்து பொலிஸ் வந்துவிட முறையாக மாட்டுப்பட்டு, அங்கேயே நல்ல பொலிஸ் ‘கவனிப்போடு’ கைது செய்யப்பட்டார். இப்படி ஒரு குற்றம் மலிந்த குடும்பச் சூழலில் அவனும் குற்றவாளியாக சிறுவயதிலேயே உருவானது அவனின் தவறாகுமா?

## குற்றக் குறிப்பு 2

பட்டக்காரனும், அவனது சகாக்களும் திருடிய நகைகளை அயலில் உள்ள பெண்ணொருவரிடமே விற்றிருக்கிறார்கள். அந்தப் பெண் ஒரு பவுண் நகையை மூவாயிரம், நாலாயிரம் ரூபாவுக்கே வாங்கியுள்ளார். அதுவும் உடனடியாகப் பணத்தைக் கொடுப்பதில்லை. அவர்களிடம் வாங்கிய நகையை ஏதாவது வங்கியில் அடகு வைத்துவிட்டு, அதன் பின்னரே அதற்குரிய பணத்தை( அதுவும் அதன் ஐயாயிரத்துக்கு உட்பட்டதே) கொடுப்பாராம். அப்படிக் கொள்ளைலாபம் அடித்து வந்த குறித்த பெண்ணும், பட்டக்காரன் பொலிஸில் கொடுத்த வாக்குமூலத்தால் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை செய்தபோது, வேறு சிலரிடம் இப்படி திருட்டு நகைகளை மலிவான விலைக்கு அவர் வாங்கியமை தெரியவந்தது. அவரிடமிருந்து பலவங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளின் பற்றுச்சீட்டுகளும் மீட்கப்பட்டன.
சிறுவன் ஒருவன் களவெடுத்த நகைகளை விற்கவரும்போது அவனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தாமல், அவனை மேலும் திருட ஊக்குவித்ததோடு, அறாவிலையில் நகைகளை வாங்கி தன் வளத்தைப் பெருக்கிக் கொண்ட இந்தப் பெண்ணும் பெருங்குற்றவாளியல்லவா?



## குற்றக் குறிப்பு 3

பட்டக்காரன் சிறுவன் என்பதால் அவனை எவரும் சந்தேகப்பட்டிருக்கவில்லை. இதனைப் பயன்படுத்தி அக்கம்பக்கத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று அங்குள்ள சிறுவர்களோடு விளையாடுவது போன்ற பாவனையில், வீடு பற்றிய சகல தகவல்களையும் நோட்டமிட்டு விடுவான். பின்னர் சிலநாட்களில் அவர்கள் இரவில் உறக்கத்தில் இருக்கும் போது வீட்டுக்குள் நுழைந்து , நகை பணம் என்பவற்றைத் திருடுவது இவனது குழுவின் பாணி. அப்படி ஒருமுறை ஒரு வீட்டுக்குள் ஓடுபிரித்து உள்ளே இறங்கமுயன்றபோது, சிசிரிவி கமெரா இருப்பதைக் கண்டுவிட்டார்கள். ஒருவேளை அதில் தங்கள் முகம் தெரியவந்து மாட்டுப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அதனை வேறு திசைக்கு மாற்றமுயன்றனர். அப்போது சத்தம் கேட்டு, விழித்தெழுந்த வீட்டுக்காரர் இவர்களைக் கண்டுவிட்டார். அப்படியே அலாக்காக அவர்களைப் பிடித்து பொலிஸில் கொடுத்தார். ஆனால் “ நாங்கள் புறாப் பிடிக்கத்தான் அந்த வீட்டுக் கூரையில ஏறினனாங்க;” எண்டு பட்டக்காரனும் அவன் சகாக்களும் அழுது குளற, அதைப் பொலிஸ் நம்பி விடுவித்தது. அப்போதே தீர விசாரித்திருந்தால் பலதிருட்டுக்கள் தடுக்கப்பட்டிருக்கக் கூடும்.

## குற்றக் குறிப்பு 4

பட்டக்காரனின் திருட்டுக்குழுவிலே அவன் தான் வயது குறைந்தவன். மற்றவர்கள் எல்லோரும் 20 வயதைத் தாண்டியவர்கள். ஆனால் அவர்களை வழிநடத்தியது 16 வயதான இந்தப் பட்டக்காரன் தான். அந்தளவுக்கு குற்றங்களை கெட்டித்தனமாகச் செய்யக்கூடியவனாகவும், தன்னைவிட வயது கூடியவர்களையே தனக்கு கட்டுப்படச் செய்யும் வல்லமை கொண்டவனாகவும் இருந்திருக்கிறான். யார் கண்டது, இந்தத் திறமைகளை அவன் வேறு நல்லவழிகளில் செலவிட்டிருந்தால், ஒரு சமூக மதிப்புள்ளவனாகவும் மாறியிருக்கக் கூடும்.

## குற்றக் குறிப்பு 5

இப்போது அவன் நன்னடத்தை இல்லத்தில் இருந்து தப்பியோடிய பின்னர் வீட்டுப்பக்கமோ, ஊர்ப்பக்கமோ தலைகாட்டவில்லை. ஆனால் தப்பித்துப்போய் ஒருமாதமாகி விட்டது. அப்படியானால் எங்கே ஒளிந்திருக்கக்கூடும்? அவனுக்கும் வேறு சமூக விரோதக் கும்பல்களுக்கும் தொடர்பு ஏற்பட்டு, அவர்கள் இவனைப் பயன்படுத்த தங்களோடு வைத்திருக்கவும் கூடும். அல்லது தனியே அவன் திருட்டு வேலைகளைச் செய்துவிட்டு, பகலில் எங்காவது கோயில், பொது மண்டபங்களில் ஒளிந்திருக்கவும் சந்தர்ப்பங்கள் உண்டு.
எவ்வளவு விரைவாக அவனைப் பிடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகப் பிடிப்பதே சமூகத்துக்கும் நல்லது, அவனுக்கும் நல்லது. பொலிஸார் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஒரு மிகப் பயங்கரமான சமூக விரோதியின் உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

கதை : தபின்
ஓவியம்: காங்கேயன்

# பூதத் தீவில் புதையல் 8

## இதுவரை...

யாழ்ப்பாணம், நல்லூரிலிருந்து மண்ணித்தலைக்கு பாடசாலை மாணவர்கள் சுற்றுலா செல்கின்றனர். அங்கு ராம், கபீஷ் அனிதா ஆகிய மூன்று மாணவர்கள் பாதை தவறுகின்றனர். அப்போது எதிர்பாராத விதமாக அவர்கள் புதையல் கொள்ளையர்களிடம் சிக்குபடுகின்றனர். இருவர் கடத்தப்பட, கபீஷ் மட்டும் தப்பித்து வந்து ஆசிரியர்களிடம் நடந்ததைச் சொல்ல, ஆசிரியர் தொலைபேசி மூலம் மாயாவிக்கு த்கவல் அனுப்புகிறார், மாணவர்களை மீட்க மாயாவி களத்தில் குதிக்கிறார். கபீஷையும் அழைத்துக்கொண்டு புதையல் கொள்ளையர்களைத் தேடிச் சென்ற மாயாவியை, கொள்ளையர்கள் தாக்கிவிட்டு, கபீஷையும் இழுத்துகொண்டு புதையல் எடுக்க விரைகின்றனர். கொள்ளையர்கள் மாயாவியைக் கட்டி கடலுக்குள் போட்டபோதும், அவர் தப்பித்து கொள்ளையர்களைப் பின் தொடர்கிறார். இனி.........




நீங்களும் எழுதலாம்
• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்
உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?
தொடர்புகளுக்கு
0773165555
எதுவானாலும் அனுப்பி வையுங்கள். தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




(தொடரும்)